READINGS IN TAMIL

PROSE AND POETRY

FIRST SERIES

BY

S. ANAVARATAVINAYAKAM PILLAI, M.A., L.T.,
Lecturer in Tamil, Ceylon University College.

Approved by the Text-Book Committee

(Vide Gazette Part I-B, dated, 21st Oct. 1913, page 562)

MADRAS:
C. COOMARASWAMY NAIDU & SONS
1925

 [Price 8 As.

Madras
Pachiappan College
Rs 2/4 for 8 vols

PRINTED AT
THE 'AURORA PRESS'
MADRAS.

உள்ளுறை

வசனம்

செய்யுள்

வாசக பாடத் திரட்டு

1. கங்கா நதி

இந்த இந்தியா தேசத்தில் சுதேச அரசர்கள் அரசு செலுத்தத் தொடங்கின காலமுதல் நாளது வரையில் அரசாண்ட பல பிரபுக்களும் ஆரியாவர்த்த மென்கிற வட இந்துஸ்தானமே இத்தேசத்து ராஜதானிக்கேற்ற இடமெனத் தேர்ந்தெடுத்தார்களே; அது அத்தனை பெருமைபெற்றிருப்பதற்குக் காரணம் யாதென்கிறீர்கள்? அந் நாட்டில் ஊடுருவிச் சென்று நீர்வளமும் நிலவளமு முண்டாக்கி அதைச் செவ்வையாய்ச் செழிக்கச் செய்திருக்கின்ற கங்காநதி யல்லவா?

2. இந்தப் புண்ணியநதி ஆதியில் இப் பூமிக்கு வந்த வரலாற்றைப் பற்றிய புராணகதை யொன்று உண்டு. முன் இந்தக் கங்கை தேவலோகத்திலிருந்த தென்கிறார்கள். அது இப்பூமிக்கு வந்த விதம் எவ்வாறெனில்: பூர்வம் அயோத்திமா நகரத்தில் சூரிய

வமிசத் தரசனன சகரனென்னும் ஒரு சக்ரவர்த்தி அரசுசெலுத்தி வந்தான். அவனுக்கு இரண்டு மனைவிகள். ஒருத்தியினிடத்திலாவது மக்கட்பேறு உண்டாகவில்லை. அவன் அதற்காக நெடுநாள் தவஞ் செய்ய, கடவுள் அருளினால் மூத்த மனைவியினிடத்தில் அஸமஞ்ச னென்னும் ஒரு கொடிய குமாரனும், இளைய மனைவியி னிடத்தில் அறுபதினாயிரம் பிள்ளைகளும் பிறந்தனர். 'ஓஹோ! இதென்ன பெருங் குடும்பம்' என்று, இதைக் கேட்கையிலேயே உங்களுக்கு வியப்பும் நகைப்பும் உண்டாவதுபோலக் காண்கிறது. இட்டதெல்லாம் பயிராமா, பெற்றதெல்லாம் பிள்ளையாமா! சீக்கிரமே சகர சக்ரவர்த்தி அவ் வறுபதினாயிரம் அருமந்த மக்களையும் இழந்து போயினன். எங்ஙனமெனின், சிலகாலம் கழித்துச் சகர சக்ரவர்த்தி அசுவமேத யாகம் செய்ய முயன்று, அதற்காக அதன் இஷ்டப்படி போய்த் திரிந்துவர ஓர் உயர்ந்த அசுவத்தை விடுத்தனன்; அது எங்கேயோ காணமற் போயிற்று. அதைத் தேடிப் பிடித்து வருவதற்கு அவ் வரசன் தன் அறுபதினாயிரம் மக்களையும் அனுப்ப, அவர்கள் இப் பூலோகம் முழுதும் தேடி இங்கெங்கும் அதனைக் காணாது, பாதாள லோகத்தில் புகுந்து பார்க்கும்படி சகல சராசரங்களும் நடுங்கப் பூமியைத் தோண்டிக்கொண்டு சென்றனர். பாதாள லோகத்தில் தவம் செய்துகொண் டிருந்த கபில மகாமுனியின் அருகில் அப் பரிமா மேய்ந்துகொண் டிருக்கக் கண்டு சாகரர்கள் அவரே அவ் வசுவத்தைக் களவு செய்ததாக நினைத்து அவரை நிந்திக்க, அவர் அதிக கோபங்கொண்டு தமது கோபாக்கினியால் அவ் வறுபதினாயிரம் பிள்ளைகளையும் நீறாக்கினர்.

3. பின்பு அவர்களைத் தேடிக்கொண்டுபோன சகரனுடைய பேரப் பிள்ளையான அம்சுமா னென்பவன் தன் சிற்றப்பன்மார்க ளெல்லாம் பாதாள லோகத்தில் நீறாய்ப்போ யிருப்பதைக் கண்ணுற்றுத் துக்கித்து நின்றான். அப்போது ஆகாயத்தில் கருட பகவான் வந்து, 'தேவலோகத்தி லிருந்து கங்காநதியை வரவழைத்து அதன் நீரால் தர்ப்பணஞ் செய்தா லல்லது இவர்களுக்கு நற்கதி கிடையாது' என்று இனிய குரலாய் உரைத்தார். அது கேட்டு அவன் மிகவும் விசன மடைந்து, தன்னால் கூடிய வரையில் பெருந் தவஞ் செய்து கங்கையை வரவழைக்க முயன்றான்; சாத்தியப்படவில்லை. அப்படியே அவன் காலமும் அவன் மகன் காலமும் சென்ற பிறகு அவனுடைய பேரனை பகீரத மகாராஜன் பல்லாயிரமாண்டு ஒயாது தவம் செய்து பிரமதேவனைப் பிரார்த்திக்க, அவர், 'தேவலோகத்திலிருந்து ஆகாசகங்கை விழும் வேகத்தைப் பொறுக்கத்தக்க வல்லமை பூமிக்கு இல்லையே! அதை ஏற்றுக்கொள்ளச் சிவபிரான் உடன்படுவாராயின், உடனே ஆகாசகங்கை இறங்கிவரக் காத்திருக்கின்றது' என்றார். அது கேட்டுப் பகீரத மகாராஜன் மகாதேவர் பிரத்தியக்ஷமாமாறு பெருந்தவம் செய்ய ஆரம்பித்தான். கருமத்தை முடிக்க முயன்றவன் கஷ்டப்பட்ப் பின் வாங்குவனோ! 'முயற்சியுடையார் இகழ்ச்சியுடையார்' என்றபடி, கடைசியாய் அவனுடைய தபோ பலத்தால் பரமசிவன் பிரத்தியக்ஷமாகி, தேவ கங்கையைத் தமது திருமுடியில் தாங்குவதாகத் திருவுளம் பற்றினார். அது தெரிந்து கங்கையானது, நம்மை வகிக்கவல்லவன் எவனென்று அதிக ஆக்கிரகத்துடன் இறங்க, மகாதேவர் அந் நதியைத் தமது ஜடா மண்-

டலத்தில், பசும்புற்றரையில் வீழ்ந்த பனித்துளி அள-வாய் அடக்கிவிட்டனர். அது கண்டு பகீரதன் நாம் பட்ட பாடு இத்தனையும் விழலுக்கு இறைத்ததாயிற்றே என்று ஏங்கித் திரும்பவும் சிகாதேவரைத் துதிக்க, அவர், வானுளோர் அனைவரும் வியப்புற்று நோக்கும்-படி, ஆகாச கங்கையைத் தமது சடையினின்றும் இமய மலையில் இறக்கினர். பகீரத மகாராஜனும் அந்த நதியைத் தன் தேரின்பின்னேயே வரச்செய்து பாதாள லோகத்திற்குக் கொண்டுபோய் அதன் புண்ணிய தீர்த்-தத்தால் நீறாய்க் கிடந்த தனது அறுபதினாயிரம் மூதாதைகளையும் நனைத்துப் பரிசுத்தப்படுத்தி நற்கதி அடையச் செய்தனன்.

4. இவ்வாறு பகீரதனுடைய தபோபலத்தால் ஆகாயத்தினின்றும் பூமிக்குக் கொண்டு வரப்பட்டது பற்றிக் கங்கைக்கு பாகீரதி எனப் பெயர் வழங்கலா-யிற்று. இத் தேசத்தவர்கள் தமக்கும் தம் இனத்-தார்க்கும் சாகரர்களுக்குக் கிடைத்த சாம்ராஜ்யம் கிடைக்குமெனக் கருதி அந்த மகா நதிக்குத் தீர்த்த யாத்திரை போகின்றனர். மேலும் கங்கா நதியானது சொர்க்கம், பூமி, பாதாளம் என்னும் இம் மூவுலகமும் பரந்து அங்குள்ள பொருள்களைப் புனிதமாக்குவதனால், திரிபதகை எனவும் அதற்குப் பெயர் வழங்குகின்றது.

5. இப்போது அந்தக் கங்கையானது இமய மலை-யின் தென்புறத்தில் பிந்து ஸரஸினின்றும் பெருகி-வந்து, கடல்நீர் மட்டத்துக்கு ஆயிரம் அடி உயரத்தில் ஹரித்துவாரத்தண்டை பூமியிற் பிரவேசித்து, பிர-யாகை, காசி, பாடலிபுரம், கல்கத்தா [காளீகட்டம்] முதலிய பட்டணங்களின் வழியாய்த் தென் கீழ்த்-

திசை நோக்கிச் சென்று வங்காளக் குடாக்கடலில் அநேக முகமாய்ச் சங்கமமாகின்றது. அந்த நதி பூமி-யிற் பிரவேசிக்குமிடமாயும் படவின் போக்குவரவுக்குக் கடை யெல்லையாயும் இருக்கின்ற ஹரித்துவாரம், கங்கையோடு யமுனுநதி சேருமிடமான அலகாபாந்து அல்லது பிரயாகை, சிறந்த புண்ணிய க்ஷேத்திரமான காசி, இப்படிப்பட்ட ஸ்தலங்களை யாத்திரை போகும் இந்துக்கள் கங்காதீரத்திலுள்ள மற்ற இடங்களினும் மேலாகக் கொண்டாடுகின்றனர்.

2. நல்ல சகவாசம்

ஒருவனிடத்துக் காணப்படும் வாடிக்கைகளும் கொள்கைகளும் ஏற்பாடுகளும் அநேகமாய் அவன் செய்கின்ற சகவாசத்தினால் உண்டாகின்றனவே யல்லாமல், பிறக்கும்போதே கூடத்தோன்றியவை யல்ல. சுபாவம் அல்லது இயற்கை என்று ஒன்றிருந்த போதிலும், ஒருவனுடைய நடவடிக்கைகள் காரியா காரியங்கள் அனைத்திற்கும் அது காரணமாக மாட்டாது. அப்பியாசத்தினாலும் சகவாசத்தினாலுமே அவைகளுள் அநேகம் உண்டாகின்றன. எவர்களோடு ஒருவன் நாடோறும் பேசிக் கூடி வாழ்கிறானோ, அவர்களுடைய நடவடிக்கைகளே அவனுக்கும் படியும். அவன் வேண்டுமென்று முயற்சி செய்து அவற்றைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. அவை அவன் இச்சை யின்றித் தாமாகவே படிந்துபோம். அப்படிப் படிந்து போய் நிலைபெற்ற பிறகு, அவற்றை ஒழித்துவிடக் கருதினாலும் ஒழித்து விடுவது யாருக்கும் எளிதான காரியமன்று. நல்லொழுக்கங்கள் படிந்தால்தான் நலமாகிறது; கெட்டவை படிந்தால் என்ன செய்கிறது! இக் கெட்ட ஒழுக்கங்களிடத்தில் அவ்வளவு அச்சம் ஏனெனில், பிறகு அவற்றை நீக்கத்தக்க பரிகார மில்லாததினாலேதான். ஆகவே, கெட்ட நடத்தைகள் முதலே நெருங்க வொட்டாமல் ஜாக்கிரதையா யிருப்பது எவ்வளவு அவசியம். சற்சகவாசத்தினால் சன்மார்க்கமும், அற்ப சகவாசத்தினால் துர்நடத்தையும் படியுமாதலால், பின்னதை ஒழித்து முன்னதைக் கைக்-

கொள்ள வேண்டும். நல்ல சகவாசம் எந்த விஷயத்தில் நல்லதாயிருக்க வேண்டுமென்றுலோ, அது அடியில் வரும் கதையினுல் விளங்கும்.

2. சுந்தரரென்பவர் ஒருவர் கலியாணம் என்னும் தம் பிள்ளையை வித்தியாசாலேக்கு அனுப்பும்போது, 'நல்ல சகவாசம் பண்ணு' என்று சொல்லி அனுப்பினுர். முத்து என்னும் மற்றொருவரும் தம் குமாரனுகிய மணி என்பவனே வேலே கற்றுக்கொள்ள அனுப்பும்போது, 'சற்சகவாசத்தையே தேடு' என்று புத்தி சொல்லி அனுப்பினுர். இப்படிப் புத்தி சொன்னவர்களிருவரும் ஒரே கருத்தைக்கொண்டு சொன்னுர்களென்று தோன்றுமே யல்லாமல், வெவ்வேறு அபிப்பிராயங் கொண்டு சொன்னுர்களென்று யார் நினேப்பர்? ஆனுல், உண்மை அப்படியன்று; சற்சகவாசம் என்பதனுல் சுந்தரர் கருதியது என்னவெனில், தம்மைவிட ஐசுவரியத்திலும் அந்தஸ்திலும் மேலானவர்களுடைய சிநேகம். தனவான்களேயும் அதிகாரஸ்தர்களேயும் ஒருவன் சினேகராகக் கொண்டிருந்தால், அவர்கள் தங்களால் கூடியமட்டும் உதவிசெய்து அவனே நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவருவார்களாகையால், சினேகத்தினுல் திரவிய லாபத்தையே கோருகிறவர்களில் ஒருவராகிய சுந்தரரென்பவர் இருக்குமிடந் தெரியாத ஏழைகளேயும் ஈன ஸ்திதியிலுள்ளவர்களேயும் சிநேகிப்பது கவுரவக் குறைவென்றும், அதனுல் எவ்வளவேனும் பயனில்லேயென்றும் எண்ணி, சமயத்தில் ஒத்தாசை செய்யத்தக்க பெரிய மனிதர்களேச் சிநேகம்பண்ணு என்று தம் பிள்ளேக்குப் புத்தி சொல்லி வைத்தார்.

3. இதற்கு மாறாக முத்து என்பவரோ, யாரைச் சிநேகித்தால் நல்லறிவும் நல்லொழுக்கமும் ஜீவகாருண்யமும் உண்டாகுமோ அவர்களுடன் பழகுவதே நல்ல சக்வாசம் என்றெண்ணி யிருந்தார். இக்குணங்கள் எவரிடத்தில் காணப்படுகின்றனவோ, அவர் பணக்காரராலும் சரி, சோற்றுக்குக் கதியில்லாதவராலும் சரி, அவரே மேலான சிநேகிதரென்பது அவருடைய அபிப்பிராயம். அவர் சுந்தரத்தைப்போல் பணத்தால் சிநேகத்தை அளவிடாமல், யோக்கியதையை நாடி, நல்ல சகவாசம் இது என்றும் கெட்ட சகவாசம் இது என்றும் அறிந்து கொண்டு, நீதிகள் தங்கிய நன்மை யுடையோரைச் சிநேகியென்று தம் பிள்ளைக்குப் புத்தி கூறியிருந்தார்.

4. அவ்விரு பிள்ளைகளும் தத்தம் தகப்பன்மார் மனோபாவத்தை அனுசரித்து நடந்து வந்தார்கள். கலியாண மென்பவன் வித்தியாசாலையைச் சேர்ந்தது முதல் பிரபுக்களின் பிள்ளைகளை அடுத்து, அவர்களுக்கு முகம் கோணாமல் நடந்து, அவர்களுடன் விளையாடுவதும் வேடிக்கை அநுபவிப்பதுமா யிருந்தான். அவர்கள் அவனைச் சமானஸ்தன் அல்லனென்று அலக்ஷியம் பண்ணி அவமதித்தும், அவர்களால் பின்னால் கிடைக்கப் போகிறதென்று அவன் எண்ணியிருந்த லாபத்தை நினைத்து, அதனை யெல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்களுக்குத் தக்கபடி நடந்து வந்தான். படிப்பின்மேல் கவலையா யிராமல் அப்போதைக் கப்போது தன் தகப்பனார் அனுப்பிக் கொண் டிருந்த பணத்தை அவர்களுடன் பந்தயம் வைத்து ஆடி அநியாயமாய்ச் செலவழித்து விட்டான். ஆட்டத்தில் தோற்றுத் தோற்று வெகு பணம் நஷ்ட-

மாய் விட்டது; பிறகு, அவனுக்குப் பணம் அனுப்பத் தகப்பனுருக்கும் சக்தியில்லாமற் போயிற்று. இப்படிச் சங்கடப்பட்டுக்கொண் டிருக்கையில் அவர் இறந்து போகவே, அவனுடைய கஷ்டங்கள் அதிகமாய் விட்டன. தன் வயிற்றுக்குக்கூடச் சம்பாதிக்கத்திறமையற்றவனுய், அந்தப் பிரபுக்களிடத்திலேயே போய் ஊழியக்காரன்போல் அவர்கள் சொற்படி நடந்து, எல்லாராலும் அவமதிக்கப்பட்டு அவமானப் பிழைப்புப் பிழைத்தான்.

5. மணி என்பவன் தான் எந்த வேலைக்காக நியமிக்கப்பட்டானே, அதனை ஊக்கமாய்க் கற்றுக்கொண்டு தேர்ச்சி யடையும் பொருட்டு அதில் சோர்வின்றிப் பயின்று வந்தான். ஒழிந்த வேளைகளில் தனக்குச் சரிசமானரானவர்களில் விவேகமும் நல்லொழுக்கமும் அமைந்த சிலரோடு சம்பாஷித்து வந்து நாளாவர்த்தியில் அவர்களைச் சிநேகராக்கிக் கொண்டான். அவர்களும் தன்மேல் பிரியமுள்ளவர்களா யிருப்பதறிந்து, அவன் ஒவ்வொருவ ரிடத்திலும் அவரவர் தொழிலுக்குரிய விஷயங்களில் உபயோகமானவற்றைக் கிரகித்துப் பற்பல விஷயங்களிலும் போதுமான ஞானமுள்ளவனுனன். இப்படி யிருக்க, கலியாணத்துக்குச் சம்பவித்தது போல அவனுக்கும் தகப்பனுர் இறந்துபோனுர். ஆகிலும், அதனுல் மனந்தளராமல் தன் சிநேகிதர்களில் ஒருவனேடு கூட்டு வியாப்பாரம் பண்ணித் தன்னுடைய சாமர்த்தியத்தினுல் அதனை அபிவிருத்தி பண்ணுவித்து, அவனுக்கும் லாபத்தைக்காட்டித் தானும் சௌக்கியமாய் அடிநாள் தோழரைவிட்டுப் பிரியாமல் வாழ்ந்திருந்தான்.

3. ரஷிய சக்ரவர்த்தியும் குடியானவனும்

பதினாறுவது சகாப்தத்தின் நடுவில் ரஷியதேசத்தில் அரசாண்ட இவான் என்னும் சக்கரவர்த்தியானவர், தம்து குடிகளினுடைய ஸ்திதியைத் தாம் அறிந்து கொள்ளக் கருதி மாறுவேஷம் பூண்டு அடிக்கடி வெளியேபோய்ப் பார்ப்பதுண்டு.

2. ஒருநாள் மாஸ்கோ நகரத்துக்கருகில் தனிமையாய் உலாவும்போது ஒரு சிறு கிராமத்திற்குட் சென்று, களேயினல் வருந்துபவர்போலப் பாவனை காட்டி, அக் கிராமத்துக் குடிகளில் அநேகரை உபகாரஞ் செய்யும்படி கெஞ்சினர். அவர் உடை கந்தையாயும், அவர் தோற்றம் அலங்கோலமாயும் இருந்தமையால், பார்த்த ஜனங்கள் அவர்மேல் இரக்கங் கொள்ளாமல், கடுகடுத்து அவரைத் துரத்தினார்கள்.

3. இந்தக் கொடுமையைப்பற்றி அவர் மிகக் கோபங்கொண்டு கிராமத்தைவிட்டு நீங்கி வெளியே போகுந் தருணத்தில், தாம் முன்போய் யாசியாத ஓர் இல்லத்தைக் கண்டார். அவ் வில்லம் அவ் வூரிலுள்ளவர்களெல்லாரினும் அதிக தரித்திரனாகிய ஒருவனுடைய குடிசை. சக்ரவர்த்தி அக் குடிசைக்கு விரைந்தோடிக் கதவைத் தட்டினர். உள்ளிருந்த குடியானவன் வந்து கதவைத் திறந்து என்னவேண்டும் என்று கேட்டான். அதற்கு அவர், 'உணவில்லாமல் பசிக் களேயினல் சாதடைக்கின்றது ; இராத்திரி இளைப்-

பாறும்படி எனக்கு இடங் கொடுக்க மாட்டுவாயா ?' என்றார். அப்பொழுது அந்தக் குடியானவன், 'ஐயோ ! என்னிடத்தில் விசேஷமாய் ஒன்றும் இல்லையே ; நீர் தருணமல்லாத தருணத்தில் வந்தீரே ; என் மனைவியும் அசௌக்கியமா யிருக்கிறாள் ; ஆயினும் உள்ளே வாரும் ; குளிருக்காவது ஒதுங்கியிருப்பீர் ; எங்களிடத்திலுள்ளதை உமக்கும் பகிர்ந்து கொடுக்கிறோம்' என்று சொல்லி ஒரு சிறு அறைக்குள்ளே அழைத்துக்கொண்டு போனான். அந்த அறையில் குழந்தைகள் நிரம்பி யிருந்தன. ஒரு தொட்டிலில் இரண்டு குழந்தைகள் நல்ல நித்திரை செய்துகொண் டிருந்தன. தொட்டிலுக் கருகில் மூன்று வயதுள்ள ஒரு பெண் குழந்தை, ஒரு சிறிய கம்பளியில் தூங்கிக்கொண் டிருந்தது. அக் குடியானவன், 'இங்கே இரும் ; உம்முடைய போசனத்துக்கு ஏதாகிலும் சம்பாதித்து வருகிறேன்' என்று சக்ரவர்த்திக்குச் சொல்லிவிட்டு வெளியேபோய்ச் சற்று நேரத்திற்குள் சில தவிட்டு ரொட்டியும், முட்டைகளும், தேனும் கொண்டுவந்து, 'இதுதான் என்னுடைய நிர்வாகத்துக்குத் தகுந்த சாப்பாடு ; இதனை என் குழந்தைகளோடு நீரும் சாப்பிடும் ; நான் என் மனைவியைப் போய்ப் பார்க்க வேண்டும்' என்று சொல்லிப் போய்விட்டான்.

4. அந்தக் குடியானவன் பக்கத் தறையிலிருந்த தன் மனைவியிடத்திற்குப் போய்ச் சற்று நேரத்திற்குள் மறுநாட் காலமே நாமகரணஞ் செய்யப்போகிற ஒரு குழந்தையைக் கையி லேந்திக்கொண்டு வந்தான். சக்ரவர்த்தி அக் குழந்தையைத் தம் கையில் வாங்கிக் கொண்டு, 'இந்தக் குழந்தையைப் பார்த்தால் அதிர்ஷ்ட

முள்ளவனுவான் என்பதற்குச் சந்தேகமே இல்லை' என்றூர். இந்த ஆரூடத்தைக் கேட்டுக் குடியானவன் புன்னகை செய்தான். அத் தருணத்தில் அவனுடைய இரண்டு பெரிய பெண்களும் தாங்கள் சயனிக்கப் போகுமுன் குழந்தைக்கு முத்தமிட வந்தார்கள்; அவர்களுடைய பாட்டி வந்து குழந்தையை யெடுத்துக்கொண்டு போகவே, அப் பெண்களும் கூடப்போனூர்கள். வீட்டுக்காரன் ஒரு வைக்கோற் படுக்கையின்மேல் படுத்துக்கொண்டு விருந்தாளியை மற்றூர் வைக்கோற் படுக்கையின் மீது சயனிக்கச் சொல்லிவிட்டு உடனே அயர்ந்து நித்திரை போனூன்.

5. குடியானவன் விடியற்காலத்தில் எழுந்தபோது விருந்தாளி அவனைப் பார்த்து, 'ஐயா! நான் மாஸ்கோ நகரத்திற்குத் திரும்பிப் போகவேண்டும்; அவ்விடத்தில் தர்மகுணமுள்ள இஷ்டர் ஒருவர் இருக்கிறூர்; அவரிடத்தில் நீர் பக்ஷத்துடன் எனக்குச் செய்த உபசாணைகளைச் சொல்லி, உம்முடைய குழந்தையின் நாமகரணத்துக்கு அவரை ஞானத்தந்தையாக ஒத்துக்கொள்ளும்படி என்னுற் செய்யக்கூடும்; இன்னும் மூன்று மணிக்குள்ளாக நான் போய் மீண்டு வருகிறேன்; நாமகரணம் செய்கையில் நானும் இருக்கும்பொருட்டு எனக்காகக் காத்திருக்கவேண்டும்' என்றூர். அக் குடியானவன் அப் பெரு வார்த்தையை நம்பாவிடினும் நல்ல மனமுடையவனுதலால் அவர் கேட்டுக்கொண்டபடியே காத்திருக்கச் சம்மதித்தான்.

6. சக்ரவர்த்தி புறப்பட்டுப் போய்விட்ட பிறகு மூன்று மணிநேரம் காத்திருந்தும் ஒருவரும் வாராததினுல் குடியானவன் தன் பெண்டு பிள்ளைகளோடு

குழந்தையை ஆலயத்திற்குக் கொண்டுபோகப் பிரயத்தனப்பட்டுக் குடிசையிலிருந்து புறப்படப் போகுஞ் சமயத்தில், திடீரென்று குதிரைகளின் காலடிச் சத்தமும் பல வண்டிகள் வருகிற சத்தமுங் கேட்டு, சக்ரவர்த்தி பரிவாரத்துடன் வருகிற ஆரவாரமென்று தெரிந்துகொண்டு, அவர் தங்கள் வீட்டு வழியாகப் போகிறதைப் பார்க்கும்படி உடனே தன் மனைவி மக்களை அழைத்தான். எல்லாரும் அதிக ஆத்திரத்தோடு ஓடிவந்து வாசற்படியில் நின்றார்கள்.

7. துரகங்களும், காலாட்களும், வண்டிகளும் சூழச் சக்ரவர்த்தியினுடைய ரதம் குடியானவன் தலைவாயிலுக்கு எதிரில் நின்றது. சக்ரவர்த்தி ரதத்தினின்று மிறங்கித் தமக்குப் போசனமளித்த குடியானவனுக்கு முன் நின்று, 'உமது குழந்தைக்கு ஞானத் தந்தை யாகும்பொருட்டு ஒருவனை அழைத்து வருவதாக வாக்குக் கொடுத்தேனல்லவா; அந்த வாக்கை நிறைவேற்றும்பொருட்டு இதோ நானே வந்தேன்; உமது குழந்தையை என் கையிற் கொடுத்து என்னோடு ஆலயத்திற்கு வாரும்' என்றார். குடியானவன் சக்ரவர்த்தியைப் பார்த்துப் பிரமித்து, ஒரு பிரதிமைபோல் அசைவற்று நின்றான். சக்ரவர்த்தி யணிந்திருந்த ஆடையாபரணங்களால் அவர் முதனாளிராத்திரி வைக்கோற் படுக்கையில் தன்னோடு படுத்திருந்தவர் என்று குடியானவனுக்கு தெரியவேயில்லை.

8. சக்ரவர்த்தி மௌனமாயிருந்து, குடியானவன் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நிற்பதைச் சிறிது பொழுது பார்த்துப் புன்னகை கொண்டு, அவனை நோக்கி, 'நேற்று நீர் இரப்பேர்க் கேவதாகிய மானிட

தர்மத்தைச் செய்தீர்; இன்று நான் புண்ணியவான்-களுக்குக் கைம்மாறு செய்ய வேண்டிய அரச தர்-மத்தைச் செலுத்தி ஆனந்த மடையும் பொருட்டு வந்தேன். இனி உமது குழந்தையை நான் காப்-பாற்றுவேன். அவன் அதிர்ஷ்டசாலி யாவான் என்று நான் ஆரூடம் சொன்னது ஞாபகமில்லையா?' என்றார்.

9. அந்த உத்தமக் குடியானவனுக்கு அதன் பின்புதான் காரிய மின்னதென்று புலப்பட்டது. அவன் கண்களில் ஆனந்த பாஷ்பம் சொரிய, உடனே வீட்-டிற்குள் நுழைந்து குழந்தையை எடுத்துக் கொண்டு-வந்து பயபக்தியுடன் சக்ரவர்த்தியின் பாதங்களில் வைத்தான். அதிசிரேஷ்டராகிய நரபதியானவர் அப் பாலகனைக் கையில் ஏந்திக்கொண்டு கோயிலுக்குப் போனார்.

10. பிறகு அந்தச் சக்ரவர்த்தி அச் சிறுவனைத் தம் அரண்மனைக்குக் கொண்டுபோய்க் கல்வி பயிற்று-வித்து, அவனுக்கு வேண்டியவற்றை யெல்லாங் கொடுத்து, முன் தாம் சொன்ன வாக்கை நிறை-வேற்றினது மல்லாமல், புண்ணியசாலியாகிய அவன் தந்தைக்கும் அவன் குடும்பத்திற்கும் அபரிமிதமாகத் திரவியம் கொடுத்து அவர்களைக் காப்பாற்றி வந்தார்.

4. முட் பன்றி

முட் பன்றி ஆப்ரிக்கா கண்டத்திலும், ஆசியாவின் கீழ்ப் பாகங்களிலும், இந்தியாவிலும் விசேஷமாகக் காணப்படுகிறது. ஐரோப்பாவிலுள்ள சில தென்னாடு-களிலும் அதனைக் காணலாம்.

2. முட் பன்றி ஆச்சரியமான தோற்ற முள்ளது. சோதிரம்போல் வளைந்திருக்கிற வெண்மையும் கரு-மையுமான வரைகளுள்ள முட்கள் அதன் சரீரத்தின் மேற்பாகங்களை மூடியிருக்கும். பன்றி முள் பட்சி-களின் இறகுகள்போல் அதன் சரீரத்தில் முளைத்து வளரும். முள்ளின் இடை பருத்து, அடியும் தலையும் படிப்படியாகச் சிறுத்திருக்கும். அதன் தலைமுனை முட் போலக் கூர்மையா யிருக்கும். சாதாரணமாய்ப் பன்றி முட்கள் புறவளைவுள்ளவைகளா யிருக்கும். முட் பன்றிக்குக் கோபம் உண்டாகும் பொழுதோ முட்-களின் கூர்முனைகள் எல்லாம் நான்கு திக்கையும் நோக்கி யிருக்கும்படி நிமிர்ந்திருக்கும்.

3. முட் பன்றி பகைவர்மேல் தன் முட்களைப் பிர்யோகிக்கிறது என்பதாகச் சொல்லப்படும் கதை நகைப்புக்கு இடமா யிருக்கிறதே யொழிய, அதிற் சிறிதும் உண்மையில்லை. அதன் முட்கள் பகைவரை வருத்துவதற்கல்ல; முக்கியமாய் அதனைக் காத்துக்

கொள்வதற்கே கடவுள் கொடுத்திருப்பதாகக் காணப்படும். அது தானாகச் சண்டை தொடங்குவது அருமை; அதனோடு பகைவர் எதிர்த்தால், அது தன் முட்களை எத்திசையிலும் பரப்பிக்கொண்டு நிற்கும். அப்பொழுது அதன்மேல் நெருங்கி விழுவது கடினம். முட் பன்றியும் பாம்பும் ஒன்றுக்கொன்று பிராணவைரிகள். எதிர்ப்படும் பொழுதெல்லாம் அவைகளுக்குட் சண்டை நேரிடும். சண்டை நடக்கும் சமயங்களில் முட் பன்றி பாம்பின்மீது உருண்டு புரண்டு அதனை நாசப்படுத்தும். ஆயினும் அதன் சாதாரண குணங்களைப் பார்க்குமிடத்தில், அது கோழைத்தன்மையும் நிர்விக்கினமு முள்ள மிருக மென்று அறியலாம். அதனை நாய்களாவது மற்ற மிருகங்களாவது தொடர்ந்தால், அது மரங்களில் ஏறியும், புற்றுகளில் நுழைந்தும் தன்னைத் தொடர்ந்த பகை மிருகங்கள் சலிப்புற்றுத் திரும்புகிற வரையில் அங்கே தங்கியிருக்கும்.

4. முட் பன்றி ஏகாந்தமாய் உலாவித் திரியும் குணமுள்ளது. அது பகல் முழுதும் தன் குழியின் அடியில் பதுங்கியிருக்கும்; இராத்திரி காலத்தில் வெளிப்பட்டு இரை தேடும். அது தன் குழியைப் பல அறைகளும் ஒரே வாயிலு முள்ளதாகச் செய்திருக்கும். முட் பன்றி முக்கியமாய்க் காய், கிழங்கு, மரப்பட்டை முதலானவைகளைத் தின்பதினால் தோட்டங்களுக்குச் சேதம் உண்டாக்கும்.

5. பெரும்பாலும் முட் பன்றி ஈற்று ஒன்றுக்கு இரண்டு குட்டி போடும்; அது தன் குட்டிகள் விரகு அறியுமட்டும் அவைகளுக்குப் பால் ஊட்டி வளர்க்கும்.

6. சில வேளை வேட்டைக்காரர் மாமிசத்திற்காக முட் பன்றிகளை வேட்டையாடிக் கொல்வதுண்டு; ஆகிலும், மாமிசமல்ல, அவற்றின் முட்களே மிகுந்த உபயோகமானவை. அவை விசேஷமாய் வேலைப்பாடுகளைச் சிறப்பிக்கும் கருவிகளாகப் பிரயோகிக்கப்படும். அவை தையற்பெட்டி, கூடை முதலானவைகளை அலங்கரிக்கிறதற்கு உபயோகமாகின்றன. அவ்வித வேலைப்பாடுகளில் கருமையும் வெண்மையும் அடுக்கடுக்காய்க் கலந்து தோன்றுவதினால், அவைகள் கண்ணுக்கு அழகாயிருக்கும்.

5. அபூர்வ சிநேகம்

ஸிஸிலித்தீவின் புராதன ராஜதானியாகிய ஸைரக்கியூஸை ஆண்டுகொண்டிருந்த தியோனிஸியஸ் என்னும் கொடுங்கோன் மன்னன் ஒரு காலத்தில் தாமன் என்னும் தத்துவ சாஸ்திரியை மரண தண்டனை அடையும்படி தீர்ப்புச் செய்தான்; அத் தண்டனையை அவன் பெறுவதற்கு ஒரு நாளும் குறிக்கப்பட்டது. தாமன் நெடுந்தூரத்தி லிருக்கும் தன் மனைவி மக்களைப் போய்ப் பார்த்து வரும்படி மாத்திரம் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், குறித்த நாளில் தண்டனையைப் பெறுதற்குத் தவறாமல் வந்து சேருவேனென்றும், அரசனுக்கு மனுப் பண்ணிக் கொண்டான்.

2. அதற்குத் தியோனிஸியஸ், குறித்த தினத்தில் நீ திரும்பிவந்து சேராமற்போனால் உனக்கு விதித்திருக்கும் மரண தண்டனையை ஏற்றுக்கொள்ள யாராவது உடன்படுவார்களாகில் அனுமதி கொடுக்கப்படுமென்று சொன்னான். இது நடவாத காரிய மென்று தோன்றினபடியால் தாமன் தன் பெண்டு பிள்ளைகளைப் பார்க்கும் ஆசையை விட்டு விட்டான்.

3. தாமனுடைய சிநேகனாகிய பிதியஸ் என்னும் ஒருவன் இச் செய்தியைக் கேள்விப்பட்டு, அவனுக்குத் தெரியாமலே தன் தோழனுக்காகத் தான் பிணையாக விருக்கிறதாய் அரசனுக்குத் தெரிவித்தான். அரசனும்

பிதியஸைப் பிணையாக ஒப்புக்கொண்டு அவனைச் சிறையில் வைத்துத் தாமனை விடுதலை செய்தான்.

4. பலபல தடைகளினால் குறித்த தவணையில் தாமன் வந்து சேரக்கூடாமற் போயிற்று. தண்டனை பெறவேண்டிய தினத்தில் சூரியோதயமாகியும் அவன் வரவில்லை.

5. குறித்த தினம் சமீபித்தபோது அரசன், சொன்னபடி திரும்பிவரத் தவறிப்போன ஒரு மனிதனுக்குப் பிணையாக விருக்க ஏற்றுக் கொண்ட பேதையாகிய பிதியஸை நேரிற்கண்டு அவனுடைய மன நிலையை நிதானிக்கும் பொருட்டு, சிறைச்சாலைக்குட் சென்றான். அப்போது அக் குணசீலனாகிய பிதியஸ் சிறிதேனும் மனங் கலங்காமல், தன்னைவிட அதிக லோகோபகாரியாகிய ஒரு மனிதனுடைய பிராணனைக் காப்பாற்றப் போகிறோமே என்கிற சந்தோஷத்தினால் தன் உயிரை மாய்த்து விடுவதற்குத் துணிந்திருந்தது மல்லாமல், எதிர் காற்றினால் தன் சிநேகன் வந்து சேராமலே இருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தான்.

6. குறித்த நாழிகையில் பிதியஸைக் கொலைக் களத்துக்குக் கொலையாளிகள் கொண்டு போனார்கள். இந்த வேடிக்கையைப் பார்க்கும் பொருட்டு அரசனும் வந்து நின்றான். அப்போது பிதியஸ் சுற்றி நின்றவர்களைப் பார்த்து, 'என் பிராண சிநேகிதனாகிய தாமன் சீக்கிரத்தில் வந்து சேருவான்; அவன் வருவதற்கு முன்னே நான் மரண தண்டனையைப் பெற்று, பெண்டு பிள்ளைகளுக்கும், சிநேகர்களுக்கும், தேசத்தார்களுக்-

கும், அதிக பிரயோஜனகாரியாகிய அவனுடைய பிராணனைக் காப்பாற்றும்படி கடவுள் அனுக்கிரகிப்பா-ராக; பல நாளாக மாறாமல் எதிர்காற்று ஒரே முகமாக அடித்தபடியால் அவன் சொன்னபடி வந்து சேரக் கூடாமற் போயிற்று. இதை யோசித்துப் பார்ப்பீர்க-ளாகில் அவன்மேற் குற்றமில்லை யென்று தெரிந்து கொள்ளுவீர்கள்; நேற்று முதல் காற்று மாறி யடிக்-கிறபடியால் தாமன் சீக்கிரத்தில் வந்து சேருவான்' என்று சொல்லிக் கொலையாளிகளைத் தங்கள் தொழி-லைச் சீக்கிரத்தில் செய்து முடிக்கும்படி கேட்டுக் கொண்டான்.

7. அத் தருணத்தில் 'நிறுத்துங்கள், நிறுத்துங்-கள், தூக்குவதை நிறுத்துங்கள்' என்கிற சத்தம் ஒன்று ஜனக்கூட்டத்திற் பிறந்தது.

8. ஜனங்களும் அப்படியே எல்லாப் பக்கங்களிலு மிருந்து கூவினார்கள். தாமன் வந்து விட்டான், வந்த வேகத்தினால் அவன் ஏறிவந்த குதிரையின் சரீரமா-னது வியர்த்து நுரைத்து வேர்வையில் மூழ்கி யிருக்-கது. தாமன் குதிரையினின்று குதித்து ஒரு தாண்-டில் தூக்கு மேடையின்மேலேறி, 'அன்பனே, நான் வந்துவிட்டேன்; இனி நீ பயப்பட வேண்டியதில்லை; உன்னைக் காப்பாற்றினதினால் எனக்குச் சந்தோஷமா யிருக்கிறது' என்று கூவினான்; அதற்கு மேலும் அதிகமாகச் சொல்ல அச் சமயத்தில் அசக்தனாக விருந்தான்.

9. இதுவரையில் ஒரு விஷயத்திலும் இரங்காத கொடிய தியோனிஸியஸ் இவ் விரண்டு சிநேகிதர்க-

ளுடைய நடக்கைகளையும் பார்த்து மனமிரங்கி, நன்மை செய்யத் துணிந்து, சிங்காசனத்திலிருந் திறங்கித் தூக்கு மேடையின்மே லேறி, 'ஒப்பற்ற அற்புத சிநேகிதர்களே, நீங்க ளிருவரும் இன்னும் ஜீவித்திருந்து, இப்படிப்பட்ட சிநேகத் தன்மையைக் கண்டு என் மனம் திருந்தி உங்கள் ஒழுக்கத்தைப் பின்பற்றும்படி வாழ்ந்துகொண் டிருங்கள்' என்றான்.

6. ஸ்ரீரங்கபட்டணம்

பெங்களூருக்கு அருகிலுள்ள அங்கிலேயப் படைநிலைக்கு எழுபத்தெட்டுமைல் தூரத்தில் காவிரியாற்றினால் நாற்புறமும் சூழப்பட்ட ஒரு தீவிலே, முன்னொருகாலத்தில் மிகப் பெருமையும் பிரசித்தியும் பெற்றிருந்த ஸ்ரீரங்கபட்டணத்து கோட்டையானது, நாளைக்கும் பல பிரயாணிகளுக்குப் புதுமையான காட்சியளிக்கின்றது. அக் கோட்டை மைசூர் நகரத்திலிருந்து கொஞ்சங் குறையக் காததூரத்தி லுள்ளது. வெளிப்புறத்தினின்று பார்ப்பவர்களுக்கு அக் கோட்டை; முன் 1799௵ மே௴ 4௳ காலையில் அதனை முற்றுகை போட்டிருந்த ஜெனரல் ஹாரிஸ் என்னும் சேனாதிபதியால் செலுத்தப்பட்ட சேனைகட்கு எவ்விதமாய்க் காணப்பட்டதோ, அவ்விதமே இன்றும் காணப்படுகின்றது. மிகப் பிரசித்தமான அந்நாளில் அந்தச் சேனை அக் கோட்டைக்குள் புகுந்த சிறுவழி இன்னும் அப்படியே அங்கிலேயருடைய பாராக்கிரமத்திற்கு ஒரு வெற்றிக்கொடிபோலப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அக் கோட்டை மதிற் சுவர்களில் முன்போலப் பீரங்கிகள் ஏற்றப்பட்டிருக்கவில்லை யென்ற குறை யொன்றேயொழிய மற்றப்படி அது மாறுபாடின்றி முற்காலத்திலிருந்த நிலையிலேயே நிற்கின்றது. தனது இளமையிலும் யௌவனத்திலும் இத் தென்னிந்தியா முழுதும் அஞ்சி நடுங்கத்தக்க நிலையிலிருந்து, இப்போது அவ்

வாண்மை அத்தனையும் அடங்கி, மேனாட்டுத் தீவிலிருந்து வந்து ஜயங் கொண்டவர்க்குத் தொண்டுபூண்டிருக்கும் அக் கோட்டையைப் பார்க்கையில், கண்ணுங் கெட்டுக் கைப்படையும் போய்த் தவிக்கும் ஒரு கொடிய ராட்சதன்போலத் தோன்றுகின்றது.

2. இவ் வண்ணம் ஸ்ரீரங்கபட்டணத்துக் கோட்டையின் பெருமை இக்காலத்திலும் வியக்கத் தக்கதாயிருக்கின்றது. அது பற்பல புதிய மாறுபாடுகளையும் கண்டிருக்கின்றது. ஒருவகையில் நோக்குங்கால் அக் கோட்டையின் சரித்திரம் இந்து தேசத்தின் வரலாறுகள் அனைத்தையும் ஒருவாறு விளக்கும். ஆதியில், அது இந்துக்களால் ஆளப்பட்டு, பிறகு மகம்மதியர்களாலும் மகாராஷ்டிரர்களாலும் அச்ச முறுத்தப்பட்டுச் சில்நாள் இத் தென்னிந்தியாவில் மகம்மதியருடைய முக்கிய ராஜதானியா யிருந்து, கடைசியில் இம்மூவரையும் அடக்கிய மேலதிகாரிகட்கு அடிமையாயிற்று. இவர்களுள் ஒவ்வொருவருடைய அரசாட்சிக் காலத்துச் சரித்திரமும் மாட்சிமை யுடையதாகும். அவற்றுள் அங்கிலேயருடைய ஆட்சியின் சரித்திரம் முழுதும் மிகச் சிறப்புப்பெற் றிருக்கின்றது. ஸ்ரீரங்கபட்டணத்தையே ராஜதானியாகக் கொண்டு அந் நாட்டையாண்ட ஒரு வீரன் சென்னைக் கோட்டை வாயிலில் வந்து அங்கிலேயருடன் சமாதான வுடம்படிக்கை பேசி ஒரு நூற்றாண்டுதான் கழிந்தது. அது நடந்த இருபது வருஷ காலத்திலேயே இவ்விந்து தேசத்து மிகச் சமர்த்தர்களான கவர்னர் ஜனரல்கள் அக் கோட்டையை முற்றுங் கீழ்ப்படுத்தினாலல்லது அங்கிலேயருக்கு இத்தேசத்தில் உயர்வு கிடைக்கமாட்டாதென நினைத்து, அவ்வண்ணமே செய்து, இத் தென்னிந்தி-

யாவில் தமக்கு எதிரி எவரும் தோன்றா வண்ணம் செய்துகொண்டனர்.

3. இந்த ஸ்ரீரங்கபட்டணம் காவிரியாறு இரண்டு கிளையாகப் பிரிந்து சூழ்ந்துகொண்ட ஒரு தீவிலிருக்கின்றது. அது ஏறக்குறைய மூன்றரைமைல் நீளமும் மிகவும் அகன்ற இடமான மத்திய பாகத்தில் ஒன்றரைமைல் அகலமும் உடையது. அக் கோட்டை இரண்டாயிரம் சதுரகஜம் பரப்புள்ளது. காவிரியாறு அக் கோட்டையை மேற்கிலும் வடக்கிலும் மிக நெருங்கிச் சூழ்ந்துகொண்டு அதற்கு ஓர் உத்தமமான அகழ்போல விளங்குகின்றது. ஜூன் மாதம் தொடங்கி நவம்பர் மாதம் வரையில் அவ்விடத்தில் அந்த நதியைக் காலால் நடந்தாயினும் படவு கொண்டாயினும் எவ்விதத்திலும் கடந்துபோவது கூடாது.

4. ஹைதர், டிப்பு என்ற இரண்டு கொடும் புலிகளால் சிலகாலம் காக்கப்பட்டதனாலேயே ஸ்ரீரங்கபட்டணத்துக்கு அத்தனை சிறப்பு உண்டானது. முன்னே அவ்விடத்தில் ஒரு விஷ்ணு ஆலயமும் அதனைச்சுற்றி ஒரு சிறு கிராமமுமே யிருந்தன. அவ்வாலயத்தைப் பற்றியே அவ்விடத்துக்கு ஸ்ரீரங்கபட்டணமெனப் பெயர் வழங்கலாயிற்று. ரங்கம் என்பதற்கு ஆற்றிடைக்குறை யென்றும் தீ வென்றும் அர்த்தமிருப்பதனால் அதன்மேலுள்ள பட்டணம் ஸ்ரீரங்கபட்டணம் என்னப்பட்டது என்று சொல்லுவதுமுண்டு.

5. ஸ்ரீரங்கபட்டணத்தைச் சுற்றிய இடமெல்லாம் நிலவளமுள்ளதாய்ச் செழித்த தேசமாகையாலேயே அது ராஜதானியாகக் கொள்ளப்பட்டதென்னலாம். இத் தென்னிந்தியாவிலுள்ள மற்ற நதிகளைப்போ

லல்லாமல், காவிரி எக்காலத்திலும் அவ்விடத்தில் வெள்ளம் ஓடுகின்ற நதியாகையால், அதனை யடுத்த நாடுகளுக்கெல்லாம் வாய்க்கால்களின் வழியால் அவ்வாற்று நீர் கொண்டுபோய்ப் பாய்ச்சப்படுகின்றது. சுற்றுப்புறம் எங்கும் ஒரு துளிகூட மழை பெய்யாமல் ஏறக் கட்டிய காலத்தும் ஸ்ரீரங்கபட்டணத்தைச் சுற்றிய இடமெல்லாம் பயிர்களும் கருப்பஞ் சோலைகளும் அடர்ந்து அனைவரும் கண்குளிரக் காணத் தக்கதாயிருக்கின்றது.

6. ஆயினும் ஸ்ரீரங்கபட்டணம் வாசத்துக்கு ஆரோக்கியமான இடமன்று. ஒருவித நச்சுக் காற்றினால் சுரங் கண்டு அங்கு உயிர்ச்சேதம் அதிகமாய் உண்டாகின்றது. ஆனது பற்றியே அங்கிருந்த அங்கிலேயருடைய காப்புச் சேனைகளெல்லாம் அப்புறப்படுத்தப்பட்டன. ஒரு பட்டாளம் மாத்திரம் அக் கோட்டைக்குக் காததூரத்தில் பிரெஞ்சுராக்கு என்னும் ஒரு மேட்டுத்தாக்கிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. காவிரி ஆற்றிலுள்ள பாறைகளின்மேல் சூரியகிரணம் உறைத்து அதன் உஷ்ணம் ஏறுவதனாலேயே அவ்விடம் அவ்வளவு ரோக பூமியாயிற்று என்கிறார்கள். அதனால் ஸ்ரீரங்கபட்டணத்தின் பெருமை அநேகமாய் இப்பொழுது அழிந்து போயிற்று. அந்த இடத்துக்கு இப்போது இருக்கும் பெருமை யெல்லாம் அதை முதலிலே ஒரு ராஜ்யத்துக்குச் சிறந்த ராஜதானியாக்கிய மகம்மதிய சூரர்கள் இருவருடைய கோரிகள் கட்டப்பட்டிருப்பதனாலேதான். அவர்களுள் சிறந்தவரான ஹைதரலியை மாத்திரம் அந் நாட்டார் வெகுவாக மறந்து விட்டார்களாயினும்,

டிப்புசுல்தான் நடத்தி வந்த பல அக்கிரமங்களால் அவரை மாத்திரம் இன்னும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டேயிருக்கின்றனர். டிப்பு மிக்க பிடிவாதமுடையவர்; அவருடைய நடக்கை யெல்லாம் பித்தனுடைய நடக்கைக்கு ஒப்பானவை. அவரை அடக்கஞ் செய்த இடத்தில் கட்டிய கோரியைப் பிரயாணிகள் பலர் போய்ப் பார்த்து வருகின்றனர். அந்தக் கோரியில், 'அவர் தம் மதவிஷயத்தில் கொண்ட சத்தியத்திற்காகவே உயிரை விடுத்தார்; தம் மதஸ்தர்களுடைய மனத்தில் அவர் எப்போதும் நிலைகொண்டிருப்பவர்' என்னும் கருத்துள்ள மொழிகள் வரையப்பட்டிருக்கின்றன. அங்கிலேயர் பொருள் செலவு செய்து அதனைப் பத்திரமாய்ப் பாதுகாத்து வருகின்றனர்.

7. ஸ்ரீரங்கபட்டணம் கோட்டைக்கு ஒரு மைல் தூரத்தில் டிப்புவினுடைய துரியா தௌலத் என்னப்பட்ட விலாஸமண்டபம் ஒன்று உண்டு. அது காவிரிக் கரையிலுள்ள ஓர் உத்தியான வனத்திலே கட்டப்பட்டிருக்கின்றது. அவ்வரண்மனை வெகு சிறப்பாகச் சிங்காரிக்கப்பட்டு மகம்மதிய சிற்பத்தின் கைதேர்ந்த திறமைபோல விளங்குகின்றது. அவ்வரண்மனை எப்புறமும் சித்திரங்களால் சிங்காரிக்கப்பட்டிருப்பதுமன்றி, கீழ்மாடியில் டிப்புவினது யுத்த வீரத்தைக் காட்டும் பல சித்திரப் படங்களும் அணியணியாய் எழுதப்பட்டிருக்கின்றன. ஒரு புறத்தில் அவருடைய சேனாவீரர்கள் பிரெஞ்சுக்காரருடைய உதவியுடன் எல்லாரும் மீசையுடையவர்களாய் யுத்தத்திற்குப் போகும் பாவனையாக வரையப்பட்டிருக்கின்றனர். மற்றொரு புறத்தில் வீரர்கள் பீரங்கிப் பட்டாளத்துடன் இங்கிலிஷ்காரருடைய சேனையை எதிர்க்கின்-

றனர். அங்கிலேயர் இங்கு மிகவும் அபஜயப்பட்ட பாவனையாய் எழுதப்பட்டிருக்கின்றன ராயினும் சதுரமாய் விளைத்துக்கொண்டிருக்கின்றனர். அந்தச் சதுரத்தின் மத்தியில் அங்கிலேயப் படைத் தலைவரான கர்னல் பேலியின் வடிவம், மிகவும் சோர்ந்தவரை பண்ணப்பட்டு ஒரு சிவிகையிலே விரலை வாயில் வைத்துக்கொண்ட வண்ணமாய்ச் சித்திரிக்கப்பட்டுள்ளது. கன்ன மீசையினால் அவர் கர்னல் பேலி எனத் தெளிவாகின்றது. அங்கிலேயருக் கெல்லாம் கன்ன மீசையுண்டு. டிப்புவோ ஜயசீலராய்ச் சாந்தமான வடிவத்துடன் கையில் ஒரு ரோஜாமலரை வைத்துக் கொண்டபடி சித்திரிக்கப்பட் டிருக்கிறார். ஒருபுறத்தில் முற்காலத்தும் இக்காலத்துமுள்ள மகம்மதிய வீரர்களின் படங்கள் அமைக்கப்பட் டிருக்கின்றன. அவ்விடம் முழுதும் இப்போது வெகு நன்றாய்ச் செப்பனிடப்பட் டிருக்கின்றது. அந்தச் சித்திர வர்ணங்களின் மேல் சூரியகாந்தி படும்போது அவை வெகு அலங்காரமாகக் காணப்படுகின்றன. அந்த அலங்காரங்க ளெல்லாம் தோற்றத்தில் கொஞ்சம் குரூரமானவைகளா யிருந்தாலும் மிகச் சிறந்தவைகளாயும் அனுரூப மானவைகளாயு மிருக்கின்றன.

8. அந்தப் பிரதேசமும் ரோகத்துக்கு இடமாய் வாஸயோக்கியமான தன்று. அங்கும் காவிரியாற்றிலுள்ள கற்களே நச்சுவாயுவை உண்டாக்குகின்றன என்கிறார்கள். காவிரிநீர் பாய்கின்ற செழிப்பான நெல் வயல்களே காய்ச்சல் உண்டாக்குகின்றனவென நான் எண்ணுகிறேன். டியூக் அவ் வெல்லிங்டன் கம்மிஷனராயிருந்தபோது வாஸம் பண்ணின இடம் அதுதான்.

7. திறவுகோல்

ஒரு பிரபு தனக்கு இருந்த பல திறவுகோல்களையும் ஓர் இருப்பு வளையத்தில் ஒன்றாய்க் கோத்துக் கொத்துச் சாவியாக வைத்திருந்தான். ஒருநாள் அத் திறவுகோல்களெல்லாம், பகல் வேளையில் செய்யவேண்டிய வேலைகளைச் செய்துமுடித்தபின் யஜமானன் படுக்கையின் தலைமாட்டுக்கு நேராகச் சுவரில் ஓர் ஆணியிலே மாட்டி வைக்கப்பட்டன. சாதாரணமாக மற்றத் திறவுகோல்களைப்போல் அவை வாயைத் திறவாமல் அடங்கி யிருப்பவைகளல்ல. அந்தக் கொத்துச் சாவியில் சில நாளைக்கு முன்புதான் கோக்கப்பட்ட மிகச் சிறியதான சாவியொன்று இருந்தது. பார்த்தால் இன்னும் அதற்குப் பல்கூட முளைக்கவில்லை யென்று சொல்லலாம். அந்தச் சிறிய சாவியானது சற்றும் விவேக மில்லாமல், தான் அவ்வளவு உருவம் சிறுத்திருப்பது தனக்குப் பெருங் குறை யென்று அதற்காக மனம் நொந்து அதைப்பற்றி முணுமுணுக்கலுற்றது. அந்தச் சத்தமானது அக் கொத்தி லிருந்த மற்றைச் சாவிகளுடைய நித்திரையைத் தடை பண்ண, அவைக ளெல்லாம் விழித்துக்கொண்டன. இராத்திரி யாரும் சந்தடி செய்யக்கூடாதென்ற பிடிவாதம் அவைகட்கு மிகவும் அதிகம்.

2. இந்தக் குள்ளத் திறவுகோலின் கூச்சலைக் கேட்டவுடனே எல்லாவற்றிற்கும் பெரிதான கோட்-

டைவாயிற் பூட்டின் திறவுகோலானது, 'யாரது? யாரங்கே கூக்குர லிடுகிறது?' என்று கடுப்பாய்க் கூவிற்று.

3. அதனைக் கேட்டுச் சிற்றுள் திறவுகோலானது 'நானல்ல' என்றது; அலமாரித் திறவுகோல் 'நானல்ல' என்றது; பெரிய பெட்டித் திறவுகோல் 'நானல்ல' என்றது. இவ் வண்ணமே 'நானல்ல' 'நானல்ல' என்று இன்னும் அநேக திறவுகோல்கள் மறுமொழி பகர்ந்தன.

4. அந்தச் சிறிய திறவுகோல் மாத்திரம் இப்புறமும் அப்புறமும் புரண்டுகொண் டிருந்ததேயன்றி அதற்கு ஒன்றும் பதில் உரைக்கவில்லை.

5. அதுகண்டு பெரிய சாவியானது, 'கூச்சலிட்டது மற்றெதுவுமல்ல, நன்றாய்த் தெரிகிறது. இனி அது அப்படிச் செய்யாதபடி பார்த்துக்கொள்ளுங்கள், இதைவிட நான் சொல்லவேண்டுவது வேறில்லை' என்றது.

6. பிறகு சிறிய திறவுகோல் தவிர மற்றவை யெல்லாம் கண்ணயர்ந்தன; சிறிய திறவுகோலும் வாயை மூடிக்கொண்டுதான் இருந்தது. ஆயினும் பாதி யடங்கியும் அடங்காமலு மிருந்த அதன் மூச்சுத் திணறுதலும், வேதனையினாலாகிய மனத் துடிப்பும் பக்கத்துக்குப் பக்கம் புரண்டு அலைவதும் ஆகிய இவைகள் சீக்கிரமே மறுபடியும் அவைகளை எழுப்பி விட்டன.

7. விழித்துக்கொண்டவுடன் பெரிய சாவியானது, 'இப்பொழுது யாரங்கே?' என்று மிக்க கோபத்தோடு கூவிற்று.

8. மற்றவைகளுக்கும் அவ்வண்ணமே கோபமுண்டாயிற்று ; ஆயினும் உருவத்திலும் எடையிலும் எல்லாவற்றிலும் பெரிதாயிருந்ததுபற்றி முதலில் விசாரணை செய்யவேண்டிய அதிகாரம் அந்தப் பெரிய சாவிக்கே அளிக்கப்பட்டிருந்தது.

9. பிறகு அலமாரித் திறவுகோலானது, 'மிகச் சிறிய உள்ளறைச் சாவிகளிலேதான் ஏதோ ஒன்று இப்படி அலட்டிக்கொண் டிருக்கிறதெனத் தோன்றுகிறது' என்று சொல்லிற்று.

10. அதுகேட்டு மிகக் கொடிய நெஞ்சுள்ளதும், சிறையாய்ப் பிடிப்பவர்களையெல்லாம் காவலிலடைத்து வைப்பதுமான சிறைச் சாலைத் திறவுகோலானது 'அப்படியாயின் யாராவது பிடித்து அதை நசுக்கிவிடுவது நல்லதெனத் தோன்றுகிறது' என்று கூறிற்று.

11. அந்தப் பேச்சுக் காதில் விழுந்தவுடனே சிறிய திறவுகோலானது தனக்கு முடிவுகாலம் கிட்டினதென்று நினைத்து மிக்க திகில்கொண்டு உடம்பெல்லாம் வேர்த்து மனம் புழுங்கி நின்றது. ஆபத்து வேளைக்கு உற்றார் வேண்டுமென்பது பொய்யன்று. அச் சமயத்தில் இதைவிட எவ்வளவு பெரிதாயினும் இதே வேலைப்பாடு அமைந்ததும் இதற்குத் தோழனுமாகிய ஒரு சிறிய சாவி இதன் எதிரில் வந்து இதற்கு நம்பிக்கை யுண்டாகும்படி இரகசியமாய்த் தேறுதல் சொல்லலுற்றது. அதற்குள் மற்றவைக ளெல்லாம் தூக்கத்தால் கண் மயங்கிக் கோபந்தணிந்து மறுபடி குறட்டைவிட்டு நித்திரை செய்யலுற்றன. அப்போது இந்த நேசமுள்ள சாவி அந்தச் சிறிய சாவியொன்று

தவிர மற்றெதற்கும் கேளாத மெல்லிய குரலாய், 'உருவம் சிறுத்திருப்பதைப் பற்றி நீ விசாரப்படுவது உசிதமன்று; மிகுதியாய் உருவம் பெருத்த பொருள்கள் அத்தனையாக மதிக்கப்பெற் றிருக்கின்றன வல்லவென்பது உனக்குத் தெரியாதா.

— சிற்றுளியால்

கல்லுந் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னல்.

தேம்படு பனையின் றிரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

அதோ அந்த மலையைப் பார்க்கிலும் பெரிய பொருள் வேறுண்டோ? ஆயினும் ஒரு காணி நெல்வயலுக்கு இருக்கின்ற பெருமையில் பாதியாவது இதற்கு உண்டா? பெரிய பூட்டுத் திறவுகோலானது வெளிக் கோட்டை வாயிற் கதவைப் பூட்டுகின்றது என்பது உனக்குத் தெரியுமே; நானே நமது நாயகனுடைய பூணாரப்பெட்டியைப் பூட்டுகின்றேன். உன்னை வருவித்த காரியம் என்ன உனக்குத் தெரியுமா?' என்றது.

12. அதற்கு அச் சிறிய சாவி, 'அது தென்னவோ எனக்குத் தெரியாதே' என்றுரைக்க, மற்றது 'அப்படியா, நமது எஜமானன் மணம் புரியுநாளில் தன் மணமகளுக்கு அளிப்பதற்காக வைத்திருக்கும் விலையேறப்பெற்ற முத்துமாலைகள் அடங்கிய கைப்பெட்டியைப் பூட்டுவதற்காக நீ நியமிக்கப்பட் டிருக்கிறாய்; ஆதலின் எல்லாவற்றினும் சிறியையாயினும் எங்களுக்

கெல்லாம் இருப்பதைப் பார்க்கிலும் மிக்க கௌரவமான உத்தியோகம் உனக்கு நம்பிக்கையோடு கொடுக்கப்பட் டிருக்கின்றது. இவ்விதமான நம்பிக்கை உன்னிடத்திலேயே விசேஷமாய் வைத்திருப்பதற்காக மனவெழுச்சி கொள்ளவேண்டியதே யன்றி நீ எண்ணுகிறபடி உன்னுடைய சிறுமையைப்பற்றிச் சிந்திக்கவேண்டுவதில்லை' என்று கூறிற்று. அது கேட்டு அச் சிறிய சாவி மனத்தேறித் திருப்தி யடைந்தது. அன்றுமுதல் பின்பு ஒருநாளும் அது குறை கூறியதாய்க் கேள்விப்பட்டவர் எவருமில்லை.

8. தேரை

தேரை தவளையினத்தைச் சேர்ந்தது. பிராணி சாஸ்திரமறிந்தோர் தவளை நாவுள்ளதென்றும் நாவில்லாததென்றும் இரண்டுவகையினதென்றும், அவற்றுள் பின்னையது ஆசியா கண்டத்திலேயே காணப்படுவதில்லையென்றும் சொல்கின்றனர். தென்னிந்தியாவில் மூன்றுவகைத் தவளைகள் காணப்படுகின்றன. சாதாரணமாய்க் குளத்திற் காணப்படும் பச்சைத்தவளை ஒரு வகை. இரண்டாவது வகை, ஈரத்தரையிலும் கற்களினிடையிலும் காணப்படும். இதனை வீட்டுத் தேரை யென்று சொல்வர் சிலர். இதனை யறிந்துகொள்வதற்குச் சில அடையாளங்கள் உண்டு. இதனுடைய தோல் மற்றதன் தோலைப்போல ஈரப் பசையோடிராது; இது முட்டை யிடுதற்காகமட்டுமே நீர் நிலையருகிற் செல்லும்; ஈ எறும்பு முதலிய அற்ப செந்துக்களைத் தின்று ஜீவிக்கும்; இதனைப் பிடித்து உபத்திரவப்படுத்தினால் இது தன் தலையின் இருபக்கத்திலும் காதின் கிழிருந்து தோலில் பட்டால் தினவையுண்டாக்கும் ஒருவிதமான துர்நீரைப் பீச்சுகின்றது.

2. மூன்றாவது வகைத் தவளைதான் தேரை யென்று சொல்லப்படுவது. இதனைச் செடித் தேரை யென்றும் சொல்வதுண்டு. இது புதிதாய்ச் சுண்ணம்பு பூசி ஜில்லென்றிருக்கும் சுவர்களில் காணப்-

படுதலால் இந்தியாவிலுள்ள ஆங்கிலர் இதனைச் சுண்ணும்புத் தவளை யென்று சொல்வர். இது விசேஷமாய் வாழைத் தோட்டங்களில் காணப்படுகிறது; வாழைக் குருத்திலைக்குள் இது நுழைந்திருப்பதைக் காணலாம். இராத்திரி வேளைகளில் இது நம் வீடுகளுள் தாராளமாய் வந்து சுவரில் மாட்டியிருக்கிற தொப்பிகளுக்குள்ளும் படங்களுக்குப் பின்னும் ஒளித்துக்கொள்ளுகிறது. இது பார்க்கிறதற்கு அவலக்ஷணமாயிருக்கும் மிக மெல்லிய பிராணி. இதன் விரல்கள் மிக மெல்லியனவாயினும் அவற்றினடியில் கிண்ணம் போல் ஒருவகைத் தோலமைப்பு உள்ளது. அதனால் தேரைக்கு மிருதுவான சுவர் முதலியவற்றில் ஒட்டிக்கொள்ளவும் சுலபமாய் ஏறவும் சாத்தியமாகிறது. அதனைத் தொந்தரவு செய்தால் அது நெடுந்தூரம் இடைவிட்டுக் குதித்துச் செல்லும்.

3. தவளை கத்துகிறதை வைத்து அது ஆணு பெண்ணு என்று சொல்லக்கூடும். ஆண்களுக்கே கத்துதற்கேற்ற கருவிகள் அமைந்திருப்பதனால் கத்துகிற தவளைகள் ஆண்களே. கத்துதலிலும் பேதம் உண்டு. சாதாரணத் தவளையின் கத்தல் எல்லாருக்கும் தெரிந்ததே. தேரையின் கத்தல் அந்தமாதிரி யிராது. நெருப்புக்குச்சிகளைக் கொண்ட பெட்டி பாதி நிறைந்திருப்பதைக் கையால் ஆட்டும் பொழுது என்ன ஒலி கேட்கின்றதோ அந்த ஒலியே தேரைக் கத்தலின் ஒலி யென்று ஒருவகையாகச் சொல்லலாம்.

4. முட்டையிடுவதிலும் தேரைக்கும் மற்றத் தவளைகளுக்கும் பேதம் உண்டு. அவைகள் தண்ணீரில் முட்டையிட, தேரை முட்டையிடும் பொருட்டுத்

தண்ணீர் நிறைந்த இடத்திற்குச் செல்லுகிறதே யல்லாமல் தண்ணீர்க்குமேல் கவிந்து தொட்டுக்கொண்டிருக்கிற செடியின் இலையின்மே லிருந்துகொண்டு அங்கே தன் முட்டைகளை யிட்டுவைக்கும். முட்டைகள் வெள்ளையாய்க் கடுகளவே யிருக்கும். முட்டைகள் தாமாகவே பக்குவப்பட்டுக் குஞ்சுகளாகி அடியிலிருக்கும் தண்ணீரில் விழுந்து வளர்ச்சி யடையும்.

5. தேரை பார்க்கிறதற்கு அவலக்ஷணமா யிருக்கிறதே தவிர, ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் செய்வதில்லை. நம் நாட்டு ஜனங்கள் அதனைப் பற்றித் தப்பெண்ணங் கொண்டிருக்கிறார்கள். இவ் வேழைப் பிராணி ஒரு குழந்தை மேலாவது ஒரு கர்ப்பிணி மேலாவது குதிக்குமாயின் அவ்விருவரும் நோயடைவது திண்ணமென்றும், குழந்தை தேரையைப் போலவே தசைப்பற்றின்றி மெலிவடைதல் நிச்சயமென்றும் உறுதியாக நம்புகின்றனர். இன்னும், அப்படித் தேரை தீண்டிய குழந்தை தேறவேண்டுமாயின், அந்தத் தேரையையோ வேறு ஒரு தேரையையோ பிடித்து எண்ணெயில் வறுத்து அவ்வெண்ணெயை மருந்தாகக் கொடுக்க வேண்டுமென்பது அவர்கள் அபிப்பிராயம். ஆதலால் குழந்தைகளும் கர்ப்பிணிகளும் நடமாடுகிற வீட்டில் தேரையை மிகவும் அஞ்சுகிறார்கள். தேரைக்கு இப் பழி அநியாயமாக வந்தது. குழந்தை மெலிவடைந்திருக்குமாயின் தேரைவிழுந்த காலத்துக் கர்ப்பிணி யடைந்த நிலையே அதற்குக் காரணமாகச் சொல்லவேண்டும்.

6. தேரை குடித்த தேங்காய் என்று வழக்குள்ளதையும் பலர் அறிந்திருக்கலாம். தேங்காயில்

வழுக்கை பற்றுமுன்னமே, தேரை அதிலுள்ள நீரைக் குடித்துவிட்டதனுல் தேங்காய் முற்றிய பிறகும் ஓடு மாத்திரையா யிருக்கிறதாம். இப்படி யன்றி, வெறு-மையான தேங்காய் மரத்தினின்று விழுமாயின் அது இளைதாயிருக்கும் பொழுது தேரை மோந்த தென்று சொல்லுவது முண்டு. தென்ன மரத்தில் தேரை ஏறியதை இதுவரை யாருங் கண்டதில்லை. அப்படியே ஏறினும் அது மோத்தலால் தேங்காய் விளையாதிருக்-கும் என்பது நம்பத்தகாதது.

7. இனி, அவ்வையார் திருவள்ளுவரோருடன் பிறந்த அதியமான் பாடியதாகச் சொல்லும்

கருப்பைக்குள் முட்டைக்குங் கல்லினுட்டே ரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் மெய்யன் — உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானே ஓகெடுவாய் அன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்

என்னும் வெண்பாவில் 'கல்லினுட்டேரை' என்பது தேரை காற்று நீர் உணவாதி எட்டலாகாத பாறை முதலியவற்றினுள் இருப்பதென்று குறிப்பதாகத் தோன்றுகிறது. பாறையை யுடைக்குங் காலத்துத் தேரை வெளிப்பட்டு வருவதாகவும் அதனுல் அது யோகஞ் செய்வாரைப்போல நெடுங்காலம் உணவாதி யின்றி யிருக்க வல்லதென்றும் சிலர் சொல்லுவர். கல்லி னிடுக்கில் அது உள்ளதெனில் நம்பக்கூடும். கல்லினுள்ளேயே யிருப்பதென்றால் அது இயற்கை விரோதமாயிருக்கின்றது.

8. இன்னும், அகத்தியரிடத்தில் வைத்தியங் கற்றதாகச் சொல்லும் பெரியாரொருவர் தேரைய

ரென்றிருந்தனர். அவர் பெயரால் வைத்திய நூல்கள் சில வழங்குகின்றன. அவர் முதலில் நோய் மிகுதி-யுற்று உடல்மிக மெலிந்திருந்தாரென்றும், நோய் தீர்க்கவேண்டிப் பல பிரபல வைத்தியரிடஞ் சென்றும், கடைசியில் அகத்தியரே அவர் மண்டையோட்டை நீக்கி உள்ளிருந்த தேரையை எடுத்துப் புறத்திட்டு அருஞ் சத்திர வைத்தியஞ் செய்தாரென்றும், அதனால் அவருக்குத் தேரையர் என்பது காரணப் பெயராய் வழங்கலுற்றதென்றும் சொல்லுகின்றனர். இதுவும் தற்காலத்து நாம் தேரையைப்பற்றி யறிந்த அறிவைக் கொண்டு நம்பலாகாதது.

9. கல்விச் செருக்கு

உற்றுப் பார்க்குமளவில் எவரும் செருக்கு அடைவதற்கு ஏது ஒன்றுமில்லை. எதற்காகச் செருக்கடைந்தாலும், தன் சொந்த முயற்சியாலேயே வருந்தி யறிந்த சொற்ப விஷயங்கள் தவிர, மற்றப்படி கற்றவித்தையைப் பற்றிப் பெருமை பாராட்ட நியாயம் சிறிதுமில்லை. வேறொருவன் கற்றறிந்த கல்வியில் ஒரு சிறிது நாம் பெற்றுக்கொள்வதனால் செருக்கடையலாமோ? அப்படிக் கர்வப்படுவது ஒருவனிடத்தில் ஒரு காசு பெற்றுக்கொண்டு அதனால் கர்வப்படுவது போலாம். தங்களுக்குப் பிச்சை எவ்வளவு அதிகமாகத்தான் கிடைக்கட்டும், பிச்சைக்காரர் கர்வங்கொள்ளலாமா?

2. கல்வி யறிவு கை வழங்குகிற நாணயம் போன்றது. ஒருவன் தானே முதலில் வருந்திப் பொன் சம்பாதித்துப் பிறகு அதைச் செவ்வையாய்ச் சுத்திசெய்து தானே முத்திரையிட்டு நாணயமாக்கிக் கொண்டாலும், அல்லது இவ்வாறு ஒருவன் ஏற்படுத்திய பொருளைத் தன் புத்தி சாமர்த்தியங்களை விசேஷமாய்ச் செலுத்தி நல்ல வழியில் பிரயாசப்பட்டுச் சம்பாதித்தாலும், சிறிது செருக்கடைய நியாயமுண்டு. இவைகள் ஒன்றுஞ் செய்யாமலிருக்க, வழிப்போக்கனொருவன் தன் கையிலிருந்த பொருளை முகத்தில் எறிந்துவிட்டுப்போனால் அதைப்பற்றிப் பெருமைப்பட

ஏது உண்டோ? ஒருவன் இவ்வகையாய்ப் பிச்சை யெடுத்துக் குபேரனைப்போலக் கோடி ரூபாய் குவித்-தாலும் அவன், அற்பமாயினும் தன் உழைப்பினா-லேயே சம்பாதித்துக் கொள்பவனுக்குச் சற்றேனும் சமமாகான்.

3. இந்தத் திருஷ்டாந்தப்படியே, சூரியன் பூமி-யைவிடப் பெரிதென்று ஒரு மனிதன் போதித்தால் அதை அறிந்து கொண்டதற்காக நாம் என்ன ஏது-வைக் கொண்டு கர்வப்படுகிறது? அப்படியே பல பண்டிதர்கள் தாம் கற்றறிந்த பற்பல விஷயங்களையும் நமக்குக் கற்பித்துக் கொடுத்துத் தமது கல்விப் பொருட் சுமையை நம் தலைமேல் சுமத்தினாலும், அப்படி வரப்பெற்ற கல்விச் சுமைக்காகத்தா னாகட்-டும் நாம் பெருமை பாராட்ட நியாயமென்ன? இக் காலத்தில் நமக்குத் தெரியுமென்று நாம் அகங்காரப்-படுவதற்குக் காரணமான கல்வி யறிவெல்லாம் இத் தன்மையான கேடுகெட்ட வழியால் வந்தவைதாம். முன் யாரோ ஒரு வித்வான் வருந்திப் பாடுபட்டு ஸ்தாபித்திருக்கிற சித்தாந்தங்களை வேறொருவர் நமக்குச் சம்மத மில்லாமலிருக்கப் பலவந்தமாகவும், நாம் நல்லது பொல்லாதென்பதைக் கூடத் தெரிந்து கொள்ளத் திறமையற்றிருந்த நமது சிறு பருவத்தில் அடித்துப்புடைத்து நமக்கு வெறுப்பாகவும் பாடஞ் செய்வித்திருக்க, அவைகளுக்காக நாம் கர்வப்படுவ-தற்கு என்ன நியாயம்? ஆ ஆ! நாம் எவ்வளவு வருந்-திப் பொருள்தேடி அதற்காகக் கர்வப்படுகிறோம்! உண்மையாய்ப் பார்க்குமளவில் நாமே பாடுபட்டுத் தேடிக் கண்டறிந்த கல்விப்பொருள் ஒன்று தவிர, மற்ற

வழியால் வரப்பெற்ற் எவ்வகைக் கல்வியும் நாம் பெருமைபாராட்டும்படி நம் மனத்திற்கு ஏற்ற அணி-கலமாக மாட்டாது.

4. ஒருவன் பாலைவனத்திற் சிறிதாய்க் குடிசை யொன்று போட்டுக் குடியிருப்பதற்கு வேண்டிய பாய் படுக்கை பலகை பீடம் முதலிய பல உபகரணங்களையும் வருந்திச் செய்து கொள்வானுனல், அவன் தனக்குத்-தானே சிறு வீடு ஒன்று கட்டிக் கொண்டதற்காகக் களிப்படைவதுபோலச் சற்றுச் செருக்கு மடையலாம். வெகு நேர்த்தியாக நிருமித்துச் சகலவித சாமான்களும் ஒன்றுலொன்று குறைவில்லாமல் சேகரிக்கப்பெற்ற திவ்விய மாளிகை யொன்று ஒருவனுக்குத் தன் முயற்சி சிறிது மின்றி அமையுமாயின், அவன் முன்-னவனைவிடப் பலமடங்கு அதிகமாய்ச் சுகங்கள் அனுப-விக்க இடமுண்டாயினும், எள்ளளவேனும் அகங்காரங்-கொள்வதற்கு ஏது வில்லை; அம் மாளிகையைக் கட்-டினவன் திறமைக்காகவோ இவன் கர்வப்படுகிறது! பிறர் தேடிய தந்தக்கட்டிலிற் படுப்பவனுக்கு உண்டா-கும் ஆனந்தம், தானே தேடிய தாழம்பாயிற் படுப்ப-வனுக்கு உண்டாகும் ஆனந்தத்தில் பாதியாவது இருக்கு மென்பது பத்தில் ஒன்பது பங்குக்கும் நிச்சயமில்லை.

10. ஜேம்ஸ் பெர்கஸன்

ஜேம்ஸ் பெர்கஸன் என்பவன் சித்திர சிற்பசாஸ்திரம், யந்திரசாஸ்திரம், தத்துவசாஸ்திரம், ககோளசாஸ்திரம் ஆகிய இவைகளில் நன்றாகத் தேர்ந்த நிபுணன். அவன் பிறந்தபோது தாய்தந்தையர்கள் அவனைப் பாடசாலைக்கு அனுப்பிப் படிப்பிக்கவும் அசக்தர்களா யிருந்தனர். அவனுடைய தந்தை அன்றன்று கூலிக்கு வேலை செய்து ஜீவிப்பவன். ஆயினும் அந்தத் தந்தை கருத்தில் மட்டும் பெருந்தன்மை யுடையவனாய் இருந்தான். உயிர்கண்மாட்டு அருளும் கடவுளிடத்தன்பும் மதாசாரங்களில் அபிமானமும் அவனுக்கு அதிகமென்று யாவரும் அவனைக் கொண்டாடுவார்கள். அவன் மாலை வேளைகளில் ஜேம்ஸ் ஒருவன் தவிரத் தன்னுடைய மற்றப் பிள்ளைகளுக் கெல்லாம் எழுதப் படிக்கக் கற்பித்து வந்தான். ஜேம்ஸ் மாத்திரம் பிறருதவியின்றித் தானே கற்கப் பயின்றான். மற்ற மூத்த பிள்ளைகளெல்லாரும் கற்பிக்கப்பட்ட காலத்தில் ஜேம்ஸ் மிகச் சிறு குழந்தையா யிருந்தமைபற்றி, இந்த வீட்டுப் பாடசாலையில் சேர்த்துக்கொள்ளப் போதுமான வயது அவனுக்கு இன்னும் வரவில்லையென்று கருதி, அதில் சேர்த்துக் கொள்ளாமல் அவனை யதேச்சையாக விநோதமா யிருக்கும்படி விட்டு வைத்தார்கள். ஆயினும் அவர்கள் கற்கும்போது தான் அதைக் கேட்டுக்கொண்டிருப்பதும், தனியாய்ப்

படிப்பதுமே அவனுக்கு விநோதமாயிருந்தது. அவன் தனித்திருக்கும்பொழுது தன் சகோதரர்களுடைய புத்தகங்களை யெடுத்துப் பார்த்து அவற்றிலுள்ள பாடங்களைப் பிறருதவி யின்றித் தானே வருந்திப் படித்து வருவான். ஆனாலொன்று, பொருள் எளிதில் விளங்காத கடினமான சொற்கள் ஏதாவது நேர்பட்-டால் அவைகட்குப் பொருள் இன்னதென்பதை மாத்-திரம் ஒவ்வொரு சமயங்களில் அண்டை வீட்டிலிருந்த ஒரு கிழவியினிடம் போய்க் கேட்டுத் தெரிந்துகொண்டு வருவான். வித்தியா விஷயத்தில் அவன் பிறரிடத்தி-லிருந்து பெற்றுக்கொண்ட உதவி இவ்வளவேயாம். இப்படி யிருக்கையில் ஜேம்ஸ் ஒரு நாள் தனியே உரத்துப் படித்துக்கொண் டிருக்கக் காணும்போது அவனுடைய தந்தைக்கு இந்த ரகசியம் வெளியாயிற்று.

2. ஜேம்ஸ் எட்டு வயதிலேயே துலாக்கோல், சக்கரம், இருசு இவைகளின் தத்துவங்களைக் கண்டு பிடித்து, பிறகு அவ்வீறிவைப் பிரகிருதி சாஸ்திரத்-தின் இதர விஷயங்களைக் கண்டுகொள்வதற்கும் ஆதார மாக உபயோகித்து வந்தான். அப்போது அவன் பரிசோதனை செய்து அறிந்த விஷயங்கள் யாவும், முன்னமே உலகத்தார்க்குத் தெரிந்தவைகளேயாயி-னும், அதனை அறியாமல் அவன் சுயமாகவே கண்டு பிடித்தவை யாதலால், அவன் மட்டில் எல்லாம் நூதன மானவை யென்றே சொல்லவேண்டும். யாவும் அவன் சுயமாகவே பரீக்ஷித்து அறிந்து கொண்டவை. தகப்-பனார் ஒரு பாரமெழுப்பி யந்திரத்தைக் கொண்டு குடிசையின் மேற்கூரையை உயரத் தூக்குவதைப் பார்த்து, அந்த யந்திரத்தின் சக்தியைப்பற்றி ஜேம்ஸ்

நெடு நேரம் ஆலோசனை செய்து அந்தச் சக்தியைப் பின்னும் அதிகமாகச் செய்வதற்கு வேண்டிய வழிகளை நன்றாய்த் தெரிந்துகொள்ள முயன்றான். கடைசியாக இவ் விரண்டு விஷயங்களிலும் அவன் கண்டறிந்த உண்மையானது அப்போது புத்தகங்களின் மூலமாய் வெளியிட் டிருந்ததோடு முற்றும் ஒத்திருந்தது. ஆயினும் அப் புத்தகங்களை அவன் ஒருபோதும் பார்த்தவனல்லன்.

3. சின்னஞ் சிறு பிராயத்திலேயே ஆட்டுமந்தைகளை மடக்கி மேய்த்து வரும்படி அவனை வெளியே அனுப்பினார்கள். அக் காலங்களிலே மேய்ச்சற் புலங்களில் ஆடு மேய்ந்துகொண் டிருக்கும்போது சிறு குழந்தையான ஜேம்ஸ் மரத் துண்டையும் தன் கையிலிருந்த சிறு கத்தியையும் கொண்டு எப்பொழுதும் மாதிரி யந்திரங்களைச் செய்தவண்ணமாயிருப்பான். இதுதான் அவன் பகற்பொழுதில் செய்யும் வேலை. இராக்காலங்களில் அவன் வேலைசெய்து பொழுது போக்குவதும் அப் புலங்களிலேதான். ஆனால் அந்த வேலை இத்தன்மையதன்று, வேறு விதமானது. இருண்ட ராத்திரிகளில் அவன் வெளிப்புலங்களுக்குப் போய் நக்ஷத்திரங்களை ஆராய்ச்சிசெய்து நக்ஷத்திர மண்டலத்தினுள்ள பல அருமையான விஷயங்களைக் கண்டறிந்தான். மிகுந்த மேதாவியான இவ்விடைப் பையன் நக்ஷத்திர மண்டல பரிசோதனை செய்யப் போகும்போது ஒரு விளக்குவர்த்தியும், ஜெபமாலை போன்ற ஒருவகை மணிக்கோவையும் தவிர மற்றொன்றும் கையில் கொண்டுபோவதில்லை. தன் தேகத்தைக் காத்துக்கொள்வதில் அவனுக்கு ஜாக்கிரதை மிகவும் அதிகம். கம்பளியினால்

உடம்பை நன்ருகப் போர்த்துக்கொண்டு மல்லாந்தபடி பசும்புற்றரையிலேபடுத்து, மணி மாலையைக் கையில் வைத்துக்கொண்டு, வானத்தில் ஒரு கிரகத்துக்கும் மற்ெருரு கிரகத்துக்குமுள்ள தூரத்தையும் கிரகங்களுடைய சஞ்சாரத்தையும் அந்த மணிகளைக்கொண்டு கணக்கிட்டு வருவான்.

4. இப்படியிருக்க அவனுடைய அதிர்ஷ்ட வசத்தால் அன்புள்ள யஜமானன் ஒருவன் அவனுக்குக் கிடைத்தான். அவன் ஜேம்ஸினிடத்தில் மிகுந்த பிரீதி யுடையவஞ யிருந்தமையால், அவன் இன்னுனென விளங்க உரையாமல் விடுவது தகுதியன்று. அவனுக்கு ஜேம்ஸ் க்லேஷன் என்று பெயர். ஜேம்ஸ் வயதில் முதிர முதிர, க்லேஷன் அவனைப் படிப்புக்கு அனுப்பிவிட்டு அவன் செய்ய வேண்டிய வேலைகளைத் தான் செய்துவந்த காலங்களும் அநேகமுண்டு. தன்னுடைய வேலைக்காரன் உலகத்தில் தலையெடுக்க வேண்டுமென்று அவனுக்காகப் பாடுபட்ட அடக்கமுள்ள யஜமானன் இவனேயாம். ஜேம்ஸ் பெர்கஸன் உலகத்தில் பிரசித்தியடைந்தபோது, இந்தக் கதைகளைப் பெருமையாய் எடுத்துப்பேசி, அந்த யஜமானனுடைய நினைவு வரும்போதெல்லாம் நான் அவனிடத்தில் நன்றியறிதலோடு தலை வணங்குவேன் என்று சொல்லி வந்தான்.

5. பிறகு பெர்கஸன் பல யஜமானர்களிடத்தில் வேலை செய்யும்படி நேரிட்டது; ஆயினும் ஒருவரும் அவனிடத்தில் அவ்வளவு அன்பா யிருக்கவில்லை; அவனை மிகவும் வருத்தி வேலை வாங்கினர்கள். ஆயினும், பலர் தம் அறியாமையை ஒப்புக்கொள்வதை

விட்டுத் தமக்குப் படிக்கப் பொழுதில்லை யென்று சாக்குச் சொல்லுவதுபோல அவன் ஒருபோதும் சாக்குச் போக்குச் சொன்னவ னல்லன்; அப்படி வேலை செய்கையிலும் ஒழிவுகாலம் கண்டு படித்துவந்தான். ஒருதடவையில், கடிகாரயந்திரத்தின் வில்லினுடைய முக்கியாம்சங்களைப்பற்றிய சங்கதிகளை யாரோ சொல்லக் கேட்ட மாத்திரத்திலேயே, அதைப்பற்றி மற்றொன்றும் தெரியாதிருந்தும், அவன் மரக் கடிகார மொன்று செய்தான். அது மரமா யிருந்தாலும் அவனுடைய கைத் திறமையை நன்றாக விளக்கியது.

6. ஒரு சமயத்தில் இவன் ஒரு கனவானுடைய தோட்டத்து வாயிலில் கதவு மாட்டுதற்காகக் கட்டியிருந்த கட்டைச் சுவரின்மேல் இருபுறத்திலும் அலங்காரமாய் வட்டமான இரண்டு குண்டுக்கல்லுகள் வைத்திருக்கக் கண்டு; அவ்விரண்டு கற்களையும் இரண்டு கோளங்களாக வைத்துக்கொண்டு அவற்றுள் ஒன்றை இப் பூகோள படமாகவும், மற்றொன்றைக் ககோள படமாகவும் வைத்துக்கொண்டான். நம்முடைய தூரதிருஷ்டிக்குத் தோன்றுகிறபடி சூரியகதியைக் காட்டத்தக்க விதமாகப் பூகோள குண்டுக்கல்லை நாநாவித வர்ணங்களால் சித்திரித்தான். அது சூரிய கடிகாரமும் பூகோள படமுமாக இருந்தது. இவ்வளவு காலத்தில் அவனுக்குச் சிற்ப சித்திர மெழுதுவதில் கொஞ்சம் திறமை உண்டாயிருந்தது. அது போதாமல் அக்காலத்தி லிருந்த சிற்ப சாஸ்திரிக ளிடத்தில் பின்னும் பயின்று நன்றாகத் தேர்ச்சி பெறவேண்டுமென முயன்றான். ஆயினும் அதற்காக ஏதாவது கட்டணம் கட்டினாலொழிய, எவரும் அவனுக்குக் கற்பிக்கமாட்டோ மென்-

றார்கள். அப்படிக் கட்டணங்கட்ட அவன் கையில் காசு ஒன்றுமில்லாமை பற்றித் தன்னுடைய நேசன் ஒருவன் சொன்னபடி கேட்டு, தன் புத்திக்குத் தோன்றியபடி தானே சித்திரமெழுதப் பயின்றான். தன்னுடைய சுயமான மனப்போக்கும் சிருஷ்டிப் பொருள்களைப் பார்த்துத் தெரிந்து கொள்வதும் தவிர அவனுக்கு வேறுவிதமான உதவி ஒன்றுமில்லை. இவ்விதமாகப் பயின்று அவன் தான் எண்ணியிருந்ததைப் பார்க்கிலும் அதிகமாகத் தேர்ச்சி பெற்றான். பிறகு பல வருஷ காலம் அவன் சித்திரமெழுதும் தொழிலை அனுசரித்து வந்தானாயினும், அதனையே தான் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க தொழிலாகக் கொள்ளவில்லை; மறுபடி ககோள சாஸ்திர விசாரத்திலேயே இறங்கினான். அக் காலத்தில் வானத்திலுள்ள கிரக கதிகளைக் குறிக்கும் யந்திரங்களைச் செய்துவந்தான். கடைசியில் தன் புத்திக்கு இனிய விஷயமாக நாடிய ககோள சாஸ்திரத்தைப் பற்றிப் பல உபந்நியாசங்கள் செய்ததுமன்றிப் புத்தகங்களும் எழுதினான்; ககோளசாஸ்திர விஷயத்தில் விசாரம் வரும்போது அதற்கு மத்தியஸ்தனாகக் கொள்ளத் தக்கவனுமானான். அவன் எழுதிய புஸ்தகங்களில் சில பிரசித்தமானவுடனே, பிரெஞ்சு, ஜெர்மன் முதலான ஐரோப்பிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டன. 1710-ல் பிறந்த இவன் 55 வருஷம் இப் பூலோக வாழ்க்கையிலிருந்து 1766-ல் தேகவியோகமாயினான்.

7. இப்படிப் பிறப்பில் எளியவனாயிருந்து தன் முயற்சியாலேயே முன்னுக்கு வந்து மேன்மை பெற்ற ஜேம்ஸ் பெர்கஸனுடைய சரித்திரமானது, சிறுவர்கட்-

குக் கல்விப் பயிற்சி செய்வதற்கு மாத்திரமேயன்றி, அதைவிடச் சிறந்த நன்னடக்கை முதலியவைகளை அனுசரிப்பதற்கும் மேல்வரிச் சட்டமாய் இருக்கின்றது. அவன் ஜீவகாருணியமும் யாவரும் நேசிக்கத்தக்க நற்குணமும் உடையவன்; எவரிடத்திலும் அடக்கமும், மரியாதையுமான நடக்கை யுள்ளவன். வாழ்நாள் முழுதும் அவன் சிறிதும் பெருமை பாராட்டாமல் மிகுந்த ஈசுவர பக்தி யுடையவனா யிருந்தானெனவும், தத்துவ சாஸ்திரங்களில் பயிலப் பயிலத் தன் அறியாமையை அதிகமாய் உணர்ந்து, பணிந்த நடையும், மானிடரிடத்தில் அன்பும், படைத்தோனிடத்தில் அருள்நினைவும் உள்ளவனாயினான் எனவும் அவன் சரித்திர மெழுதின ஒரு புலவர் சொல்லி யிருக்கிறார்.

11. கரடி

ஐரோப்பா, ஆசியா, அமெரிக்கா கண்டங்களில் கரடிகள் அதிகமாய் உண்டு; ஆபிரிக்கா கண்டத்திலோ அவைகள் சற்று அருமைதான். கபில வர்ணமுடைய சாதாரண கரடிகள், ஐரோப்பா, ஆசியா கண்டங்களின் வட பாகங்களில் சற்றேறக்குறைய எங்கும், இலங்கைத் தீவு முதலிய இந்திய தீவுகள் சிலவற்றிலும் சஞ்சரிக்கின்றன. அவைகள் பரிமாணத்திலும், வர்ணத்திலும் அங்கங்கே சற்றுப் பேதமுள்ளவைகளாயிருக்கின்றன. கரடிச் சாதியில், வித்தைக்காரர் வளர்க்கிற கரடிகள், இந்தியாவில் மலை செறிந்த இடங்களில் விர்த்தியாகின்றன. வெண்கரடி ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களின் வட துருவங்களைச் சார்ந்த அதிக குளிர்ச்சியான தேசங்களில் உற்பத்தியானது. அதற்குத் துருவ தேசங்களின் கரடி என்றும் பெயர் வழங்கும்.

2. கரடி பருப்பமும், பளுவுமான ரூபமுடைய மிருகம். அதற்கு நெடுந் தலையும், நீண்ட மூஞ்சியும், சிறுத்த கண்ணும், முனையில் வட்டமான குறுஞ் செவியும் உண்டு. அதன் அவயவங்கள் பலத்துப் பருத்து அவலட்சண மானவைகளாகத் தோன்றும். அதன் உரோமம் சடை பற்றி நீண்டு அதன் குறுகிய வாலை மூடி யிருக்கும். அதன் காலடி பருத்தும், உள்ளங்கால் உரத்து மிருக்கும். பாதம் ஒன்றுக்கு

ஐந்து விரல்களும், விரல்முனையில் நீளமான நகங்களும் உண்டு. சாதாரண கரடி பெரும்பாலும் நாலு அடி நீளமும், ஏறக்குறைய இரண்டரையடி உயரமு முள்ளது. கரடிக ளெல்லாம் ஒரே நிறமுடையவையல்ல; சாதாரண கரடி துலக்கமற்ற கபிலவர்ண முள்ளது. அமெரிக்கா கண்டத்தில் சஞ்சரிக்கின்ற கரடிகள் சில இருண்ட கறுப்புவர்ண முள்ளவைகளும், சில கருமையும் வெண்மையும் கலந்த வர்ண முள்ளவைகளுமாம். பின் சொல்லிய வர்ண பேதமுள்ள கரடிகளுக்குச் சாம்பல் நிறக் கரடிகள் என்று பெயர். அவைகள் முகத்தின் முனை தொடங்கி வால்பரியந்தம் ஒன்பது அடி நீண்டிருக்கும். துருவதேசங்களிலுள்ள கரடிகள் சுத்த வெள்ளை; மூக்கு முனையும் நகங்களும் மாத்திரம் சுத்தக் கறுப்பு. அவை சாதாரண கரடிகளிலும் மும்மடங்கு அதிகமான பரிமாண முடையவை. பொதுவாகக் கரடி மந்தமும் வெடுவெடுப்புமான தோற்ற முள்ளது. அதனிடத்தில் முகக் களை சிறிதுமில்லை.

3. பெரும்பாலும் கரடிகள் உக்கிர குணமும், துஷ்டத்தன்மையு முள்ளவை. அவைகளைக் குட்டிப் பருவத்திற் பிடித்துக் கட்டாயப்படுத்தி வைத்தால், அவைகளுக்குச் சில விளையாட்டுகளைப் பயிற்றலாம். அவைகளை நெருப்பில் காய்ந்த இருப்புத் தகடுகளின்மேல் நிற்கும்படி பண்ணி, குரூரமாய் அவைகளுக்கு ஆட்டம் பழக்குவார்கள். கரடிகளைக் கண்டிப்பாய் நடத்துவதினால் அவைகள் மனிதருக்கு அமைந்து நடப்பதாகத் தோன்றினும், அவைகளை ஒருபொழுதும் நம்பப் படாது; அவைகளால் அபாயம் நேரிடாதபடி எப்பொழுதும், எச்சரிக்கையா யிருக்கவேண்டும். ஒரு

பொழுதும் கரடிகளை மூக்கின் முனையில் அடிக்க வொண்ணாது; அடித்தாலோ அவைகள் அடங்காத மூர்க்கம் கொள்ளும். கரடிகளுக்குக் கட்புலன், செவிப்புலன், பரிசவுணர்ச்சி ஆகிய இம் மூன்றும் மிகவும் கூர்மை. முக்கியமாய்க் கரடிகளுடைய நாசித்துவாரங்கள் அகன்று, வாசனைகளை உட்கொள்வதற்குத் தகுந்தவைகளா யிருப்பதனால், கரடிகளைப்போல் அத்தனை கூர்மையான நாசிப்புலனுடைய மிருகங்கள் வேறில்லை யென்று சொல்வார்கள். கரடிகள் அதிக பலமுள்ள மிருகங்கள். சிலஜாதிக் கரடிகள் எளிதில் மரம் ஏறும். துருவ தேசங்களிற் சஞ்சரிக்கிற கரடிகள், ஜலத்தினுள்ளே மிகுந்த விரைவாக முழுகுவதுமன்றி, பதினெட்டு இருபது மைல் தூரம் நீந்தவும் கூடும். கரடிக் குரலோசை ஒருவிதமாக வெடுவெடுப்பாய் உறுமுவது போலிருக்கும்.

4. கரடிகள் தனித்திருக்கும் தன்மையுள்ளவைகள். சாதாரண கரடி ஒருவரும் போகாத ஒதுக்கமான இடங்களில் அடையும். அவற்றில் இருள் நிறைந்த காடுகளில் சில குகைகளையாவது, முது மரங்களிலுள்ள பொந்துகளையாவது தெரிந்து அங்கே தங்கும். அவைகள் அகப்படா திருக்கும்பொழுது, அது தானாகத் தரையை நோண்டித் தகுதியான குழியை உண்டாக்கிக் கொள்வதும், மரக் கொம்புகளினால் பரும்படியான இருப்பிடத்தைச் செய்து அதற்கு மிருதுவான புல்லணை போட்டுக்கொள்வதும் வழக்கம்.

5. கரடிகள் ஆடு மாடுகளைச் சங்கரிப்பதுண்டு. வயலில் விளைந்திருக்கின்ற தானியங்களையே அவைகள் பெரும்பாலும் சேதம் பண்ணும். யாராவது கரடி

களைக் காயப்படுத்தினால், அவை பயங்கரமான பகைவருக்கு ஒப்பாக அவர்கள்மேல் உக்கிரத்துடன் பாய்ந்து விழுந்து, அவர்களை முன் கால்களால் இறுக்கிப் பிடித்துத் தொண்டையை நெரித்துக் கொல்லும். கரடிகளுக்குக் கோபம் உண்டாகும் பொழுது, அவை பயங்கரமாக உறுமிப் பற்களைக் கடிக்கும். கார்காலத்தில் அங்கங்கே தங்கள் குழிகளுக்குத் திரும்பி சுமார் நாற்பது ஐம்பது நாள் வரையில் ஒன்றும் தின்னாமல் சோம்பலாயிருக்கும்.

6. துருவத்திற்குச் சமீபமான தேசங்களின் கரடிகள் கடற்கரையிலும், நீர் உறைவதினால் உண்டாகும் தீவுகளிலும் சஞ்சரிக்கும். பசி உண்டாகும்பொழுது, ஜலத்தில் நீந்தி அப்படிப்பட்ட பல தீவுகளைக் கடந்து கரையிற் சென்று இரைதேடும். அவை சூரியனுடைய ஒளி தோன்றாதிருக்கின்ற கார்காலத்தில் பனிக்கட்டியில் ஆழமாகக் குழி தோண்டி, அதன் ஒளி திரும்பவும் தோன்றும் வரையில், அந்தக் குழிகளில் அசையாதிருக்கும். அவைகள் உஷ்ணத்தைச் சகிக்கும் தன்மையுள்ளவைகளல்ல. உஷ்ணம் அதிகரிக்கும் பொழுது அந்தக் கரடிகள் மிகவும் வருந்தும். இவ் வகுப்பைச் சார்ந்த கரடிகள் மிகுந்த பலமும் மூர்க்கமு முள்ளவைகள். சில கரடிகள் கப்பற்காரரை வாயினாற் கௌவி எளிதாக இழுத்துக்கொண்டோடி, அவர்களுடைய கூட்டாளிகள் பார்த்திருக்கப் பட்சித்தது முண்டு.

7. கபில வர்ணமுள்ள சாதாரண கரடியோ சில வேளை மாமிசம் தின்பது வழக்கமாயினும், முக்கியமாய்க் கிழங்கு, கீரைவகைகள், தானியம், கனி

இவைகளையே தின்னும். மேலும் அது தேனில் மிகுந்த விருப்பமுடைய தாதலால், அதிகம் உயர்ந்த மரங்களிலும் ஏறித் தேன் எடுத்து உண்ணும். கருங் கரடிக்கும், சாம்பல் நிறக் கரடிக்கும் மாமிசத்தில் அதிகப் பிரியம். என்றாலும் கருங்கரடி பெரும்பாலும் கனிகளையும் கிழங்குகளையும் தின்னும். துருவத்திற்குச் சமீபமான தேசங்களிற் சஞ்சரிக்கின்ற கரடி, மச்சம், நீர்நாய், செத்த திமிங்கிலம், பிணம் இவைகளைத் தின்னும். அது மனிதருடைய இரத்தம் குடிப்பதற்கு மிகுந்த அபேக்ஷையுள்ள தாகையால், அச்சமின்றிச் சிறுபடவுகளில் ஏறி மனிதரைக் கொலை செய்ய வகை பார்க்கும். மேலும் அது பறவைகளின் மாமிசத்தையும், அவை அங்கங்கே தரையில் இட்டிருக்கும் முட்டைகளையும் தேடித் தின்னும்; முயல் முதலிய சிறு மிருகங்களையும் பிடித்துப் பட்சிக்கும்.

8. கரடி குளிர் காலத்தில் குட்டி போடும். அது பெரும்பாலும் ஈற்றுக்கு இரண்டு குட்டி போடும். கரடி தன் குட்டிகளிடத்தில் அதிக பட்சமுள்ளது. அவற்றிற்கு அபாயம் நேரும்பொழுது தன் உயிருள்ள வரைக்கும் அவற்றை இரட்சிக்க வகைபார்க்கும்; தானும் அவையும் வதைக்கப்பட்டால், அது தன் காயங்களுக்காக விசாரப்படாமல் அவற்றிற்காகப் புலம்பும். கபில வர்ணக் கரடி வகுப்பிலுள்ள ஆண் கரடிகள் தங்கள் குட்டிகளைப் பிறந்தவுடனே பட்சிக்கும்படி வகைதேடுவது வழக்க மாதலால், பெண் கரடிகள் அவற்றை ஒளித்து வைத்துக் காத்துக் கொள்ளும். கரடி இருபது வயதாகிற வரையில் வளரும். ஐம்பது வருஷம் வரை உயிர் வாழ்ந்திருக்கும்.

9. பல தேசத்தார்கள் காடி மாமிசம் தின்பார்கள். தானியம் தின்று வளர்ந்து கொழுத்திருக்கின்ற காடியின் மாமிசம் மிகுந்த ருசியுள்ளது. காடிக் குட்டியின் மாமிசம் அதிலும் அதிக ருசியுள்ளது. கிழக் காடிகளின் முன்கா லிறைச்சிக்கு நிகரில்லை. அஃது அத்தனை உத்தமமான உணவாக மதிக்கப்படுகின்றது. காடிக் கொழுப்பு வெண்மையும் மதுரமுமானது. அதனால் உண்டாக்கப்படும் தைலம் முரிவு நெரிவுக்குப் பரம ஔஷதம். அதனைத் தலையில் பூசினால் மயிர் மிகவும் நீளமாய் வளரும். காடியின் பின்துடை இறைச்சிக்கு உப்பிட்டு, அதனை வற்றலாக்கி வைத்திருந்து, ஐரோப்பியரிற் சிலர் சாப்பிடுவார்கள். அது சரீரபுஷ்டி தருவதும் ருசி யுள்ளதுமா யிருப்பதனால், அவர்கள் அதனை அதிகமாக மதிப்பார்கள். கம்ஸ்கட்கா நாட்டார் காடிகளைப் பலவிதமாக உபயோகப் படுத்துவார்கள். காடி யிறைச்சி அவர்களுக்குப் போஜனமாகும்; அதன் தோலினால் மஞ்சங்களும், மஞ்சங்களின் மேற்கட்டிகளும், குல்லாக்களும், ஜலம் கற்போல் உறைந்திருக்கின்ற நிலத்தில், சக்கர மில்லாத பண்டிகளை இழுக்கிற நாய்களின் கழுத்தில் இடப்படும் கருவிகளும் உண்டாக்கப்படும். மேலும் கம்ஸ்கட்கா நாட்டார் தங்கள் பாதரட்சைகளின் அடியில் காடித் தோல்வைத்துத் தைப்பார்கள். காடிக் கொழுப்பில் இறக்கப்படும் தைலத்தினால் விளக்கு எரிப்பார்கள். காடித் தலைகளைச் சிறப்புக்காகவும், வெற்றி முத்திரைகளாகவும் அங்கங்கே மரங்களில் தூக்குவார்கள். அன்றியும் அந்த நாட்டார் ஔஷதப் பிரயோகத்தையும், இரண வைத்திய விஷயத்தையுங் குறித்து அடைந்த சொற்ப அறிவைக் காடிகளின் உதவியினா-

லேயே அடைந்தார்கள். எப்படியெனில், கரடி காயம் பட்டிருக்கும்பொழுது அக்காயங்களுக்கு மேல் இடுகின்ற மூலிகைகளையும், வியாதியா யிருக்கும்பொழுது அது உட்கொள்ளுகின்ற பயிர் பூண்டுகளையும் கருத்தாய்க் கண்டறிந் திருப்பதினாலேதான். ஆதியிலே அவர்கள் கரடி கூத்தாடுவதைக் கண்டு நடனம் பழகினார்கள். ஆதலால் அவர்கள் நடனத்திற்குக் கரடி நடனமென்று பெயர். ருஷியா தேசத்திலுள்ள பெரியோர்கள் காடித்தோலை அதன் உரோமத்தி னிமித்தம் வியந்து கொள்வார்கள். அவர்கள் அதனைக் குளிர் காலத்தில் அங்கிகளாகத் தரிப்பார்கள். அமெரிக்கா கண்டத்திலே இறைச்சி, தோல் இவைகளுக்காக எண்ணிறந்த காடிகள் வருஷந்தோறும் கொல்லப்படும். அங்கே காடித் தோல் முக்கியமான வர்த்தகப் பொருளாய் இருக்கின்றது. அங்கில தேசத்தில் கரடித் தோலால் கைத்துப்பாக்கி யுறை முதலியவைகள் செய்யப் படுவது மன்றி, சாரதிகள் பண்டி செலுத்தும்படி உட்காந்திருக்கும் பீடங்களும் மூடப்படும். பதஞ் செய்யப்பட்ட கரடித் தோல் அநேக பலமான வேலைப் பாடுகளுக்கு உபயோகமாகின்றது. இந்தியாதேசத்திலும் மறுதேசங்களிலு முள்ளவர்கள், ஜனங்களுக்கு விநோதம் செய்வதற்காக, மேற் சொல்லியபடி கரடிகளுக்கு விளையாட்டுகளைக் கற்றுக் கொடுப்பார்கள். மேலும் வெவ்வேறு வகுப்பான கரடிகள், அந்தந்த தேசங்களிலுள்ள வன மிருகாசயங்களில் வேடிக்கை காண்பிக்கும் பொருட்டுச் சேர்க்கப்படுவதுண்டு.

12. கடமையும் கீழ்ப்படிதலும்

ஐரோப்பா கண்டத்தில் ருஷியாவைச் சேர்ந்த க்ரி-மியா என்னும் தீபகற்பத்தில் அங்கிலேயருக்கும் ருஷி-யருக்கும் 25 வருஷங்களுக்கு முன் ஒரு யுத்தம் நடந்ததும், அந்த யுத்தத்தில் அறுநூறு போர்வீரர் அடங்கிய அங்கிலேய குதிரைப் பட்டாள மொன்று வீராவேசத்துடன் போராடியதும் சரித்திர நூல் படித்-தவர்கள் நன்றாக அறிவர். அந்தப் போர்வீரர்களுக்கு அப்போது தவறான கட்டளை யொன்று பிறப்பிக்கப்-பட்டது. அக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தால் உடனே சாவு நிச்சயமென்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்-தும், அவர்கள் உயிர்போனாலும் ஏது வாதம் பண்ணா-மல் சொன்னபடி கேட்பதே தங்கள் கடமை யென்ப-தையும் அறிந்து, அவ்வண்ணமே நடந்தார்கள்.

2. எதிர் பேசாமல் பெரியோர் கட்டளைக்குக் கீழ்ப்படிவது எவர்க்கும் இன்றியமையாத கடமை யென்பது இவ் வறுநூறு வீரர்கள் செய்த சாகசச் செயலால் தெளிவாகின்றது. இவ்விதமான சிறந்த காரியங்கள் நமக்கு நேரிடுவது அரிதானாலும், அவரவர் நிலைமைக்கேற்ற காரியங்களில் தப்பாமல் கீழ்ப்படிவது கடமை. 'தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பர்'. முக்-கியமாய் இப் புத்தகத்தைப் படிக்கும் சிறுவர்க்குக் கீழ்ப்படிதல் இன்றியமையாத நற்குணமாம். மற்றத் தேசத்தார் யுத்தரங்கத்தில் "ஜயம் ஜயம்" என்பதையே

சேனைகளைச் சந்தோஷிப்பிக்கும் சங்கேத நீதிமொழியாகக் கொண் டிருக்கிறார்க ளென்றாலும் அங்கிலேயர் மட்டும் "கடமை" என்பதையே தமக் குரிய சங்கேத மொழியாகக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கிலேயச் சிறுவர்கள் தமது சொந்த வீடே தாம் போராடுகிற போர்க்களமாயும், மூர்க்க குணமே தாம் எதிர்க்கத்தக்க எதிரியாயு மிருப்பினும், தமக்குரிய சங்கேத நீதிமொழியைக் கேட்டு அதன்படி நடக்க ஒருபோதும் பின்வாங்குவதில்லை. வாழ்நாளில் என்றைக்கோ ஒருநாள் எப்பொழுதும் பேரிருக்கத் தக்கதான ஒரு வீரச்செயல் செய்வது அத்தனை கடினமானதன்று; நாளும், சில வேளைகளில் ஒரு தினத்தில் பல தடவையும், பிறருடைய கருத்துக்கு இசையத் தம்முடைய மனப்போக்கை மறுத்து நடப்பது மிகவும் கடினமானதாம்.

3. பெரியோருக்குக் கீழ்ப்படிந்து அவர்கள் சொல்லுகிறபடி கேட்டுச் சரியாக நடக்கிற குணம் சிறுவர்களிடத்தில் அவசியம் இருத்தல் வேண்டும். இந்தக் கீழ்ப்படிகிற குணமொன்று இருக்குமானால் இதனைவிட அழகு வேறு வேண்டுவதில்லை. சிறுவர்களுக்கு நன்மை தீமைகளைப் பகுத்தறியச் சுயபுத்தி கிடையாதாகையால், அவர்களைக் காப்பாற்றுகிறவர்கள் தாம் அதனைத் தெரிந்து அதற்கேற்பச் சிறுவர்களை நடத்தி விடவேண்டும். ஆதலால் அந்தப் பெரியோரிடுகிற கட்டளை இன்ன காரியத்திற்கென்று தமக்குத் தெரியாமலிருந்தாலும், சிறுவர்கள் பூரண நம்பிக்கையோடு அப்படியே நடந்துவரவேண்டும்.

4. இதற்குத் திருஷ்டாந்தமாகச் சிறிய கதை ஒன் றுண்டு; சில நாளைக்கு முன்னே ஒரு சிறு

குழந்தை தன் கீழ்ப்படிகிற குணத்தால் வெகு பயங்கரமான அபாயத்தினின்றும் தப்பிப் பிழைத்தது. அந்தக் குழந்தையின் தந்தை இருப்புப்பாதை வண்டியோடுகிற வழியில் வண்டிகளுக்குக் குறிகாட்டுகிறவன். அந்த வழியில் ஓரிடத்திலே நின்றுகொண்டு வருகிற புகை வண்டிகளெல்லாம் ஒரு அபாயமுமில்லாமல் போம்படி அப் புகை வண்டியோட்டுகிறவர்களுக்கு எச்சரிக்கை சொல்லுவது அவன் வேலை. அப்படியிருக்க, ஒரு நாள் அவன் ஒரு வேகமான வண்டி வரவேண்டுவதை எதிர்பார்த்துக் காத்துக்கொண் டிருக்கையில், ஒரு குழந்தை அந்தப் பாதையின் எதிர்ப்புறத்திலிருந்து தன்னிடம் வந்துகொண் டிருக்கக் கண்டான். அது கண்டு அவன் மிகவும் பயந்து சீக்கிரமாக ஓடி அதனை எடுத்துக்கொண்டு வர வேண்டு மென்று முதலில் எண்ணினான். அவன் அவ்விடம் விட்டுப் போனவுடனே வண்டி வந்துவிடுமாயின், அதற்குத் தக்கபடி குறிகாட்டாமற் போனால் அநேக உயிர்களுக்குச் சேதமுண்டாகும். அவன் இருக்குமிடத்திற்குச் சிறிது தூரத்தில் அந்தப் பாதை நன்றாய் வளைந்திருந்ததனால், வண்டி இவ்வளவு தூரத்தில் வருகிற தென்பதையும் கண்டுகொள்ளக் கூட வில்லை. எப்படியும் அந்த வண்டி வெகு சமீபத்தில் வந்துகொண் டிருக்கவேண்டு மென்பது மட்டும் அவனுக்குத் தெரியும். இதற்கு என்ன செய்கிற தென்று அவன் திகிற்பட்டுக்கொண்டே தான் நின்ற விடத்திலேயே நின்று அக் குழந்தையைக் கவனித்துக்கொண் டிருக்கையில், அது தன் குழந்தையெனத் தெரிந்தது. அந்த நிமிஷத்திலேயே புகை வண்டி வருகிற பேரிரைச்சல் கேட்டது. மறு நிமிஷத்தில் பயங்கரமாகப்

புகை வண்டித் தொடர் வந்துவிட்டது. அச் சமயத்தில் குழந்தை வண்டிப்பாதையின் ஒரு தண்டவாளத்தைக் கடந்து வந்துகொண்டிருந்தது; வண்டி வருவதற்குள் மற்றொரு தண்டவாளத்தையும் தாண்டிவர நேரமில்லை. ஆ! அக்குழந்தை அவ் வபாயத்திற்கு எப்படித் தப்பிப் பிழைக்கும்! கீழ்ப்படிகிற குணம் ஒன்று இருந்தால் மட்டுமே அக் குழந்தை அத் தருணத்தில் தப்பும். அது கண்டு அவன் தான் இருந்த விடம் விட்டு அசையாமலே குழந்தையைப் பார்த்து 'அங்கேயே படுத்துக்கொள்' என்றான். அப்படியே இரண்டு தண்டவாளத்திற்கும் நடுப் பள்ளத்தில் அது படுத்துக் கொண்டது. அக் குழந்தையின்மேல் வெகு பயங்கரமான இரைச்சலோடும் ஆரவாரமுமாய் மறு நிமிஷத்தில் வண்டி ஓடி வந்தது. வண்டி அப்புறம் போனதும் குழந்தை உயிரோ டிராதென்று நிராசையோடு அவன் அதனைப் போய்ப் பார்க்கையில், சிறிதும் அபாய மில்லாமல் குழந்தை அப்படியே இரண்டு தண்டவாளத்துக்கும் நடுப் பள்ளத்தில் படுத்துக்கொண் டிருந்தது. அந்தக் குழந்தை தன் தகப்பனிடத்தில் முழு நம்பிக்கை கொண்டு அவன் சொன்னபடி கேட்டுக் கீழ்ப்படிந்து, அந்தப் பெரிய வண்டிக்குப் பயப்படாமல் அதற்கு எதிராகப் படுத்ததனாலல்லவா அவ் வண்டியின் கீழ் அகப்பட்டு நசுங்கிப் போகாமல் தப்பிப் பிழைத்தது! 'வணங்கின புல் பிழைக்கும்; வணங்காதது உயிர்போக்கடிக்கும்' என்பதற்கு இதுவே திருஷ்டாந்தம்.

5. கீழ்ப்படிதலென்பது அத்தனையாகக் கடினமான காரியமன்று. வெகுவாய் எவர்க்கும் அமைதி-

யாய் இருப்பதற்கு ஏற்ற எளிதான வழி அதுவே-யாம். பெரியோரை நேசித்து அவர்கள் சொல்லுகிறபடி கேட்டு நடக்கின்ற பிள்ளைகளே சுகமாய்க் களிப்புற் றிருப்பார்கள். சொன்னதைக் கேளாமல் கோபமும் எரிச்சலுமாய் இருக்கின்ற பிள்ளைகளோ தாமும் வருந்-திப் பிறருக்கும் துன்ப முண்டாக்குவார்கள்.

6. உரிய கடமையின் உணர்வே ஜீவகாலம் முழு-வதும் உங்களுக்குப் பெருந் துணையா யிருக்கிறபடியால் அதனைப்பற்றி இன்னும் ஒன்று சொல்லுவோம். பல-விதமான ஜனங்களுக்கும் நாம் உடன்பட்டு நடக்க வேண்டிய விஷயத்தில் கடமைகள் அநேகமாயிருக்கின் றன. தனிகனாவதும் தரித்திரனாவதும், சௌக்கியப் படுவதும் அசௌக்கியப்படுவதும், நம்முடைய சுவா-தீனத்தில் இல்லை. ஆயினும் பலவிதங்களிலும் நம்-முடைய கடமைகளைச் செய்வது மாத்திரம் அவசிய-மானது. மிகச் சீர் திருந்தியவர்களுக்கு, எவ்வளவு கஷ்டம் நேர்வதாயினும், எவ்வகை அபாயம் விளைவ-தாயினும் கடமைக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மிகவும் முக்கியமானது. பெருத்த காரியங்களுக்காக நாம் பாடு பட வேண்டும், முன்னோர்கள் போலச் சமயம் நேர்ந்-தால் உயிரையும் கொடுக்கவேண்டும்.

7. ஆதலின் மன்னுயிர்களுக்குப் பெருந் தன்மை உண்டாக்கும் பலவகைக் குணங்களுள் அவரவர் கட-மையைக் கருத்தாய் உணர்வதே முக்கியமானது. இவ் விஷயத்தில் அது ஒப்புயர்வில்லாத பெருங் குணமாம். கடமையாவது தன்னயத்தையே தேடுவதற் கேற்றதாய் நூதனமாக நடக்கச் செய்யும் சில நற்குணங்களைப் போன்றதாகாது; நாநாவிதமான நன்மை நாணயம்

முதலியவற்றின் சாரமான பற்பல நீதிகள் அமைந்த நற்குணமாம். தன் கடமையையே குறிப்பாகக் கருதித் தன் குணதோஷங்களைத் தானே ஆராய்கின்றவனுக்கு எவ்விதமான மாட்சிமையையும் உண்டாக்க இக் குணங்கள் தவிர வேறொன்றும் வேண்டா. கடமையாவது தன் நன்மையைப் பெரிதாக நினையாமல் லோகோபகாரத்தையே நாடி நடப்பதாம். ஆதலால் இக் குணத்தைக் கைக்கொண்டவர்கள், சுயப் பிரயோஜனத்தைச் சிறிதும் எண்ணாது நடக்கவேண்டும். மேலும் சர்வஜன சம்மதமாகாமல் பலருடைய கருத்துக்கு விரோதமாயுள்ள தீர்மானங்களை விலக்குவதும் கடமையாதலால் கடமைப்படி நடப்பவருக்கு மிகுந்த தைரியமும் மனத்திட்பமும் வேண்டும். பொய் புரளி மோசம் வஞ்சனை இவைகளை விலக்குவதும் கடமையாதலால் கடமைப்படி உண்மையாய் நடப்பவர் பிராமாணிகர்களாயும், உண்மை தவறாதவர்களாயும், மன நிலையுள்ளவர்களாயு மிருத்தல் வேண்டும். செய்கருமத்தில் சத்தியம் தவறாமை, நாணயம், தன்னடக்கம், உழைப்பு, உலக நீதி, தருமம், பூததயை, பச்சாத்தாபம் முதலிய நற்குணங்கள் யாவும் கடமைப்படி நடப்பவரிடத்தில் குடிகொண் டிருக்க வேண்டும். ஜாதி மதாசாரங்களைக் கைவிடாதிருப்பதும் கடமையே. நம்மைப் பிறப்பித்துப் பாதுகாக்கின்ற கடவுளுக்குரிய கடமைகளைச் செலுத்துவது நமக்கு முதன்மையான வேதவிதி ; இவ் வுலகத்தார்க்குரிய கடமைகளைச் செலுத்துவது இரண்டாம் விதியாகும்.

13. ஒரு சிறு கூனன் கதை

தார்த்தாரி தேசத்துக் காஸ்கர் பட்டணத்திலே பூர்வ காலத்தில் தையற்காரன் ஒருவ னிருந்தனன். ஒரு நாள் மாலை வேளையில் சிறிய கூனனொருவன் அந்தத் தையற்காரன் கடைக்கு வந்து வேடிக்கைகள் செய்து வினோதமாய்ப் பாடிக் கூத்தாடினான். அது கண்டு தையற்காரன் மிகவும் சந்தோஷப்பட்டு, அன்றிரவு தன் வீட்டிலேயே போஜனம் பண்ணும்படி அவனை வேண்டி யழைத்தான். அப்படியே அன்றிரவில் அவர்கள் புசிக்க உட்காருகையில், அவன் மனைவி மதுரமாய்ச் சமைத்த மீனைக் கொண்டுவந்து வைத்தாள். அதனைக் கூனன் பெரிய பெரிய கவளமாய் எடுத்துச் சரசர வென்று புசிக்க ஆரம்பித்தான். புசித்த வேகத்தில் அந்தப் போஜனத்திலிருந்த ஏதோ ஒரு முள் அவன் தொண்டையில் அடைத்துக்கொள்ள, மாரடைத்து மரித்தவன் போல அவன் கீழே விழுந்தான்.

2. அதைக் கண்டு தையற்காரனும், அவனுடைய மனைவியும், ஓகோ இதென்ன! நமது வீட்டில் இவன் இப்படி வீழ்ந்திருப்பதை யாராவது கண்டால், நாமே இந்தக் கூனனைக் கொன்றதாக நினைத்து நம்மைப் பிடித்துக்கொள்வார்களே யென்று மிகவும் திகிலடைந்-

தார்கள். அதற்காக அவர்கள் ஓர் உபாயம் செய்தார்கள். அவர்கள் இருந்த வீட்டிற்கு இரண்டொரு வீட்டுக்கு அப்பால் ஒரு வீட்டிலே வைத்தியனொருவன் இருந்தான். இந்தத் தையற்காரனும் அவன் மனைவியுமாய் அந்தக் கூனனை மெல்லத் தூக்கிக்கொண்டுபோய் அவ் வைத்தியன் வீட்டுக் கதவை இடித்தார்கள். யாரோ ஒரு வேலைக்காரன் வந்து கதவைத் திறந்து என்ன செய்தி யென்று கேட்டான். வைத்தியருக்குக் காட்ட ஒரு நோயாளியை அழைத்து வந்திருக்கிறோமென்று அவர்கள் சொல்லக் கேட்டு, அவன் அச் செய்தியைத் தன் யஜமானனோடு சொல்லப் போனான். அந்தத் தருணத்தில் தையற்காரனும் அவன் மனைவியும் அந்த வேலைக்காரனுக்குத் தெரியாமலே கூனனைத் தூக்கிக்கொண்டு அவன் பின்னே சென்று, வைத்தியனிருந்த அறையின் கதவோரமாய்ச் சுவரிலே தந்திரமாகச் சார்த்தி வைத்துவிட்டு, ஒருவருக்குந் தெரியாமல் மெல்ல வீடுவந்து சேர்ந்தார்கள். வைத்தியன் அவசரமாய் அறையினின்றும் எழுந்து வந்தபோது, அவனுடைய கை, அண்டையில் சார்த்தியிருந்த கூனன்மேல் வேகமா யிடித்தது. அந்த இடி பட்டவுடனே கூனன் அம் மேல்மாளிகையிலிருந்து உருண்டு கீழே விழுந்தான். வைத்தியன் இதென்னவென்று விளக்குக் கொண்டு வரச் சொல்லிப் பார்க்க, கூனன் விழுந்து செத்துக் கிடக்கிறானென்று கண்டு, தானே அவனைக் கொன்றதாக நினைத்துத் திகில் அடைந்தான். பின்பு அவனைப் பிழைப்பிப்பது அசாத்தியமென்று கண்டு, இப்போது நாம் என்ன செய்கிறதென்று அந்த வைத்தியனும் தையற்காரனைப் போலவே சிந்திக்கலானான்.

3. கடைசியில் ஒருவிதமாய் ஆலோசனை செய்து அவ் வைத்தியனும் அவன் மனைவியும் நல்ல நிசிவேளையில் அண்டையிலிருந்த ஒரு வர்த்தகன் வீட்டில் புகைபோக்கியின் வழியாகக் கையிலே கயிற்றைக் கட்டிக் குள்ளனை உள்ளே இறக்கிவிட்டுக் கயிற்றை வாங்கிக் கொண்டார்கள். அவ் வீட்டு வர்த்தகன் புகைக்கூண்டின் வழியாய்க் குள்ளன் இறங்குவதைப் பார்த்து, ஓகோ! திருடன் வருகிறானென்று அவனைத் தடியையெடுத்துப் புடைக்க, அத் தருணத்தில் குள்ளன் கீழே விழுந்தான். அதுகண்டு தானே அவனைக் கொன்றதாக நினைத்து, வர்த்தகன் தனக்குக் கொலைபாதகனென்ற குற்றம் வருமேயெனப் பயந்து, அவனைத் தோளிலே தூக்கிக்கொண்டு தெருவிலேபோய் அண்டை வீட்டுச் சுவரோடு சார்த்திவிட்டு ஒருவருக்குந் தெரியாமல் வெகு சிக்கிரமாக வீடுவந்து சேர்ந்தான்.

4. பொழுதுவிடிகிற தருணத்தில் அவ் வழியாய் வந்த யாரோ ஒரு வியாபாரி, தற்செயலாய் அந்தச் சுவரோரமாக வந்து அங்கே சார்த்தியிருந்த குள்ளனைத் தொட, அவன் தன்மேலேயே சாய்ந்து விழவே, திருடனென்றெண்ணி அவனை அடித்துத் திருடன் திருடனென்று கூவினான். அதைக்கேட்டுப் போலீசு சேவகர்கள் ஓடிவந்து பார்க்க, அந்த வியாபாரி அப்போதும் கையோயாமல் அவனை அடித்துக்கொண்டிருக்கக் கண்டு, அவனே அக் குள்ளனைக் கொன்றானென்று அவனைப் பிடித்துக்கொண்டார்கள்.

5. மறுநாள் காலையில் அதனைப்பற்றி விசாரணை நடந்து அந்த வியாபாரியைக் கொலை செய்யும்படி தீர்மானம் ஆயிற்று. அப்படியே அவனைக் கொலைக்

களத்திற்குக் கொண்டுபோனார்கள். அவனைத் தூக்கிடப் போகிற தருணத்தில் அங்கே வேடிக்கை பார்க்க வந்தவர்களுடைய கூட்டத்திலிருந்த வர்த்தகன், சரேலென்று எதிரே வந்து, அவனைத் தூக்கிடவேண்டாம் குள்ளனைக் கொன்றவன் நானென்று உரத்துக் கூவி, தன் வீட்டுப் புகைபோக்கியின் வழியாய் அவன் இறங்கும்போது தான் அவனை அடித்ததும், அதனால் அவன் இறந்துபோகவே தெருவிலே கொண்டு நிறுத்தினதுமாகிய தன் கதையைக் கூறினான்.

6. அதனைக்கேட்டு நியாயாதிபதி, ஆனால் இந்த வியாபாரியை விட்டுவிட்டு வர்த்தகனைப் பிடித்துத் தூக்கி விடுங்களென்றான். அப்படியே அந்த வர்த்தகனைப் பிடிக்கப் போனார்கள். அத் தருணத்தில் அந்தக் கூட்டத்தினின்றும் எவன் வெளியே வந்து நிற்பான்! வைத்தியன சபையோர்முன் வந்து நின்று 'ஒரு பாவமுமறியாத இந்த வர்த்தகனை ஏன் அநியாயமாய்க் கொல்லவேண்டும்? நான் மேல்மாடியிலிருந்து கீழே பிடித்துத் தள்ளினதனால் இவன் இறந்துபோனான்; பின்பு நான் அவ்வுடலை இந்த வர்த்தகன் வீட்டில் போட்டு விட்டேன்' என்று உள்ளதை உள்ளபடியே இயம்பினான்.

7. அதனைக் கேட்டு நியாயாதிபதி அவனை விட்டுவிட்டு, வைத்தியனைக் கொலைசெய்யக் கட்டளையிடுகிற தருணத்தில், தையற்காரன் கண்ணும் கண்ணீருமாய் எதிரே வந்து, 'இந்தக் குள்ளன் கொல்லப்பட்டதற்காக எவனையாவது தூக்கிவிட வேண்டுமென்றால், அந்தத் தண்டனை எனக்கே விதிக்கவேண்டும்' என்று சொல்லி, தான் விருந்தளிக்கும்போது தொண்டையில்

முள்ளடைத்துக்கொண்டு அவன் இறந்துபோனதையும், பின்பு அந்தப் பிணத்தைத் தானும் தன் மனைவியுமாக வைத்தியன் வீட்டுச் சுவரிலே சார்த்திவிட்டு வந்ததை-யும் வெளிப்படையாகக் கூறினான்.

8. அதனைக் கேட்கவே இன்னது செய்கிறதென்று நியாயாதிபதிக்குத் தோன்றவில்லை. இப்போது யாரைத் தூக்கிற் போடுகிறதென்று அவன் சிந்தித்துக்கொண்டிருந்தான். இப்படி அவன் மனம் தடுமாறி நிற்கிற தருணத்தில் மிகவும் உரப்பாய்ப் பெருமூச்சு ஒன்று கேட்டது. நியாயாதிபதி நேராய்ப் பார்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட குள்ளன், கொஞ்சம் களை தெளிந்து அவ்வாறு பெருமூச்செறிந்தான். மறுபடியும் ஒரு தரம் அக் குள்ளன் பெருமூச்சு விட்டு உரப்பாய் ஓர் இரும விருமினான். இருமும்போது தொண்டையில் அடைத்துக்கொண் டிருந்த முள் வெளியே வந்து விழுந்தது. யாவரும் இதென்ன வென்று ஆச்சரியப்-பட்டு நிற்க, அவன் உடம்பில் ஒன்றுமில்லாமல் எழுந்து உட்கார்ந்தான். இப்படிக் கடைசியாக அந்தச் சிறு கூனனும் சாகவில்லை; அவனுக்காக மற்றவர்களும் கொல்லப்படாமல் தப்பினார்கள்.

14. காண்டா மிருகம்

காண்டா மிருகம் ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் காணப்படுகின்றது. ஆசியாவிலுள்ள காண்டா மிருகமானது வங்காளம், சீயாம், கொச்சின்சீனம், யாவக தீவு, சுமத்திரா தீவு, சீனதேசத்தின் ஒரு பாகம் ஆகிய இவைகளிற் சஞ்சரிக்கின்றது. ஆபிரிக்காவில் உள்ள காண்டா மிருகம் அபிசீனியாவிலும், நன்னம்பிக்கை முனை நாட்டிலும் சஞ்சரிக்கின்றது.

2. காண்டா மிருகமானது அவலட்சணமான தோற்றமுள்ள பெரு மிருகம். அதன் நீளம் மூஞ்சியின் முனைமுதல், வாலின் அடிபரியந்தம் பன்னிரண்டு அடி; உயரம் ஆறு ஏழு அடி. அதன் உடலின் சுற்றளவு நீளத்தைப் பார்க்கிலும் சற்றுக் குறைவு. காண்டா மிருகத்தின் முதுகு யானையின் முதுகுபோல் வில் வளைவான தன்று, அஃது அதிகமாய் உள்ளே கவிந்திருக்கும். அதன் தலை ஒரு மாதிரியாகப் பருத்திருக்கும்; மேலுதடு ஒரு விதமாகச் சிறுத்த தும்பிக்கை போலச் சற்று நீண்டிருக்கும். காதுகள் நிமிர்ந்து கூர்மையா யிருக்கும்; பாதிக் கண் திறந்தாற்போல் இருக்கிற அதன் கண்கள், மூக்கிற்கு மிகவும் சமீபமாயிருக்கும். மூக்கிற்கு அத்தனைச் சமீபத்திற் கண் இருக்கின்ற நாற்கால் மிருகம் நாம் அறிந்தவற்றுள் இஃது ஒன்று தவிர, வேறு இல்லை.

காண்டா மிருகத்தின் கால்கள் உரத்துப் பருத்துக் குறுகியிருக்கும். அதன் குளம்பு மூன்று பாகமாகப் பிரிந்து முன் நோக்கி யிருக்கும். இந்தியாவிலும் ஆபிரிக்காவிலுமுள்ள காண்டா மிருகங்களின் பொது-வான தோற்றம் இதுவே. ஆயினும் இரண்டு விஷ-யங்களில் அவை ஒன்றுக்கொன்று வெகு பேதமுள்-ளவைகளா யிருக்கின்றன. ஆசியாவிலுள்ள காண்டா மிருகத்தின் மூக்குக்கு மேலே கடினமானதும் சற்று வளைந்து கூர் முனை யுள்ளதுமாகிய ஒற்றைக் கொம்பு இருக்கின்றது. அதன் நீளம் ஏறக்குறைய இரண்டு அடி; அடிக் கொம்பின் சுற்றளவு பதினெட்டு அங்-குலம். அந்தச் சாதிக் காண்டா மிருகத்தின் தோல் மிகவும் தடித்து விறைத்திருக்கும். அதன் மேற்-புறத்தே வயிரமான கட்டிகள் மூடியிருக்கும். காண்டா மிருகத்தின் தோல் கழுத்திலும் கால்களிலும் பல பெருமடிப்புகளாகத் திரைந்திருக்கும். ஆபிரிக்கா தேசத்திலுள்ள காண்டா மிருகத்தின் தோலில் அத்-தனைப் பெரிய மடிப்புகள் இல்லை. அதன் தோளிலும், பின் பக்கங்களிலும், வயிற்றுப் பக்கங்களிலும் சிறு திரைவுகள் மாத்திரம் உண்டு. இப்படி இருப்பதினால் அதனை ஆசியாவிலுள்ள சாதாரண காண்டா மிருகத்-தோடு ஒத்துப் பார்க்குமிடத்து அதன் தோல் கொஞ்-சம் குறைய முழுமையும் மிருதுவானதாகத் தோன்-றும். ஆயினும் காரியத்தளவில் அது விறைத்ததும், கட்டிகளால் நிறைந்ததுமா யிருக்கின்றது. அத-னிடத்திலுள்ள மற்றொரு விசேஷம், அதற்கு இரண்டு கொம்புகள் இருப்பதே. அவற்றுள் ஒன்று சிறிது, மற்றது பெரிது. சிறியது மேலும், பெரியது கீழுமாய் இரண்டும் மூக்கின்மீது இருக்கும். இத்தன்மையான

விசேஷத்தை யுடையதாகிய ஆபிரிக்காவின் காண்டா மிருகம் சாந்தமா யிருக்கும்பொழுது அதன் கொம்புகள் தசைபோலத் தளர்ந்தும் உக்கிரங் கொள்ளும்பொழுது உரத்து விறைத்தும் இருக்கும். மேற் சொல்லிய இரண்டுவகைக் காண்டாமிருகங்களும் சற்றுக் கருமையான வர்ணமுடையவைகளா யிருக்கும். அவைகளுடைய சரீரத்திற் செவி நீங்கலாக மற்ற விடங்களில் உரோமம் இல்லை. எவ்வகைக் காண்டா மிருகங்களும் மந்தமும் தூக்கமுமான சாயலுள்ளவைகள். ஆபிரிக்கா தேசத்தில் வேறு இரண்டு ஜாதி வெள்ளைக் காண்டா மிருகங்களும் உண்டு.

3. காண்டா மிருகம் கோபம் மூட்டப்படும் பொழுதும், எதிர்க்கப்படும் பொழுதும் மூர்க்கமுள்ளதும் அபாயம் செய்வதுமா யிருக்கும். மற்றைப்படி இயற்கையாய் அது அமைதியும் சாந்தமுமான மிருகந்தான். அது விரைவாய் ஓடும். அது மந்தமான சாயலுள்ளதாயினும், அதன் செவிப்புலன் கூர்மையாகவும், நாசிப் புலன் மிகவும் அதிகரித்தும் இருக்கும். அது மூர்க்கமுள்ளதுமன்று, அதிக துஷ்டகுணமுள்ளதுமன்று ; ஆயினும் அறிவும் படிவும் அதற்கு இல்லை. இது விஷயத்தில் அது காட்டுப் பன்றியை ஒக்கும். அதனைச் சாதுவாக்குவது மிகவும் அருமை. அது கோபமில்லாதிருக்கும்பொழுது அதன் சத்தம் காட்டுப் பன்றி உறுமுவதுபோல் இருக்கும் ; கோபங் கொண் டிருக்கும்பொழுது, அது வெகு தூரமட்டும் கேட்கத் தக்கதாக மிகவும் உரத்துக் கத்தும். சாதாரண காண்டா மிருகத்தின் தோல், கண் செவி இவைகளின் சுற்றுப் புறங்களிலன்றி மற்றெவ்விடங்-

களிலும், கத்தி வெட்டுக்கு அருமையும், துப்பாக்கிக் குண்டு உருவாமலும் இருக்கும்படியான அத்தனைக் கடினமா யிருக்கின்றது. ஆபிரிக்கா தேசத்திலுள்ள காண்டா மிருகத்தின் தோல் சற்று மிருதுவானது. காண்டா மிருகம் மிகுந்த வலிமையுள்ளது. அதன் மூக்கின்மீது முளைத்திருக்கின்ற கொம்பு அதனைக் காப்பதற்கு ஏற்ற அதிக பயங்கரமான கருவி. அதன் கண்கள் உருவத்திலும் ஸ்தானத்திலும் விகாரமுள்ளவைகளா யிருப்பதனால், அது தனக்கு எதிரே இருக்கிற பொருள்களை மாத்திரம் காணக்கூடும். காண்டா மிருகத்தின் கூர்முனை யுள்ளதாகிய மேலுதடு ஆறு ஏழு அங்குல வளவிற்கு நீளும் தன்மையுள்ளதும் ஒருவாறு யானையின் துதிக்கைக்கு ஒப்பானதுமா யிருப்பதனால், அது தனக்குச் சமீபத்திலுள்ள பொருள்களை எளிதில் எடுக்கும்.

4. நிழலுள்ள மரங்கள் செறிந்த காடுகளிலும், ஆறுகளின் அயலிடங்களிலும், சதுப்பு நிலங்களிலும் சஞ்சரிப்பதே காண்டா மிருகத்திற்கு இஷ்டம். அவ்வப்போது தண்ணீரில் முழுகிப் பன்றிகளைப்போலச் சேற்றிற் புரள்வது அதற்குத் திருப்தி. யானைகளைப் போலக் காண்டா மிருகங்கள் கூட்டம் கூட்டமாகப் போகிறதில்லை. அவை தனிமையாயிருக்கும் தன்மையுள்ளவை; யானையிலும் அதிக மூர்க்ககுண முள்ளவை; அவற்றைக் கிழ்ப்படுத்துவது பிரயாசம். அவற்றைக் கோபம் மூட்டினாலொழிய அவை மனிதர்மேற் பாய்கிறதில்லை. கோபம்கொண்டாலோ அவை அதிக உக்கிரத்தைக் காட்டும். அப்பொழுது அவற்றைப் பார்த்தால் மிகுந்த பயங்கரமா யிருக்கும். அவற்-

றிற்கு உக்கிரம் உண்டாகும் பொழுது, கொம்புகள் தரையிற் புதையும்படி குத்தி, மண் கட்டிகளையும் கற்களையும் பெயர்த்து, தலைக்குமேலாக நெடுந் தூரமட்டும் செல்லும்படி வீசும்.

5. காண்டா மிருகம் பரும்படியான கீரை, புல் இவற்றையும், முட்பூண்டுகளையும் தின்னும். அதற்குச் செழித்த மைதானங்களிலுள்ள மிருதுவான புற்களினும், இவையே அதிக விருப்பம். இன்னும் அதற்குக் கரும்பினிடத்தில் மிகுந்த இஷ்டம்; தானிய வகைகள் எல்லாம் தின்னும். அது மாமிச பட்சணியன்று. அது தன் நீளமான மேலுதடு, நா இவைகளைக் கொண்டு மரங்களின் இலைகளையும், இளந்தழைகளையும் கொய்து வாய்க்குள் வைத்துத் தின்னும். அது தண்ணீர் அதிகமாகக் குடிக்கும்.

6. காண்டா மிருகம் ஈற்றுக்கு ஒரு குட்டிக்கு அதிகம் ஈனுகிறதில்லை; ஈன்று ஒரு மாத மளவும் அதன் குட்டி ஒரு பெரு நாயைப் பார்க்கிலும் பெரிதாயிராது. அது ஐந்து ஆறு வயசு வரைக்கும் வளரும்; பின்பு வளருகிறதில்லை. காண்டா மிருகம் எண்பது வயசு மட்டும் உயிரோடிருக்கும்.

7. இந்த தேசத்தார்களும், காப்பிரிகளும் காண்டா மிருகத்தின் இறைச்சி தின்பார்கள். அது ருசிகரமான இறைச்சியாக மதிக்கப்படும். எத்தேசத்திலும் பதமிடப்பட்டு வழங்குகிற தோல்களுக்குள் காண்டா மிருகத்தின் தோலைப்போல் அத்தனை கடினமும் உசிதமுமான தோல் வேறில்லை. ஆதலால் காண்டா மிருகத்தின் உறுப்புக ளெல்லாவற்றினும்

அதன் தோலே மிகுந்த உபயோகமுள்ளது. காண்டா மிருகங்கள் சஞ்சரிக்கின்ற தேசங்களில் வாசமாயிருப்பவர்கள் அவற்றின் கொம்பு, குளம்பு, பல் இவற்றையும், வேறு சில உறுப்புகளையும், இரத்தத்தையும் ஔஷதமாக உபயோகிப்பார்கள். சில வேளை வேட்டைக்காரர் விநோதத்திற்காகக் காண்டா மிருகங்களை வேட்டையாடுவார்கள். ஐரோப்பாவில் அங்கங்குள்ள மிருகாசயங்களில் காண்டா மிருகம் காணப்படும்.

15. தன்னயம் பாராட்டுதல்

நமது வாழ்நாளில் நாம் பல பொல்லாத பிசாசுகளோடு எதிர்த்துப் போராட வேண்டி யிருக்கின்றது. அந்தப் பிசாசங்களுள் தன்னயம் பாராட்டல் என்பது ஒன்று; அது மிகவும் விகாரமானது.

2. நம்முள் ஒவ்வொருவருக்கும் கண்களும், காதுகளும், கைகளும், கால்களும், இரண்டு இரண்டாக இருக்கின்றன வல்லவா! அப்படிப் படைத் திருப்பதின் பயனை யோசித்தால், நமது சொந்தத்துக்கு எப்படியோ அப்படியே நாம் பிறர்க்காகவும் பார்க்கவும், கேட்கவும், கையா லுழைக்கவும், காலால் நடக்கவும் வேண்டு மென்பதை நமக்கு நினைப்பூட்டுவதற்காகவே இருக்கின்றன வெனத் தோன்றுகிறது. நல்லது, உங்களுக்கு வாய் எத்தனை இருக்கிறது? அதுமாத்திரம் ஒன்றே; அது சரிதான்! ஏனெனில் நாம் நமக்காக மாத்திரமே புசிக்க வேண்டும், பிறர்க்காக அன்று. கண்கள் முதலியவை இரண்டிரண்டா யிருப்பது அக்கருத்துப்பற்றியே யாயினும், 'தன்னயம் பாராட்டல்' என்கிற பிசாசம் அப்படிச் செய்ய உடன்படுவதன்று. தனக்கே தவிரப் பிறரொருவருக்காக அது காண்பது மில்லை, கேட்பது மில்லை, மற்றெந்த வேலையும் செய்வது மில்லை. நாம் அதற்கு ஒப்பாவோமாயின் ஒரே கண்ணும், ஒரே காதும், ஒரே கையும் உடையவர்க-

ளாகி, மற்ெறாரு கண் காது கையெல்லாம் உயிரற்ற உடலின் கை கால் முதலியவைபோல உபயோகமில்லா-மல் கெட்டுச் சுருங்கிய ஒரு பெரும் பூதம்போலாகி-விடுவோம். அந்தப் பிசாசின் செய்கை என்னவெனில், பிரஜைகளைச் சிறையாகப் பிடித்துத் தனது கோட்-டைக்குள் இழுத்துக்கொண்டு போவதே. அந்தப் பிரஜைகள் அங்கேயே நெடுநாள் நிலைத்திருப்பார்களாயின் அவர்களும் அந்தப் பிசாசைப் போலவே விகாரமான ஒற்றைக் கண் பார்வையுடைய பிராணிக-ளாகத் தலைப்படுவார்கள். இந்த விகாரம் உண்டாவது சரீரத்திலன்று; அவர்களுடைய ஆத்மாவிலேயாம். அவர்கள் தங்களைத் தவிர மற்ற எவரையும் நேசிக்கப் பழகுவதில்லை; தங்களைத் தவிர மற்ற எவரைப் பற்றி-யும் சிந்திப்பது மில்லை; கவலைப்படுவது மில்லை. அந்-தப் பேய் தன் விலங்குகளைப் போட்டுக் கட்டி ஜனங்களைச் சிறையாக்குவதற்கே எப்போதும் முயற்சி செய்து கொண் டிருக்கின்றது. அவர்கள் சிறுவர்களா யிருக்-கும்போதே அது இவ்வேலை செய்ய விரும்புகின்றது.

3. அது உருவங்கொண்டு நமக்குத் தென்படா-தாயின், அது தன் விலங்குகளைப் போட்டுக் கட்டி நம்மைச் சிறையாக்க முயல்கின்ற தென்பதை நாம் கண்டுகொள்கிற விதம் எப்படி யென்பீர்களோ, கேளுங்கள்.

4. நாம் மற்றவர்களைப்பற்றி அவ்வளவாகக் கவ-னியாமல் நம்முடைய நன்மையைப் பற்றியே விசேஷ-மாக நினைக்கத் தலைப்பட்டதாகத் தெரியவருமாயின், அப்போது அப் பூதம் நம்மைத் தொடருகிறதென்று நாம் நிச்சயமாய் நினைக்கவேண்டும். ஒரு சிறுவனுவது

சிறுமியாவது ஓர் அறைக்குள் வந்து, இன்னும் பெரியோர்களும் வந்திருக்கையில், முன்னதாக ஓடி அங்குள்ள சிறந்த ஆசனங்களைப் பிடித்துக்கொள்ளக் கண்டாலும், எல்லோருக்கும் வரிசையாகக் கொடுத்துக்கொண் டிருக்கும்பொழுது தங்களுக்காகப் பெரிய பணியாரங்களை யாயினும் பருத்துச் சிறந்த மாம்பழத்தை யாயினும் பொறுக்கி எடுத்துக்கொள்ளக் கண்டாலும், தன்னயம் பாராட்டல் என்கிற பிசாசு அவர்களைப் பிடித்துக்கொண் டிருக்கின்றதென நீங்கள் நிச்சயமாய் நம்பலாம். அது தன் விலங்குகளை அவர்கள்மேல் போட்டுக் கட்டுகின்றது. அப்போது அவர்கள் அதைப்பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாதிருப்பார்களாயின் அவர்களை அது சீக்கிரம் சிறையாக்கிக் கொள்ளும்.

5. ஆதலின் நாம் எல்லோரும் அந்தப் பூதத்தோடு போராடல் வேண்டும். சாதாரணமாகப் போராடுவது போதாது ; மேல்விழுந்து கைகலந்து மல்லுப் பிடியாய்ப் பிடித்து அதனுடன் முட்டி யுத்தம் செய்யல் வேண்டும் ; தன்னயம் பாராட்டாமையைத் துணையாகக் கொண்டு போராடல் வேண்டும்.

6. பொன்னன், ரத்னம் என்று இரண்டு சிறுவர் இருந்தார்கள். ஒருநாள் அவர்கள் பள்ளிக்குப்போகப் புறப்படும்போது தகப்பன் அவர்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொள்ளும்படி தலைக்கு ஒரு அணாக்கொடுத்தனுப்பினன். அதை வாங்கிக்கொண்டு அச் சிறுவர்கள் மிகவும் களிப்படைந்து புறப்பட்டுப் போனார்கள்.

7. அப்போது பொன்னன் ரத்னத்தை நோக்கி, 'நான் என் அணாவை என்ன செய்ய நினைக்கிறேன்

தெரியுமா? வீட்டில் நமது தாய்க்கு உடம்பு சௌக்கிய மில்லையே, அவளுக்காக ஒரு கிச்சிலிப் பழம் வாங்கிக் கொண்டு போவது நல்லதென்று நினைக்கிறேன்; அது அவளுக்கு மிகவும் பிரியமா யிருக்கும்' என்றான்.

8. அது கேட்டு ரத்னம், 'உனக்கு இஷ்டமிருந்தால் அப்படியே செய்; நான் அப்படிச் செய்வதில்லை. எனக்குச் சொந்தமாய் ஏதாவது வாங்கிக்கொள்ளப் போகிறேன்; என் சொந்தச் செலவுக்குத்தானே தகப்பனார் அணுக்கொடுத்தது; அவர் இஷ்டப்படிதான் நான் செய்யப்போகிறேன். தாய்க்குக் கிச்சிலிப் பழம் வேண்டுமானால் அவள் வாங்கிக் கொள்ளட்டுமே; அவள் கையிலும் பணமிருக்கிறது; அவளுக்கு வேண்டியதை வாங்கிக் கொடுக்க வேலைக்காரனும் இருக்கிறான்' என்றான்.

9. இப்படிப் பேசிக்கொண்டு அவர்கள் கடைத் தெருவுக்குப் போயினர். ரத்னம் தன் அணுவுக்குக் கற்கண்டு வாங்கினான்; பொன்னனோ நல்லதாய்ப் பார்த்து ஒரு கிச்சிலிப் பழம் வாங்கினான். அன்று பகலில் அவர்கள் வீட்டிற்குப் போனபொழுது பொன்னன் தாய் படுத்திருந்த அறைக்குப் போய், 'அம்மா! நான் உனக்காக நல்லதாய்க் கிச்சிலிப் பழமொன்று இதோ வாங்கி வந்திருக்கிறேன்' என்றான்.

10. அதனைப் பார்த்து அவள் 'ஆம், இது மிகவும் சிறந்த பழந்தான்; நானும் கிச்சிலிப் பழத்தின்மேல் அதிக விருப்பங்கொண் டிருக்கிறேன்; உனக்கு இந்தப் பழம் எங்கே கிடைத்தது, குழந்தாய்?' என்று கேட்டாள்.

11. அதற்கு அச் சிறுவன் 'இன்று காலையில் தகப்பனார் எனக்கு ஒரு அணுக் கொடுத்தார். அதற்கு நான் இந்தப் பழம் வாங்கி வந்தேன்' என்று சொல்ல, அவள், 'என் செல்வமே! உன் புத்தியை நான் என்னென்று சொல்லுவேன். வியாதியால் வருந்துகிற தாயை மறவா திருக்கிறாயே! உன் பணத்தைக்கொண்டு உன் இஷ்டப்படி கற்கண்டு பணியாரம் முதலியவை வாங்காமல் சுயநன்மையைத் துறந்து எனக்காகக் கிச்சிலிப்பழம் வாங்கி வந்தாயே' என்று சொல்லி அம் மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டுக்கொண்டாள்.

12. 'தன்னயம் பாராட்டல்' என்ற பிசாசு, இவ் விரண்டு பிள்ளைகளையும் எதிர்த்து வந்ததை இதில் கண்டீர்களே; அவர்களுள் பொன்னன் தன்னயம் பாராட்டாமல் தைரியமாய் அந்தப் பிசாசை எதிர்த்தான். ரத்னமோ அப்படிச் செய்ய மறுத்திருந்தான்; ஆதலின் அந்தப் பிசாசு தன் விலங்கை மெல்ல அவன் மேலே போட ஆரம்பித்தது.

16. ஜேம்ஸ் வாட்

ஐரோப்பா கண்டத்தில் ஸ்காத்லந்து தேசத்தின் மேற்றிசையிலுள்ள க்ரீனாக் என்னும் பட்டணத்தில் சாதாரணமான ஒரு வீட்டில், நூற்றுமுப்பது வருஷங்களுக்கு முன் ஒருநாள் மாலைப்பொழுதில், அவ் வீட்டிலுள்ளவர்கள் குளிருக்குச் சாந்தியாய்ச் சாளரத்திரைகளை யெல்லாம் நன்றாகக் கட்டிவிட்டு, தேத்தண்ணீர் காய்ச்சிச் சாப்பிட யத்தனித்தார்கள். அவ் வீட்டில் வயது முதிர்ந்த ஒரு ஸ்திரீ அங்குமிங்கும் பரபரப்பாய் ஓடி உண்கலங்களை மேஜையின்மீது பரப்பி, ரொட்டிகளைத் துண்டு துண்டாக்கி வெண்ணையைத் தடவி வைத்தாள். குளிருக்கு இதமாக உஷ்ணமுண்டாக்க நெருப்புமூட்டம் போட்டிருந்தது. அந்த இருப்படுப்பில் வெந்நீர்க்கரகம் ஒன்று காய்ந்து கொண் டிருந்தது. தீ கொழுந்து விட்டெரிய, அந்தக் கரகத்திலிருந்த ஜலம் அதிக சூடேறிச் சற்றுத் தளபளவென்று கொதிக்கையில், கரகத்தின் வாயிலிருந்து 'உஸ், உஸ்'! என்று நீராவி புறப்பட்டது. மேற்சொன்ன கிழவி இதனை யெல்லாம் ஓர் அதிசயமாகப் பாராட்டவில்லை. நெடுநாளாக இப்படியே நெருப்பு எரிகிறதும் வெந்நீர் கொதிக்கிறதும் ஆவி எழும்புகிறதும் பார்த்திருக்கிறாள். இனிமேலும் அப்படித்தான் இருக்கப்போகிறது; ஆகையால், புதுமை யொன்றும் அதில் அவளுக்குத் தோன்றவில்லை.

2. அந்தக் கிழவி அடுப்பண்டைபோய்க் குனிந்து, கொதிக்கும் வெந்நீரை ஒரு பாத்திரத்தில் இறுத்து வடிகட்டுகையில், அந்த நெருப்புக்கு எதிரில் அவளுடைய பன்னிரண்டு பிராயமுள்ள ஜேம்ஸ் என்னும் குமாரன் ஒரு தாழ்ந்த பீடத்தின்மீது உட்கார்ந்து முழங்காலின்மேல் முழங்கைகளை ஊன்றி, இரண்டு கைகளால் கன்னத்தைப் பற்றிக்கொண்டு, எரிகிற நெருப்பையும், காய்கிற கரகத்தையும், அதினின்று எழும்புகிற நீராவியையும் கருத்தாய் உற்றுப் பார்த்துக் கொண்டு, அதே நினைவாய்ச் சிந்தித்துக்கொண்டு மற்றெல்லாவற்றையும் மறந்திருந்தான். இப்படி அந்தச் சிறுவன் நெருப்பையே பார்த்துக்கொண் டிருக்கையில் தாயானவள், அவன்மீதே கண்ணாயிருந்து, நம்முடைய ஜெம்மியைப் பார்க்கிலும் சோம்பேறிப்பிள்ளை இவ் வுலகத்தில் வேறுண்டோ என்று நினைக்கலானாள். அச் சமயத்தில் அவளுக்குச் சிநேகமான ஒருத்தி அவளைக் காண வர, அவளைப் பார்த்து, 'எங்கள் ஜெம்மியினுடைய மனப்போக்கைப் பார்! நெருப்பண்டை உட்கார்ந்துகொண்டு வெந்நீர்க் கரகத்தையும் நீராவியையும் இமைகொட்டாமல் விழி பிதுங்கப் பார்த்துக்கொண் டிருக்கிறான். இப்படிப் பட்ட பேய்ப் பிள்ளையை நீ எங்கேயாவது கண்டதுண்டா!' என்று கூறினாள்.

3. தாயின் கருத்து அப்படி யிருந்தாலும், வாஸ்தவத்தில் அந்தப் பையன் பார்த்த பார்வையிலே ஒரு விசேஷ மிருந்தது. அவன் மனம் அதிக சுறுசுறுப்பாய் அதிலுள்ள நுட்பத்தை உய்த் துணர்ந்துகொண் டிருந்தது. அதன் மூலமாய் அவன் ஏதோ பகட்-

டான கனவுபோன்ற ஒரு அற்புதத்தைக் கண்டு வியக்கின்றவனுகி, அசைவற்று ஒரே நோக்கமா யிருப்பவன் போலக் காணப்பட்டான். கரத்திலிருந்து கிளம்புகிற நீராவி விந்தை விந்தையாய்ச் சுழன்று வரவர மெல்லியதாகி மேலெழுந்து கனம் குறைந்து மறைந்துபோமளவும் அதன்மேலேயே கண் வைத்திருந்தான். சில வேளைகளில் அந்த ஆவி கூட்டமாய்க்கூடி வலிமை கொண்டு கரகத்தின் மேல்மூடியின் ஒரு புறத்தை மெல்லக் கிளப்புவதையும், அப்பொழுது குப் குப்பென்று வெண்ணிறமான ஆவி வெளிப்படுவதையும், உயரக் கிளம்பின மூடி மறுபடி சத்தத்தோடு கரகத்தின் வாயிலில் படிவதையும் கூடக்கருத்துறப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த நீராவிப்புகையில், ஒருவிதமான வல்லமை இருந்தது. அதனை அச்சிறுவன் கண்டுகொண்ட மாத்திரத்தில் புதிதான ஓர் எண்ணம் தற்செயலாய் அவன் புத்தியில் பிறந்தது. அதாவது, மனிதன் புத்தி சக்திகளைக்கொண்டு பஞ்ச பூதங்களோடு போராடி அவைகளை வசப்படுத்திக் கொள்ளலாகு மென்புதாம்.

4. அவன் பின்னும் அப்படியே கூர்மையாய்ப் பார்த்து, ஒருவரும் கண்டறியாத இந்த நீராவியின் வல்லமையினுல் மரக்கலங்கள் சமுத்திரத்தில் காற்றின் உதவி யில்லாமலும் பாய் விரியாமலும் விரைவாய் இயங்குவதுபோலும், மனித சஞ்சார மில்லாத காடுகளிலும் மணல் வெளிகளிலும் வண்டித் தொடர் வேகமாய் ஓடுவதுபோலும், கனவில் காணும் காட்சி போலக் கண்டறியலானுன். இவ்விதமாக அவன் பகற் கனவு கண்டு களிக்கும்போது தாயானவள் அவனைப் பார்த்து, 'ஜெம்மீ! ஜெம்மீ! தேத்தண்ணீர் குடிக்க வா! நீ

இன்னும் இப்படியே நெருப்பை உற்றுப் பார்த்துக்கொண் டிருப்பாயாகில் உன் தலைநோகக் குட்டுவேன்' என்றாள்.

5. அதுகேட்டு அந்தச் சிறுவன் வாயைத் திறவாமல் எழுந்திருந்து அவள் சொன்னபடியே செய்தான். ஜேம்ஸ் வாட் என்பது அவன் பெயர்; பிற்காலத்தில் அவன் 'ஸர் ஜேம்ஸ் வாட்' எனச் சிறப்புப் பெயர் பெற்றனன். நீராவியின் சக்தியை மனிதருக்குப் பல விதத்தில் உபயோக மாகும்படி முதல் முதல் அறிந்து வழிகாட்டினவ னுகையால், அம் மஹா புருஷனுக்குத் துரைத்தனத்தார் 'நைட்' என்னும் பட்டங் கொடுத்து அவனைப் பெருமைப் படுத்தினார்கள்.

6. நீராவியானது பழமையான இவ் வுலகத்தை இப்போது புதிய உலகமாக மாற்றி யிருக்கின்றது. அது மனிதனுக்கு எந்தக் காரியந்தான் செய்யவில்லை! நீராவி யந்திரத்தால் ஆகாத காரியமும் உண்டோ! அது வண்டி தள்ளுகின்றது; படவு ஓட்டுகின்றது; முறுக்கு ஆணிகளை அழுத்துகின்றது; சுமைகளை உயர ஏற்றுகின்றது; கீழே இறக்குகின்றது, தூக்குகின்றது; கீழ்நீரை மேலெழுப்புகின்றது; நீரை வற்றச் செய்கின்றது; நீர் பாய்ச்சுகின்றது; இழுக்கின்றது; வலிக்கின்றது; ஓட்டுகின்றது; கற்களைப் பிளக்கின்றது; குழி தோண்டுகின்றது; மாவரைக்கின்றது; முத்திரை போடுகின்றது; தூற்றுகின்றது; தாள் போடுகின்றது; பொறுக்குகின்றது; வெட்டுகின்றது; அறுக்கின்றது; இழைக்கின்றது; துளைக்கின்றது; துருவுகின்றது; துருத்தி யூதுகின்றது; உலைக் களத்தில் இரும்புகளைக் காய்ச்சுகின்றது; சம்மட்டி யடிக்கின்றது;

அராவுகின்றது ; மெருகு கொடுக்கின்றது ; ஆப்புக் கடாவுகின்றது ; பன்னுகின்றது ; நூற்கின்றது ; சுற்றுகின்றது ; நெய்கின்றது ; நாணயங்கள் செய்கின்றது ; அச்சிடுகின்றது. இவ்வண்ணம் நாம் அளவிடக்கூடாத இன்னும் எத்தனையோ காரியங்களைச் செய்கின்றது. சாஸ்திர விஷயங்களுக்கு வெற்றிக் கொடியான இப்படிப்பட்ட நீராவியின் சக்தி ஒரு காலத்தில் பலர் ஏளனம் செய்யத்தக்கதாயிருந்தது ; ஒருகால் ஒரு சிறுவன் அடுப்புக்கெதிரில் உட்கார்ந்து, யாவரும் சோம்பேறியென்று எண்ணும்படி, தேயிலைக் கரகத்தினின்று நூலிழைபோலக் கிளம்பும் நீராவியை உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அவனுடைய மனத்தில் திடீரென்று உதித்த ஒரு எண்ணத்தோற்றமாயிருந்தது.

7. பதார்த்த விஞ்ஞான சாஸ்திரம் இளமைப் பருவத்திலிருக்கும் இப்போதே மனிதனுக்கு மேற்சொல்லிய பெரிய காரியங்களைச் செய்கின்றதென்றால், இது மேன்மேலும் என்னென்ன அற்புதங்களைச் செய்யமாட்டாது! அதிமேதாவிகளான சாஸ்திர பண்டிதர்கள் பூர்வ காலத்தில் தோன்றினதுபோல் இனிமேலும் தோன்றி, இந்தச் சாஸ்திரத்தை விசேஷமாக விருத்தி செய்வார்கள்.

8. இவ்விதமாகப் பிரிட்டிஷ் தேசம் சாஸ்திர ஞானத்திலும், சிற்ப வேலையிலும் மேன்மை பெற்றிருக்கின்றது. இதிலும் மேன்மையானது மற்றொன்றுண்டு. அதாவது, அத்தேசம் தெய்வபக்தியிலும், நீதி நெறியிலும் தலைமைத் தன்மை பெற்றிருப்பதேயாம். தனக்கிருக்கும் பலத்தையும், செல்வத்தையும் உண்மைக்குப் பயன்படுத்தி வருகின்றதினாலேயே தேவானுக்-

கிரகம் பெற்று, சமீபத்திலும், தூரத்திலுமுள்ள பல தேசங்கள் சத்துரு பயமில்லாமல் தத்தம் சுகத்தையும், விருத்தியையும், சுவாதீனத்தையும் மேற்படி தேசத்தி னுதவியால் அடையலாமென்று எதிர்பார்க்கும்படியான செல்வாக்குடையதாக விளங்குகின்றது.

9. மேற்சொன்ன விருத்தாந்தம் கட்டுக் கதை யன்று. ஜேம்ஸ் வாட் என்பவன் கி. பி. 1736-ல் ஜனித்தவன். அவனுக்குப் பன்னிரண்டாவது வயதில் இந்த நீராவியைப் பற்றிய விருத்தாந்தம் நடந்தது. அவன் மேற்சொன்னபடி ஸ்காத்லந்தில் க்ரீனுக்குப் பட்டணத்திலிருந்த ஒரு சிறு வியாபாரியின் மகன். அவன் அசைப் புத்தகமும், கிறிஸ்து வேத புத்தக-மும் தவிர வேறு புத்தகங்களைப் படித்தவனல்லன்; ஆயினும் நுட்ப புத்தியும், பேரறிவும் ஒரே தேசத்துக்-காவது ஒரே காலத்துக்காவது உரியன வல்லவே. எத் தேசத்திலும் கால நியதி யில்லாமல் அவை தோன்றலா மல்லவா? பூர்வத்தில் இந்து தேசத்திலே காளிதாச-னும், கிரீக் தேசத்தில் ஹோமரும் மஹா கவிகளாய்த் தோன்றி யிருந்தனர். அப்படியே இங்கிலாந்து தேசத்-தில் பிற்காலத்திலே ஷேக்ஸ்பியர், மில்ட்டன் என்னும் கவி வேந்தர்கள் தோன்றினர். அதீனாவில் ப்ளேடோ பிறந்தா ரென்றால், அதற்கேற்பப் பிரித்தானியாவில் பேக்கன் பிறந்தனர். அலெக்ஸாந்திரியாவில் முற்கா-லத்தில் ஒரு மஹாவீரன் உண்டாகிப் பல வெற்றி களைப் பெற்றானென்று சிறப்பித்தால், ஸ்காத்லந்தில் ஜேம்ஸ் வாட் என்னும் மேதாவி தோன்றி உலகத்தைப் புதிய உலகமாக மாற்றின னென மகிழ்ந்து பேசலாம்.

17. மூர்க்க குணம்

தன்னயம் பாராட்டுதல் என்னும் பிசாசு ஜனங்களை எதிர்க்கின்ற விதமும், அவர்களைச் சங்கிலிகளால் கட்டித் தன் கோட்டைக்குள் இழுத்துக்கொண்டு போகின்ற விதமும் இவைகளென முன்னொரு பாடத்தில் படித்திருக்கிறீர்களே ? இப்பொழுது மூர்க்க குணம் என்னும் பிசாசைப் பற்றியும், அது தன் வசத்தில் அகப்பட்டுக் கொண்டவர்களை நடத்துகிற விதத்தைப்பற்றியும் சிறிது சொல்லுவோம் :

2. மூர்க்க குண மென்பது மற்றப் பிசாசுகளைப்போல் அத்தனை பெரியதும் வலியுள்ளதுமான பிசாசன்றாயினும், அவைகளைப்போலவே விகாரமானதுதான். அவற்றுள் அநேக பிசாசுகளைப் பார்க்கிலும் அதிகமான விடங்களில் அது காணப்படுகின்றது. அது சில வேளைகளில் வயது முதிர்ந்தவர்களையும் எதிர்க்கின்றதாயினும், சிறுவர்களையே விசேஷமாக வருத்துகின்றது ; மற்றப் பிசாசுகள் அவ்வளவு வருத்துவதில்லை. அது எப்போதும் எரிந்துவிழுகிற குண முள்ளது. மேலும் அது விடாமல் உதட்டை நீட்டிக் கோபங்கொள்வதால் அதன் உதடுகள் மிகவும் பருத்துப் பார்க்க வெகு விகாரமா யிருக்கின்றன. எந்த நிமிஷமும் அது முகம் சுளிப்பதினால் அதன் முகமெங்கும் திரைந்து ஒரு பெரிய மரப்பட்டைபோல் மிகக் கரடு-

முரடா யிருக்கின்றது. சில வேளைகளில் அதன் கண்கள் அழுது செக்கச் செவேரென் றிருக்கும்; மற்ற வேளைகளில் கோபத்தினால் பற்றி எரிவதுபோலிருக்கும்; சில வேளைகளில் அதன் குரல் இடிமுழக்கம்போ லிருக்கும்; மற்ற வேளைகளில் வெறிபிடித்த நாய் குரலடைத்துக் குரைப்பதுபோ லிருக்கும்.

3. அந்தப் பிசாசு வெகுவாய்க் குழந்தைகள் இருக்குமிடங்களையும், சமையலிடங்களையும், உட்கார்ந்து பேசுமிடங்களையும் சுற்றித் திரிந்துகொண்டு, சமயம் பார்த்து அங்குள்ள சிறுவர்கள்மேல் பாய்ந்து, அவர்களைச் சிறையாகப் பிடிக்கக் காத்திருக்கும். அஃது அவர்களைக் கைப்பற்றிக்கொள்ளுமாயின், பிறகு அப் பிள்ளைகளைப்பற்றி எவரும் எவ்விதமான கருத்தும் கொள்ளக்கூடாதபடி அவ்வளவு விகாரமானவர்களாயும், அசௌக்கியமானவர்களாயும் செய்துவிடும்.

4. ஒரு சிறுவனையாயினும் சிறுமியையாயினும் இப் பிசாசு பிடித்துக் கொள்ளப்போகிற தருணம் இன்னதென்பதை நாம் எவ்வண்ணம் கண்டுகொள்வதென்பீர்களோ? எளிதில் கண்டு கொள்ளலாம். அப் பிள்ளைகளுக்குச் செய்ய இஷ்டமில்லாத ஏதோ ஒரு காரியத்தைச் செய்யும்படி அவர்கட்குக் கட்டளையிடுகிற தருணம் எப்போதென்று கண் அயராமல் அது பார்த்துக்கொண் டிருக்கும். அத் தருணம் நேர்ந்தால், சித்தமாய் மறு நிமிஷத்திலேயே அஃது அவர்களை எதிர்க்க ஆரம்பிக்கின்றது. அஃது அவர்களைக் கண்ணைச் சுளிக்கும்படி செய்கின்றது; வாயைக் குவித்து நீட்டும்படி செய்கின்றது; உதட்டை நீண்டு முன்னையிலு மிரண்டு பங்கு பருக்கும்படி செய்கின்றது;

கை விரல்களை யெல்லாம் புழுக்கள்போல் அசைந்து நெளியும்படியாவது, சில வேளைகளில் ஏதாவது ஒரு விரலை வாய்ப்புறத்திலே போய் நிற்கும்படியாவது செய்கின்றது. புஜங்களெல்லாம் ஒரு மூலைக்கொரு மூலை முறுக்கிக் கொள்ளுகின்றன; முதலில் ஒரு புறமாய் முறுக்கிக்கொண் டிருப்பது மறுநிமிஷத்தில் மற்றொரு புறமாக முறுக்கிக் கொள்ளும். அந்தப் பையன் கையில் ஏதாவது புத்தகமிருக்குமாயின் அது தானே நழுவிக் கீழே விழுந்துபோம். நேரே தரையில் விழுந்தாலும் விழும், அல்லது அறையில் ஏதேனும் ஒரு மூலையில் போய் விழுந்தாலும் விழும். அவன் நடந்துபோனால், அழுத்தமான ஒரு பாதரட்சையைக் காலில் மாட்டிக்கொள்ள முயலும்போது செய்வதுபோல் காலைத் தொப்புத் தொப்பென்று கீழே அடித்துக்கொண்டு போவான். உட்கார்ந்திருந்தால் கால் முன்னும் பின்னும் ஆடி எதிரே யிருக்கும் மேஜை நாற்காலிகளில் அடிபட்டுப் பெரிய சத்தமுண்டாக்கும். சில வேளைகளில் அவன் செவிடும் ஊமையுமானவன் போலக் காணப்படுவான்; எது சொன்னாலும் அவன் காதில் போட்டுக் கொள்ளான்; வாய்திறந்து ஒன்றும் பேசான். சில சமயங்களில், ஒரு எலும்பைப் பார்த்துக் குரைக்கின்ற நாயைப் போலக் குரைக்க ஆரம்பிப்பான்.

5. இவ்வண்ணமான குறிகளை எங்கேயாவது கண்டால், இந்தக் கெட்ட பிசாசு பிடித்துக்கொள்ளச் சித்தமா யிருக்கிறதென்றே தெரிந்துகொள்ளலாம். அத் தருணத்தில் நாம் தைரியமாய்ப் போராடப் பின் வாங்குவோமாயின், அது தன் சங்கிலிகளைப் போட்டு நம்மைக் கட்டிவிடும்; அவ்வளவோடு நாம் கெட்டுப்போனவர்களே.

6. சிலநாளைக்கு 'முன்னே நான் சகோதரிகளான இரண்டு கிறுமிகளைப் பற்றிப் படித்திருக்கின்றேன். அவ்விரண்டு பெண்களும் சந்தோஷமாய்க் கூடிப் படித்துக்கொண் டிருந்தார்கள். மூர்க்ககுணமாகிய பிசாசுக்கு அவர்களைப் பிடித்துக்கொள்ள ஒருபோதும் சமயம் வாய்க்க வில்லை. அவர்களுக்குப் புத்தகங்களாயினும் விளையாட்டுக் கருவிகளாயினும் தனித்தனி கிடையா; இருவருக்கும் ஒன்றுதான். ஆயினும் அவர்கள் ஒருபோதும் சண்டை போட்டதில்லை; அவர்களுக்குள் ஒருக்காலும் விரோதப் பேச்சும் கிடையாது, முகம் சுளித்தலும் கிடையாது, அடிதடியும் கிடையாது, ஒருவரை விட்டு ஒருவர் கோபித்துக்கொண்டு பிரிந்தோடிப் போவதுங் கிடையாது. வீட்டுக் கெதிரிலுள்ள பசும்புல் தரையிலே உட்கார்ந்திருந்தாலும், தங்கள் நாயோடு விளையாடிக்கொண் டிருந்தாலும், தங்கள் பொம்மைகளைச் சிங்காரித்துக்கொண் டிருந்தாலும், தாய்க்குத் துணையாய் ஏதாவது காரியம் செய்துகொண் டிருந்தாலும், எப்பொழுதும் அப் பெண்கள் ஒரே தன்மையாய் ஒருவரை யொருவர் நேசித்து நல்லவர்களாயிருந்தனர்.

7. ஒரு நாள் அவர்களின் வீட்டுக்கு வந்திருந்த ஒரு பெருமாட்டி அப் பெண்களை நோக்கி, 'நீங்கள் ஒருபொழுதும் கலக்கப்படுவதாகக் காணப்படவில்லையே; இவ்வாறு இருவரும் அந்நியோந்நியமாய் இருத்தற்குக் காரணம் யாது?' என்று வினவினாள்.

8. அவளைப் பார்த்துப் பெரிய பெண், 'இதற்கு வேறென்ன காரணம் வேண்டும்! நான் ஏது செய்யினும் அதற்கு என் தங்கை சம்மதித்திருக்கின்றனள்;

அவள் என்ன செய்தாலும் நானும் அதற்குச் சம்மதித்திருக்கிறேன். இப்படி ஒருமனப்பட்டிருப்பது தவிர வேறொன்றுமில்லை' என்றாள்.

9. அப் பெண் சொன்னது முற்றும் சரியே. இவ்வாறு ஒருவர்க் கொருவர் இணங்கிப் போவார்களாயின், அவர்களண்டை மூர்க்க குணமாகிய பேய் ஒருபோதும் அணுகாது. மன நற்குணமுள்ள இந்தச் சகோதரிகளின் ஒருமைப்பாடானது எவ்வளவு அழகாயிருக்கின்றது! அது நிற்க, இதோ இதற்கு நேர் விரோதமான நடத்தையைப் பாருங்கள்.

10. தாய் உள்ளே யிருந்து சாளரத்தின் வழியாகப் பார்த்துக்கொண் டிருந்தனள். தெருவில் ஒரு பெருங்கூச்சல் கேட்டது. அங்கே மாணிக்கம் கமலம் என்கிற அவளுடைய பெண்கள் இருவர் போராடிக் கொண் டிருந்தனர்.

11. அது கண்டு தாய் கமலத்தை நோக்கி, 'பெண்ணே ஏன் கூவுகின்றாய்? உனக்கு என்ன வேண்டும்?' என்று வினவ, கமலம் 'மாணிக்கம் தன் பங்கைச் சற்று எனக்குக் கொடுக்கமாட்டே னென்கிறாள்' என்றனள்.

12. அதனைச் செவியுற்ற மாணிக்கம், 'கமலம் தன் எழுதுகோலைப் பாடசாலையில் எனக்குச் சற்றே கொடுக்கமாட்டே னென்றாளே! ஆதலின் என் பங்கையும் அவளுக்குக் கொடுக்க எனக் கிஷ்டமில்லை' என்றாள்.

13. இந்த வாக்குவாதத்தைக் கேட்ட தாய், 'சீ! சீ! சகோதரிகள் ஒருவர்க்கொருவர் இவ்வண்ணமோ

போர் புரிவது' என்று உரைக்க, கமலம், 'ஆம், என் எழுதுகோலைக் கொடுத்தால் அவள் போக்கடித்து விடுவாள், ஆதலால் நான் அதனை அவளுக்குக் கொடுப்பதில்லை' என்று கூறினாள்.

14. அதுகேட்டு மாணிக்கம், 'என் பந்தை மாத்திரம் இவள் போக்கடியாமல் பத்திரமாய் வைத்துக்கொண் டிருப்பாளோ! நானும் இதனை இவளுக்குக் கொடுக்கமாட்டேன்' என்று சொன்னாள்.

15. இவ்விரண்டு பெண்களையும் மூர்க்க குணமாகிய பிசாசு உறுதியாகப் பிடித்துக்கொண்டது: அதனை எதிர்த்து வெல்ல இவர்கட்கு வழி தெரியவில்லை.

18. யானை

யானைக்குப் பிறப்பிடம் ஆசியா, ஆபிரிக்கா கண்டங்களே. அஃது ஆசியா கண்டத்தில் இந்தியா தேசத்திலும் சில பெருந்தீவுகளிலும் விசேஷமாய்க் காணப்படினும், சீனா, ஆவா, கொச்சின் சீனா முதலிய தேசங்களிலு முண்டு; முக்கியமாய் யானை இந்தியா தேசத்தில் வங்காளத்தின் தென் கீழ்ப் பாகத்திலுள்ள ஈர மதிகரித்த காடுகளில் சஞ்சரிக்கும். அதனை மேல் காற்று மலைகளின் சில பாகங்களிலும் காணலாம். ஆபிரிக்கா கண்டத்தில் கேப் கலனி நாட்டில் நெடுங்காலம் வரையில் யானைகள் திரளா யிருந்தன. ஆகிலும் கொஞ்சக் காலத்திற்கு முன்பு அந் நாட்டார்கள் நாகரிகத்தில் விர்த்தியாக விர்த்தியாக, அங்கிருந்த யானைகள் உள் நாடுகளுக்கு அகன்று போயின. இப்பொழுது அதிக செழுமையாயிருக்கின்ற பெருவெளிகளிலும், காப்பிராரியா நாட்டிலுள்ள ஆற்றோரங்களிலும் மாத்திரம் யானைக் கூட்டங்க ளுண்டு.

2. தேசத்தில் சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்குள் மிகப் பெரியது யானை; 'பருத்த யானை வாலின் அடி தொடங்கி நெற்றி வரைக்கும் ஏறக்குறையப் பதினாறு அடி நீளமும், பதினாலு அடி உயரமுமுள்ளது. அதன் சரீரத்தில் அதிகம் பருத்திருக்கின்ற பாகத்தின் சுற்றளவு இருபத்தாறு அடி; காலின் சுற்றளவு ஆறு

அடி. ஆகிலும் வெவ்வேறு தேசத்து யானைகள் வெவ்வேறு பரிமாண முடையவை. சில தேசத்து யானைகள் ஏழு அடிக்கு அதிகம் உயர்ந்தவையல்ல. யானை பளுவான தலையும் மிகவும் சிறுத்த கண்களும், அதிகமாய்ப் பரந்து தொங்குகிற செவிகளும், ஸ்தூல சரீரமும், விற்போல் வளைந்த முதுகும், அந்தசந்தமில்லாமல் மொத்தாகாரமா யிருக்கின்ற கால்களுமுடையதாகையால், பொதுவாக பார்க்குமிடத்தில், அது அவலட்சணமான தோற்றமுள்ளதுதான். யானையின் மூஞ்சிக்கும் மற்ற நாற்கால் மிருகங்களின் மூஞ்சிக்கும் அதிக பேதம். அதன் மூஞ்சியின் மேற்பாகம் நீண்டிருக்கும். அதற்குத் தும்பிக்கை என்று பெயர். அதன் நுனி ஐந்து அங்குலமளவு நீண்டு அசையத்தக்க கொளுவியைப் போன்றிருக்கும். தும்பிக்கையின் அடியின் இரு பக்கங்களிலும் வாய்க்குள்ளிருந்து வெண்ணிறமான பருத்த கொம்புகள் இரண்டு முளைத்து வளர்ந்திருக்கும். அதிகம் பருத்த கிழ யானைகளின் கொம்பு ஆறு ஏழு அடி நீளமிருக்கும். பெண் யானைக்குக் கொம்பு முளைப்பது அபூர்வம். முளைத்தாலும் அது மிகவும் சிறுத்துக் கீழ் நோக்கியிருக்கும். தும்பிக்கை அடியின் கீழ்ப் புறத்தில் யானையின்வாய் இருப்பதினால், அதற்கு மேலுதடு தும்பிக்கைதான். அதன் கீழுதடு குறுகி முனை டுள்ளதா யிருக்கும். அதன் பாதம் ஐந்து வட்டமான குளம்புகளாக ஒருவாறு பிரிந்திருக்கும். யானைத் தோல் மனிதருடைய உள்ளங் கையைப் போலப் பல திரைவுகளுள்ளது. அதன் மேல் உரோமம் அதிகம் இல்லை. யானையின் சாதாரண வர்ணம் கரு நரை, அல்லது சற்றுக் கறுப்பு. வெண்மையான அல்லது பாலேட்டின் வர்ணமான யானைகள் இந்தியா

தேசத்தில் காணப்பட்டதுண்டு. ஆயினும் அவை மிக-வும் அருமையானவை. இந்த தேசத்தரசர்கள் அவை-களை அதிகமாய் மெச்சிக்கொள்வார்கள். ஆபிரிக்கா கண்டத்திலுள்ள யானைகளின் கொம்பு ஆசியா கண்-டத்திலுள்ள யானைகளின் கொம்பிலும் அதிகம் நீண்-டதும், காது பருத்து நீண்டு பரந்து தொங்குவதுமா யிருக்கும். எப்படி இருந்தும், பொதுவாகப் பார்க்கு மிடத்து ஆபிரிக்காவிலுள்ள யானைகள் ஆசியாவி-லுள்ளவைகளிலும் சிறியவைக ளென்பார்கள். ஆசியா-வின் யானைகளிற் சில, விசேஷமாய் இலங்கைத் தீவி-லுள்ள யானைகள், அதிகம் பருத்தவைகள்.

3. காட்டு யானைகள் உக்கிர மில்லாதவைகள். அவைகள் கோபம் மூட்டப்படும்பொழு தல்லாமல், மற்றைப்படி ஒருபொழுதும் யாருக்கும் தீமை செய்வ-தில்லை. ஆகிலும் தங்களுக்குச் செய்த தீமைகளை யானைகள் பாரமாய் நினைத்துப் பாராட்டுவது வழக்கமா யிருப்பதனால், அவற்றின் கை காலுக்குத் தப்பித்துக்-கொள்ளும்படி நடப்பது யுக்தி. யானை மிகுந்த பல முடைய மிருகம். அதன் சரீரம் அதிக பளுவுள்ளதா யிருப்பதனால் அதன் பலம் அதிகரித்திருக்கின்றது. அது நடக்கும்பொழுது நிலம் அதிரும். யானை மரங்-களை வேரோடே தும்பிக்கையால் பிடுங்கும்; அது மதில்களையும் முட்டி வீழ்த்தும்; முதுகில் அம்பாரி கட்டி, ராணுவ வீரர் உட்கார்ந்திருக்க, அவர்களைச் சுமந்து கொண்டு போகும். ஆறு குதிரைகள் சுமப்ப-தற்கு அருமையான பாரங்களையும் ஒரு யானை சுமக்-கும். அது மிகவும் எளிதாகச் சாதுவாக்கப்படும். சாதுவாக்கப்பட்டு மனிதர் வசத்தில் நிற்கிற யானை

அதிக அறிவும், பட்சமும், கீழ்ப்படிவு முள்ளதாயிருக்கும். அதற்கு இரைபோட்டுப் பராமரிக்கின்ற பாகனிடத்தில் அது பட்சமாயிருப்பதுமன்றி, கொஞ்சக் காலத்திற்குள்ளாக, அவன் கண்டிதமாகவும், கட்டளையாகவும், திருப்திகரமாகவும் சொல்லுகிறவைகளை அறிந்துகொள்ளும். யானைப்பாகன் சொல்வதைக் கருத்தாய்க்கேட்டு, பதறாமல் புத்தியாகவும் சந்தோஷத்தோடும் அவ்வாறு செய்யும். மனிதர் தன் முதுகில் எளிதாய் ஏறும்படியாக அது முழந்தாட் படியிட்டு நிற்கும். யானை தனக்கு அறிமுகமானவர்களைத் துதிக்கையினால் சீராட்டுவதுமன்றி, பாகன் சுட்டிக் காண்பிக்கிறவர்களை உபசரிப்பதுமுண்டு. மேலும் அது தும்பிக்கையினால் சுமைகளைத் தூக்கித் தன் முதுகின்மேற் பாரம் ஏற்றுகிற ஜனங்களுக்கு உதவிபண்ணும். அது தன்மேற் போடப்படும் அலங்காரமான அணிகலங்களைப் பார்த்துச் சந்தோஷப்படும். அது பாரங்களை இழுக்கச் சீக்கிரத்திற் பழகும். இழுக்கும்போது முகாந்தரமில்லாமல் அடித்தால், அது முரண்டு பண்ணும். யானை தன் பாகனிடத்தில் ஒரு பொழுதும் விட்டு நீங்காதிருக்கும்படியான அத்தனை பட்சமுள்ளதாயிருக்கும். ஆதலால் பெரும்பாலும் அஃது அவனையன்றி மற்றொருவனுடைய ஏவற்படி நடக்கப் பிரியப்படுகிறதில்லை. ஒரு யானை கடுங்கோபத்தினால் தன் பாகனைக் கொன்றுபோட்டு, பின்பு அதனிமித்தம் மிகுந்த துக்கத்தினால் இறந்தது. யானைக்கு நல்ல ஞாபகம் உண்டு. ஒருவர் செய்த நன்மையையாவது, தீமையையாவது அது மறக்கிறதில்லை. அதன்கண்கள் சிறியவையாயினும், மிகவும் துலங்கி விசேஷித்துத் தோன்றும். அதன் கண்களின் குறிப்பைக் கண்டு அதற்குள்ள

அந்தரங்கமான குணங்களை நிதானிக்கலாம். யானை யாதொன்றையும் செய்யு முன்பு அதனைக் குறித்து யோசிக்கும். அதற்குச் செவிப்புலன் கூர்மையாகவும், நாசிப்புலன் அதிகரித்து மிருக்கும். கீதவாத்தியங்களைக் கேட்பது அதற்கு வெகு இஷ்டம். அது சதிமிதிக்கும்படி பயிலக்கூடும். அது எவ்வகையான சுகந்த திரவியங்களையும், வாசனையுள்ள புஷ்பங்களையும் மோக்க விரும்பும். பரிச வுணர்ச்சியை நுட்பமாய் நிதானிக்கும் விசேஷமான உறுப்பு மனிதருக்குக் கை: அதுபோல யானைக்குத் துதிக்கை. துதிக்கை, சவ்வு நரம்பு இவைகள் சேர்ந்து உண்டானது. அது பரிச வுணர்ச்சிக்குரிய உறுப்பாகவும், அசையத்தக்க அவயவமாகவும் இருக்கின்றது. யானை தன் துதிக்கையை அசைக்கவும், வளைக்கவும், குறுக்கவும், நீட்டவும், நான்கு பக்கங்களிலும் திருப்பவுங் கூடும். சிறு காசை யானை தன் துதிக்கையினால் எளிதில் எடுக்கும்; கொட்டைகளையும் புஷ்பங்களையும் பொறுக்கும்; புட்டியில் அடைக்கப்பட் டிருக்கின்ற குச்சை இழுக்கும்; கயிற்றின் முடியை அவிழ்க்கும்; சாத்தியிருக்கிற கதவைத் திறக்கும்; திறந்திருக்கிற கதவைச் சாத்தும்; திறவுகோலினால் பூட்டுகளைத் திறக்கும். எழுதுகோல் போன்ற சிறு கருவியினால் தரையில் அட்சர முதலியவைகளை எழுதும். யானை சரீரம் மிகவும் பருத்திருந்தாலும், விரைவாக நடக்கும். யானை நடையும் குதிரை ஓட்டமும் சரி. யானை பெரும்பாலும் ஓடுகிறதில்லை. காட்டு யானை கோபம் கொண் டிருக்கும் பொழுதும், மிரளும்பொழுதும் மாத்திரம் வேகமாய்ப் பாய்கின்ற குதிரையைப்போல் அத்தனை விரைவாக ஓடும். பொதுவாக யானை ஒன்றுக்கும் அஞ்சுகிறதில்லை. அடுத்-

தடுத்துப் படபடென்று வெடிக்கின்ற பட்டாஸ் முதலியவைகளுக்கு மாத்திரம் அது பயப்படும். நாட்டிலுள்ள யானைகள் நாள் ஒன்றுக்கு ஐம்பது அறுபது மைல் தூரம் களைத்துப் போகாமல் ஒரே நடையாய் நடக்கும்; துவரிதமாகச் செலுத்தினால், நூறு நூற்றிருபது மைல் தூரம் வரை நடப்பதும் உண்டு. யானைக்குச் சந்தோஷம் உண்டாகும்பொழுது, அது தன் தும்பிக்கையினால் எக்காளத் தொனிக்கு ஒப்பாகத் தெளிந்து வெடித்த குரலாகவும்; அதற்குப் பசியுண்டாகும் பொழுதும், மிகுதியான மேய்ச்சலுள்ள இடத்திற்கு வந்தால் தன் கூட்டத்திலுள்ள மற்ற யானைகளுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கும் பொழுதும் வாயினால் உறுமி ஒருவிதப் புலம்பல் ஓசையாகவும், பகைவர்மேல் விழுந்தடிக்கத் தொடங்கும் பொழுதும், தனக்குத் துணை செய்யும்படி தன் கூட்டத்தைச் சேர்ந்த யானைகளை வரவழைக்கும்பொழுதும், சிங்கத்தின் கர்ச்சனைக்கு ஒப்பாக உரத்து நெடுநேரமளவும் படைக் குரலாகவும் இப்படி மூன்று விதமாகச் சத்தமிடும்.

4. யானைகள் மரங்களும் புதர்களும் அடர்ந்திருக்கின்ற வனங்களிலும் காடுகளிலும் கூட்டங் கூட்டமாகச் சஞ்சரிக்கும். யானைகள் தனிமையாகச் சஞ்சரிப்பதில்லை. தூரமான இடங்களுக்குப் பிரயாணம் போகும்பொழுது, அவைகள் பெருங் கூட்டங்களாகக் கூடி, வயசிலும் அனுபோகத்திலும் முதிர்ந்தவை முதலிலும், சிறு பருவமும் பலக்குறைவு முள்ளவை நடுவிலும், நடுப்பிராய முள்ளவை கடையிலும் போவது வழக்கம். பயிர் செய்யப்பட் டிருக்கின்ற நிலங்களி

லுள்ளவைகளைப் பிடுங்கித் தின்று சேதம் பண்ணுவதற்குப் போகும்போதும், தங்களுக்கு அபாயம் நேரிடுமென்று அஞ்சுவதற்கு ஏதுவான இடங்களுக்குப் போகும்போதும் மாத்திரமே அவைகள் இந்தக் கிரமமாக அணிவகுத்துப் போவதொழிய, மற்றைப்படியல்ல. அவைகள் மைதான வெளிகளிலும் நெருக்கமான காடுகளிலும் பிரயாணம் போகையில் மேற்சொல்லியபடி நிரையாய் ஒருமிக்கக் கூடிப்போகிறதில்லை. அங்கும் இங்கும் சிதறுண்டு போனால், அபாயம் நேரிடும் காலத்தில் ஒன்றுக்கொன்று துணைசெய்யக் கூடாமையால் அப்படிக் கலைந்து போகிறதில்லை. யாராவது யானைகளை வருத்தப்படுத்தி, அல்லது அவைகளுக்கு ஊறுபாடு செய்து ஒடிப்போனால், அவைகள் அத்தனை பளுவான சரீரமுடையவைகளாயிருந்தும், எட்டி அடிவைத்துத் துரிதமாய் நடந்து, ஒடினவர்களை எளிதில் மறித்துப் பிடித்துக் கொம்புகளாற் பீறி, ஆகாயத்திற் சுழற்றி எறிந்து, காலால் மிதித்து நசுக்கிக் கொல்லும். ஆதலால் எவ்விதத்திலாவது யானைகளை வருத்தப்படுத்துவது அபாயந்தான். யானைகள் பயிர் நிலங்களிற் போனால், கொஞ்சநேரத்திற்குள்ளாக வெகுதூரமட்டும் இருக்கின்ற பயிர்களைச் சேதம் பண்ணும். அவைகள் தின்று சேதம் பண்ணுவதிலும் காலால் உழக்கிச் சேதம் பண்ணுவது அதிகம். விசேஷமாய் மரங்கள் செறிந்து நிழலிட்டிருக்கின்ற ஆற்றங்கரைகளும், பள்ளத்தரைகளும், சதுப்பு நிலங்களுந்தான் யானைகளுக்கு ரம்மியம். அவைகள் குளிர்ச்சியையாவது, அதிக வெப்பத்தையாவது சகிக்கமாட்டா. ஆதித்தனுடைய அகோர உஷ்ணத்திற்குத் தப்பித்துக் கொள்ளும்படியாகவே, அவைகள் நெருங்கிய காடுகளில் போய்த்

தங்கும். அவைகள் அடிக்கடி முழுகும்; துதிக்கைக்குள் தண்ணீர் மொண்டு நான்கு திக்கிலும் வீசி விளையாடும். யானை ஸ்தூல சரீர முள்ளதாயினும், தண்ணீரில் மிகவும் எளிதாக நீந்தும்; நீந்தும் பொழுது துதிக்கையை நீர்மட்டத்திற்கு மேலாக உயர்த்திக்கொண்டு அதன் வழியாகச் சுவாசம் விடும்.

5. யானை சாகபட்சணி. அது புல், கிழங்கு, கீரை, கரும்பு, மரத்தின் இளங்கொம்பு, பழம், பலவகைத் தானியம் இவை முதலியவைகளைத் தின்னும். யானை மாமிசமாவது, மச்சமாவது தின்கிறதில்லை. அது தன் இரையைத் துதிக்கையால் எடுத்தும், தாகத்திற்குத் தண்ணீரை அதினால் உறிஞ்சியும் உண்பது வழக்கம்.

6. பெண்யானை இரண்டு மூன்று வருஷத்திற்கு ஒரு முறை குட்டி போடுகிறது. அது ஈற்றுக்கு ஒரு குட்டியே போடும். ஈன்றவுடனே யானைக் குட்டி பசுவின் இளங்கன்றைப் பார்க்கிலும் அதிக பெரிதாக விராது. அது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பூரணமான பரிமாணத்திற்கு வருவதற்கு இருபது முப்பது வருஷம் செல்லும். யானைக்குட்டி விளையாட்டுக் குணமுள்ளதும் தீங்கற்றதுமா யிருக்கும். யானை தன் குட்டிக்கு நெடுங்காலமட்டும் பால் கொடுக்கும். ஆயினும் குட்டியினிடத்தில் அது அதிக பட்சமா யிருக்கிறதில்லையென்று சொல்வார்கள். யானை தீர்க்காயுசுடைய பிராணி. மனிதர் வசப்பட்டிருந்த யானைகள் சில 130 வருஷமட்டும் சீவனோடிருந்த துண்டு. தன்னிஷ்டமாய்க் காட்டிற் சஞ்சரிக்கின்ற யானைகள் 200 வருஷத்திற்கு அதிகமாகச் சீவனோடிருக்கும். யானை சீவனோடிருக்-

கும் வரையில் அதன் தந்தமும் வளரும். ஆதலால் இளயானைத் தந்தம்போலக் கிழயானைத் தந்தமும் பலமுள்ளதாயே யிருக்கும்.

7. அதிக பலங்கொண்டு செய்யவேண்டி யிருக்கின்ற வேலைகளில் யானை பலவிதமாய் உபயோகமாகிறது. ஆபிரிக்காவின் பல பாகங்களிலும், கிழக்கிந்திய தீவுகளிலும் பெரும்பாலும் யானையே சுமை எடுத்துக்கொண்டு போகும். யானைக்கழுத்தில் மாவுத்தன் ஏறி உட்காந்து ஒலிக் குறிப்பினாலும், செவியிலும் தலையிலும் தோட்டியாற் குத்துவதினாலும் அதனைச் செலுத்துவான். யானை முதுகிலும், கழுத்திலும், தந்தத்தின்மீதும் சுமை ஏற்றுவது வழக்கம். சிலவேளை பளுவான சுமையைக் கயிற்றினாற் கட்டி, அக்கயிற்றின் இருமுனைகளையும் துதிக்கையில் கொடுக்க, யானை அவைகளை வாய்க்குள் வைத்து, கடித்து இழுத்துக்கொண்டு போகும். அதனிடத்தில் ஒப்பித்த எந்த வஸ்துவையாவது அது போக்கடிக்கிறதுமில்லை, சேதப்படுத்துகிறதுமில்லை. ஏற்றுமதி செய்யப்படும் சரக்கு மூட்டைகளை யானையின் முதுகில் ஏற்றிச் செலுத்திக் கொண்டு போகும்பொழுது, அது கப்பல் துறைமுகத்தில் போய் நின்று, சுமையை இறக்கி, ஜலத்தில் நனையவிடாமல் பத்திரமாய்த் தூக்கிப் படவில் வைக்கும். வைத்த பின்பு மூட்டை சரிந்து விழாமல் பக்குவமாய் வைக்கப்பட் டிருக்கிறதாவென்று தன் துதிக்கையினால் தள்ளிப் பார்க்கும். அது பிப்பாய்களைச் சுமந்து கொண்டு போனால் இறக்கினவுடனே, அவைகள் உருளாதபடி கல்லை எடுத்துப்போய் அவைகளுக்கு அடியில் வைக்கும். யானைகள் அதிக பாரம் ஏற்றப்பட்ட

ஒற்றை உருளை வண்டிகளைத் துதிக்கையினால் தள்ளிக் குன்றுகளில் ஏற்றும். நிறுத்த வேண்டும்பொழுது முழங்காலால் முட்டுக்கொடுத்து நிறுத்தும். பெருந் தீராந்திகளைத் தரையில் இழுத்துக்கொண்டு போகும்பொழுது, இடையிலே தடைகள் நேரிட்டால், அவைகளை எடுத்தெறியும்; அல்லது தீராந்தி முனைகளைத் தூக்கித் தடைகளைத் தாண்டி இழுத்துக் கொண்டுபோகும். பீரங்கி முதலிய யுத்த உபகரணங்கள் கண்டறியப் படுமுன், பல தேசத்தவர்கள் யானைகளை யுத்தத்தில் உபயோகித்தார்கள். சத்துருக்களுடைய நகரங்கள், துருக்கங்கள் முதலியவைகளின் கதவுகளை யானைகள் மஸ்தகத்தால் முட்டிப் பெயர்த்தெறிந்தன. இந்நாள் வரைக்கும் இந்து தேசத்தில் யானைகள் மலைகளுக்கு மேலாகப் பீரங்கி வண்டிகளை இழுத்துக் கொண்டு போவதும், மூவாயிரம் இராத்தலுக்கு அதிகமான பாரமுள்ள கூடாரச் சாமான்களை முதுகிற் சுமந்து கொண்டு போவதும் வழக்கம்.

8. இன்னும், முற்காலத்தில் இந்து தேசத்து அரசர்கள் கொலைக்குரிய குற்றவாளிகளை யானைகளைக் கொண்டு கொல்வித்தார்கள். அவைகள் மாவுத்தன் சொற்படி குற்றவாளிகளுடைய கை கால் முதலிய அவயவங்களைத் துதிக்கையால் துணித்துக் காலால் மிதித்துக் கொல்லும்; அல்லது தந்தத்தால் குத்திக் கிழித்து வதை செய்யும். கிழக்குத் தேசத்திலே யானைகள் நெடுங்காலம் வரையில் வேட்டைத் தொழிலில் உபயோகிக்கப்பட்டன.

9. இக்காலத்தில் யானைகளை மேற்சொல்லிய விஷயங்களில் அவ்வளவாக உபயோகிப்பதில்லை. ஆயினும்

இந்து தேசத்தரசர்கள் அவைகளை அலங்காரத்திற்காகவும் பெருமைக்காகவும் வைத்திருக்கிறார்கள். அவைகளை நாள்தோறும் எண்ணெய் தேய்த்து முழுக் காட்டித் துடைத்து நன்றாகப் போஷிப்பார்கள். பவனி வரும்பொழுதும், வேறுவித வேடிக்கை விநோதங்கள் செய்யும்பொழுதும் யானைகளுக்குச் செவியிலும், தலையிலும், துதிக்கையிலும் பல வர்ணச் சித்திரம் எழுதி, புடமிட்ட வெள்ளித் தகட்டினாற் செய்யப்பட்ட நெற்றிப்பட்டமும், தந்தங்களில் விசித்திரமாய்ச் செய்யப்பட்ட தங்கப்பூணும் வெள்ளிப்பூணும், செவிகளில் வெள்ளிக் குண்டலமும், கால்களில் சிறு மணிகள் நிரை நிரையாய்க் கோக்கப்பட்டிருக்கின்ற வெள்ளிச் சங்கிலிகளும், சரீரத்தில் பொற்சரிகை வெள்ளிச் சரிகை இரண்டும் கலந்து இழைக்கப்பட்ட சூரியகாந்திப் பட்டுப் போர்வையும் தரிப்பார்கள். யானைமீது செல்லும் சீமான்களுடைய வரிசைப்படியே முதுகில் அம்பாரி கட்டுவார்கள்.

10. யானைகள் திரளாய்ச் சஞ்சரிக்கின்ற ஆபிரிக்காதேசத்தில் காப்பிரிகள் அவைகளை வேட்டையாடி, அவைகளுடைய மாமிசத்தைப் புசிப்பார்கள். காப்பிரிகள் யானையின் மாமிசத்தை மிகவும் ருசியுள்ள உணவாக மதிப்பார்கள். தந்தங்களை ஐரோப்பியருக்கு விக்கிரயஞ்செய்வார்கள். ஐரோப்பியர் அவைகளாற் கத்திப் பிடிகளும், காகிதம் அரியும் கருவிகளும், வேறு பல உபயோகமான உபகரணங்களும் செய்வார்கள். யானைத் தந்தம் விலையுயர்ந்த அலங்காரப் பொருள். யானைத்தோல் அதிக உரப்புள்ளது. அதை உலர்த்திப் பக்குவமாய்ப் பதஞ் செய்தால், துப்பாக்கிக்குண்டும் அதனை உருவிச்செல்லமாட்டாது.

11. யானைகள் மனிதர் கைவசப்பட் டிருக்கும் பொழுது குட்டி போடுவது அருமை. நாட்டிலுள்ள யானைகள் பெரும்பாலும் காட்டிலிருந்து பிடித்துச் சாதுவாக்கப் பட்டவைதான். இந்து தேசத்திலும் இலங்கைத் தீவிலும் காட்டு யானைகள் நாட்டு யானைகளைக்கொண்டு பிடிக்கப்பட்டுச் சங்கிலி தொடுத்து மதம் அடங்கும் வரையில் பெரிய மரங்களில் கட்டிவைக்கப்படும். அல்லது நான்கு திக்கிலும் பலமான அடைப்புள்ள இடங்களில் விடப்படும். யானைகளைப் படுகுழிகளில் விழுத்திப் பிடிப்பதும் வழக்கம். இலங்கைத் தீவில் யானைகள் திரள்திரளாக உண்டு. அவைகள் அங்குள்ள நெல் வயல்களில் விழுந்து உழக்கிச் சேதம் பண்ணுவதினால், அவைகளைக் கருவறுப்பதற்குக் குடிகள் மிகவும் ஆவலா யிருப்பார்கள். சில வேளை அவர்கள் இருநூறு முந்நூறு பேர் ஒரு கூட்டமாகச் சேர்ந்து யானை பிடிக்கப் போவார்கள். பிடிக்கப்படும் யானை ஒன்றுக்கு 30 ரூபா வீதம் துரைத்தனத்தார் அவர்களுக்கு வெகுமதி கொடுப்பார்கள். ஐரோப்பா தேசத்தில் பல இடங்களிலுள்ள மிருகாசயங்களில் யானைகள் காணப்படுகின்றன.

19. பசியே பெரிய உபாத்தியாயர்

ஜனங்களைச் செவ்வையாக நடக்கச் செய்வன, பசியும் ஊர்காக்கும் காவற்சேவகனுமே என ஒருவர் சொல்லி யிருக்கிறார். பிரஜைகளைப் புசிக்கத் தூண்டுவது பசி. அந்தப் புசிப்புக்கு வேண்டிய பொருள்களை எங்கும் திருடித் தேடாமல் தாமே உழைத்துத் தர்ம மார்க்கமாய்ச் சம்பாதித்துக் கொள்ளும்படி அவர்களை நிர்ப்பந்திப்பவன் காவற் சேவகன். நாம் யாதொரு முயற்சியும் செய்யாதிருப்போமாயின் உணவு அகப்படாமல் வயிறுவாட விழுந்து கிடக்க வேண்டுவதுதான்.

2. ஆதலின் இவ் விஷயத்தில் பசி நமக்கு ஒரு பெரிய உபாத்தியாயரா யிருக்கின்றது. எக்காலத்திலும் மனிதர்களை வருந்தி உழைக்கும்படி தூண்டிவருவது பசியொன்றுதான்; அப்படிச் செய்யவல்லது வேறொன்றுமில்லை.

3. வேண்டும்போது பெற்றுக்கொள்ளத் தமக்கு உணவு சித்தமாய்க் கிடைத்திராமைபற்றி எப்போதும் தமக்குத் தேவையானவைகளைத் தேடிக்கொள்ள வேண்டிய உபாயங்களைச் சித்தமாய் ஏற்படுத்தி வைத்துக்கொண் டிருக்கவேண்டும். ஆகவே, காட்டிலும் நாட்டிலுமுள்ள பற்பல மிருகங்களையும், மீன் முதலிய அநேக ஜல ஜந்துக்களையும், பறவைகளையும் பிடிக்கும் விதங்களையும், பூமிகளைப் பண்படுத்தி விதை விதைத்து

அறிவுடையாக்குகிற வழிகளையும் மனிதர் கற்றறிந்து கொண்டனர்; தங்களுக்கு வேண்டிய இவ் வேலைகளை எளிதில் முடிக்கும்படியான ஆயுதங்களையும் யந்திரங்களையும் கண்டுபிடித்தனர்; பூமி அதிகமாய் விளையும்படி அதைப் பண்படுத்தத் தக்க மார்க்கங்களையும், தங்களுக்கு உதவியான ஜந்துக்களை வளர்க்கும் விதங்களையும் நன்றாய்த் தெரிந்து கொண்டனர். சுபாவத்தில் புசிக்கக்கூடாமல் கடினமாயிருக்கின்ற பதார்த்தங்களை நெருப்பில் சமைத்துப் புசிக்கத் தெரிந்து கொண்டனர். சிலர்க்குத் தங்கள் தேசத்தில் உணவு பூர்த்தியாய்க் கிடைக்காமற் போகவே தேசாந்தரங்களினின்றும் கடல் மார்க்கமாய் அவற்றை அழைப்பித்துக்கொள்ள மரக்கலங்களை ஏற்படுத்திக் கொண்டனர். இப்படி மனிதர்கள் தங்கள் சரீரத்தைப் போஷிப்பதற்காகப் படுகிற பிரயாசமெல்லாம், அவர்கள் மனத்திற்கு மிகவும் உற்சாக முண்டாக்கி, அவர்களை அதிக யுக்தியும் யோசனையும் உடையவர்களாகச் செய்து வேறு காரியங்களில் சுலபமாய்ப் பிரவேசிக்க வழியுண்டாக்கிக் கொடுக்கின்றன.

4. எல்லாம்வல்ல கடவுள் இப்படித் தாம் கொடுத்திருக்கிற வல்லமையையும் யுக்தியையும் நன்றாய் உபயோகிக்கச்செய்து அவரவர் படுகிற பாட்டுக்குத்தக்கபடி பூமியைப் பலிக்கச் செய்வதுதவிர, இன்னும் செவ்வையாய் எவ்வாறு தான் மன்னுயிர்களுக்குக் கற்பித்திருக்கக் கூடும்?

5. நமது உயிரைக் காத்துக்கொள்ள ஓரளவு உணவு வேண்டுமென இப்பொழுது நமக்குத் தெரிந்ததல்லவா? ஆயினும் அவ்வுணவை நாம் பசியெடுத்த பின்பு புசிப்

பதே உத்தமம். ஏனெனில், நாம் வயிறு நிரம்ப நன்றாய்ப் புசித்தால் அது செவ்வையாய் ஜீரணமாகி இரைப்பையை விட்டொழிய நாலைந்து மணி நேரம் செல்லும். அப்படி அவையெல்லாம் ஒழிந்து இரைப்பை சிறிது நேரம் சும்மா இருக்கும்போது, போஜனம் கொள்வதற்கு இது தருணமென்று நமக்குக் காட்ட, மறுபடியும் பசியெடுக்கின்றது.

6. நன்றாய்ப் பசியெடுப்பதற்குமுன், அதாவது முன் உண்ட உணவு முற்றும் இரைப்பையை விட்டு ஒழியாதிருக்கையில், பின்னும் புசிப்போமாயின், செரித்தும் செரியாதுமாயிருக்கிற பழைய உணவோடு இந்தப் புதிய உணவு சேர்ந்து வயிற்றில் கோளாறு உண்டாக்கி, சீரணத்தை மந்தப்படுத்திவிடும். ஆதலால், கூடுமாயின், ஒரே தடவையில் வயிறாரப் புசித்துச் சிலமணி நேரம் சும்மா இருப்பதே நலம்; வாய் ஓயாமல் அடுத்தடுத்துக் கொஞ்சங் கொஞ்சமாய்த் தின்றுகொண்டிருத்தல் ஆகாது.

7. சிறுவர்களுக்கு ஜீவனைக் காப்பாற்றிக்கொள்வதோடு சரீரத்தை வளர்க்க வேண்டியு மிருப்பதால், வயது முதிர்ந்தவர்களைவிடச் சற்று அடிக்கடி அவர்கள் உணவை வேண்டுகின்றனர்; ஆயினும் அக் குழந்தைகளையும் பசியெடுக்கு மளவும் புசிக்கச் செய்யாதிருப்பது உத்தமமாம்; பிள்ளைகளை நல்ல வழியில் விளையாட்டுக் காட்டி அழாமல் வைத்திருக்கச் சோம்புகிற சில தாய்மார்களும் செவிலித்தாயரும் செய்வதுபோல, குழந்தைகளை அழாமல் அடக்குவதற்காக அவர்களுக்கு எப்போதும் ஏதாவது சிற்றுண்டி கொடுத்துக்கொண்டிருப்பது கெட்ட வழக்கமாம்.

8. இவ் வண்ணம் வாயோயாமல் தீண்டி தின்பதனால் சிறுவர்கட்குக் காலபோஜனத்தில் விருப்பம் தணிந்துபோம். இரைப்பையும் வெகுவாய்ப் பலவீனப்படும்; இனிப்பான சிற்றுணவிலேயே அபேக்ஷை யுண்டாகும். அன்றியும், அப் பிள்ளைகள் நோய்கொண்டு அழுமூஞ்சிகளாகிக் கடைசியில் தாய்மார்களுக்கு மிக்க வருத்தம் விளைவிப்பார்கள்; இவ்வளவு அதிகமாய் இடங்கொடுத்துக் கெடுக்காம லிருந்தால் அத்தனை வருத்தம் ஒருபோதும் உண்டாக்கார்கள்.

20. ஆண்மை

தாம் ஆண்மை யுள்ளவர்களா யிருக்கவும் அல்லது ஆண்மை யுள்ளவரெனப் பிறரால் மதிக்கப்படவுமே சிறுவர் விசேஷமாக விரும்புகின்றனர். அதைப் பார்க்கிலும் அதிகமான அவா அவர்கட்கு மற்றொன்றிலுமில்லை. அப்படி அவர்கள் ஆண்மைக் குணமுள்ளவர்களா யிருக்க விரும்புவது மிகவும் நல்லதுதான். ஆயினும், ஒரு கோபுரத்தைப் பற்றி உபந்நியாஸ மெழுதப்புகுந்த விளையாட்டுப் புத்தியுள்ள வாலிபன் "பிள்ளையார் பிடிக்கப்போய்க் குரங்காய் முடிந்தது" என்பது போலக் கோபுரம் என்னும் பேர்பெற்ற ஓர் பந்தயக் குதிரையின் பிறப்பு வரலாறு, உருவமைப்பு, அது பந்தயங்களில் பெற்ற ஜயம் முதலியவைகளை வர்ணித்தெழுதியதுபோல் இவர்களும் ஒன்று கிடக்க ஒன்றாக நினைத்து நடக்கின்றனர். தான் எழுதப் புகுந்த விஷயம் இன்னதென்பதையே அவன் நன்றாய் அறிந்துகொள்ளவில்லை. பல பிள்ளைகள் தாங்கள் ஆண்மையுள்ளவர்களா யிருக்க வாய்த்த காலத்திலும் அப்படி யிருப்பதில்லை. அவர்கட்கு ஆண்மைக்குணம் இப்படிப்பட்ட தென்பதும் தெரியாது; அதைப் பெறத் தாம் பாடுபட வேண்டிய வழி இன்னதென்பதும் தெரியாது.

2. அத் தன்மையான பிள்ளைகளுள் ஒருவன் ஆண்மைக்குண முடையவனா யிருக்கவேண்டு மென்று

மிக்க அவாக்கொண்டு, 'நான் அதற்காக ஆண்மக்களைப்போ லிருக்கவேண்டும்: ஆண்மக்கள் ஒழுங்காய் மீசை வைத்துக்கொண்டு, பொன்சங்கிலி, மூக்குக் கண்ணாடி, சரிகைத் தலைப்பாகை, விதம்விதமான உடை இவைகளைத் தரிக்கின்றனர்; வெகு அழகான பிரம்புகளைக் கையில் பிடித்து அலங்காரமாய்ச் சுழற்றிக்கொண்டு போகின்றனர்; மோதிரங்கள் இட்டுக்கொள்ளுகின்றனர்; புகைச்சுருட்டுப் பிடிக்கின்றனர்; அடங்காமல் தங்களிஷ்டம் போலப் பேசுகின்றனர்; ஆண்மைக்குண முள்ளவனு யிருக்கவேண்டுமென்றால் நானும் இவ்வண்ணமே நடக்க வேண்டும்' என்று நினைக்கிறான். இவ்வாறு நினைப்பது மிகவும் பிசகானது; இவன் பார்த்து மேல்வரிச்சட்டமாகக் கொள்ளத்தக்க நடக்கையும் வெளித்தோற்றமுமுள்ள மனிதர் விசேஷமாய்க் கிடைப்பதரிது. மேற் சொன்னமாதிரி நடக்கையுள்ளவர்களெல்லாம் யோக்கியரான மனிதர்களல்லர். மேலுக்கு அற்புதமான உடை உடுத்துக்கொண்டிருப்பவனுயினும், உண்மையாகப் பெருந்தன்மை யுள்ளவனு யிருக்கலாம். ஆகையால், பிள்ளைகளே, நீங்கள் ஆண்மை யுள்ளவர்களா யிருப்பதற்குச் சுருட்டு மோதிரம் முதலியவை வேண்டுவதில்லை; இவற்றைவிடச் சிறந்ததான மற்றொன்று வேண்டும். ஆண்மை உள்ளவராக வாயினும் இல்லாதவராக வாயினும் ஆவது உங்களிடத்திலுள்ள பொருள்களாலு மன்று; வெளிக்குப் புலப்படுகிற உங்களுடைய நடையுடை பாவனைகளாலு மன்று; நீங்கள் நிற்கின்ற நெறியினாலும் செய்கின்ற செய்கையாலுமேயாம்.

3. மற்றொரு வகையான பிள்ளை, 'நான் ஆண்மை யுள்ளவனுயிருக்க விரும்புகிறேன். ஆண்மைக்குணத்தை வேண்டுகிறவன் தைரியசாலியா யிருக்க வேண்டும்.

தைரியமே முதன்மையானது. பகைவர்க்கு வசப்படாமலும் பின்வாங்காமலும் இருக்கின்ற பேர்வீரனும், பயம் இப்படிப்பட்டதென்றே அறியாதிருப்பவனும், தன் சொந்தமான சுகலாபங்களைத் துறந்திருப்பவனும், தான் விரும்பியதைக் கைக்கொள்ளுமளவும் காரியத்தில் கண்ணு யிருப்பவனும், சமயம் வந்தபோது எவ்விதமான துன்பத்திற்கும் உயிரைக் கொடுத்தற்கும் துணிந்திருப்பவனும், இவர்களுக் கெல்லாம் மேலாய் ஒன்றுக்கும் இணங்கா திருப்பவனும் ஆகிய இவர்களே ஆண்மை யுள்ளவர்களாம்; இப்படிப்பட்டவையே ஆண்மைக் குணமாம்' என்று சொல்லுகிருன். இந்தப் பையனையே நான் கொண்டாடுகிறேன். ஆண்மைக் குணமென்பது இவனிடத்தில் சிறிதுண்டு. முன் சொன்னவ னிடத்தில் அது அமைந் திருப்பது சந்தேகமே. இவனும் ஆண்மைக் குணத்தில் ஓர் சிறிதுமாத்திரம் பெற்றிருப்பவனேயன்றி முற்றும் பெற்றவனல்லன். தைரியமும் கஷ்டநஷ்டங்களைத் தாங்கும் பொறுமையு மாத்திரமே ஆண்மைக் குணமல்ல; அவை சிறந்த குணங்களே யாயினும், அந்தக் குணம் மிருகங்களுக்கும் உண்டு. மேலும் அவை நமது தேகத்தைப்பற்றிய குணங்களேயன்றி மனத்தைப் பற்றியவை யல்ல. மனிதர்களிடத்துப் பார்க்கிலும் மிருகங்களிடத்து அவை மிக்வும் விசேஷமாய்க் காணப்படுகின்றன. அதனுல் நாய் முதலிய மிருகங்கள் ஆண்மையுள்ளவையாகுமோ? இரண்டாவது, ஒரு மனிதன் தைரியமுள்ளவனும், வருத்தங்களை மதியாதவனுமா யிருக்கலாம்; அதனேடு கொடியனும் துஷ்டனுமாயு மிருக்கலாம்.

4. இன்னு மொரு தன்மையுள்ள பிள்ளை யுண்டு. அவன் பலவர்ணமான வஸ்திரங்களைத் தரித்து, மல்ல

யுத்தங்களை மேலாக மதிக்கிறான். இதைப்பற்றி அவன் சொல்வதென்ன? பந்தயங்களிலும் பலவகை வீரச்-செயல்களிலும் வெற்றி பெறுவது ஆண்மைக் குணமாம்: இக் குணமுள்ளவனை ஆண்பிள்ளையெனக் கூறுகிறார்களல்லவா? தைரியமாய் வாகனமேறிச் செலுத்துகின்றவனும், குறி தவறாத வில்லாளியும், துணிவுள்ள மல்லவீரனும், கைச்சுறுக்கும் கண் கூர்மையும் உள்ளவனும் ஆகிய இவர்கள் ஆண்மை யுள்ளவர்கள் என்றிப்படித் துணிவாய்ப் பேசுகிறான்.

5. இரண்டாம் பிள்ளை சில விஷயங்களில் முதற்-பிள்ளையை ஒத்திருப்பது போலவே மூன்றாம் பிள்ளை-யும் பல விஷயங்களில் இரண்டாம் பிள்ளையை ஒத்-திருக்கிறான். இவர்கள் இருவரும் தேகபலத்தையும் சுகதுக்கங்களைத் தாங்கும் திறத்தையும், கஷ்டநஷ்டங்-களுக்குச் சலியாத விடாமுயற்சியையும் மேலாக மதிக்-கின்றனர். ஆயினும், இவ்வளவே ஆண்மைக்குரிய குணங்களென நினைப்பார்களாயின், அவர்கள் பிச-கினவர்களே. சுறுசுறுப்பான விளையாட்டுக்கள் மிகச் சிறந்தவைதாம்; ஒருவேலையும் செய்யாமலும், அல்லது மிகக் கேடுகெட்டதான ஒன்றைச் செய்துகொண்டும், பள்ளிக்கூடத்தில் ஒருபோதும் விளையாடாமல், மந்த-மாய்ச் சோம்பி உட்கார்ந்திருக்கிற சிறுவன் ஒன்றுக்கும் உதவான். ஆயினும் பந்தடித்தும் போர்செய்யப் பழகி-யும் விளையாடாதவர்கள் ஆண்மை யுடையவர்களல்ல-ரென்று சிறுவர்களும் பெரியோர்களும் சொல்வது மிகப் பிசகானது. அது சரியாயிருக்குமாயின், தேகபலமில்-லாத எவனும் ஆண்மையுடையவனா யிருக்கலாகாதே. மிகுந்த தைரியசாலியா யிருந்தவர்களும் சிலர் தேகபல

மற்றவர்களா யிருந்தனர். அப்படித் தேகபலமின்றி மிக்க தைரியசாலியா யிருந்தவர் லார்டு நெல்ஸன் என்னும் பெரிய கப்பற்படைத் தலைவர்.

6. ஆண்மைக் குணத்தில் சேராதவை இவை யென்பதை நாம் இப்போது அறிந்துகொண் டிருக்கிறோம்; அதிற் சேர்ந்தவை எவை யென்று பார்ப்போம். தைரியத்தோடு கூடத் தன்னுடைய கோபதாபங்களை அடக்கிக் கொள்ளும் குணமும், செய்கடனிற் கருத்தும் வேண்டும். தான் பேர்பெற வேண்டுமென்பதற்காகவே ஒருவன் ஒரு நற்செய்கை செய்வானாயின், அச் செய்கையின் பெருமை அத்தனையும் தன்னயம் பாராட்டுகின்ற ஒரு துர்க்குணத்தால் அழிகின்றது. அவ்வாறு தன்னைப்பற்றி நினையாமல் அது தன் கடமை யென் றெண்ணிச் செய்பவனிடத்திலேயே ஆண்மைக் குணம் சரியாய் அமைந்து இருக்கின்றது. ஆண்மைக் குணம் நம்மிடத்தில் பரிபூரணமாய் அமைந்திருக்க வேண்டுமென விரும்புவோமாயின், தைரியமும் உண்மையும் உடையவர்களா யிருப்பதோடுகூட, அடக்கமும் வணக்கமும் மனத்தூய்மையு முள்ளவர்களாயிருக்க வேண்டும். கடைசி வார்த்தையாக ஒன்று சொல்லுகிறோம்: சாந்த குணம், ஜீவகாருணியம், தைரியம், வலிமை, நீதி, விவேகம், உண்மை இக்குணங்களில்லாத எவனும் எப்பொழுதும் இதுவரையில் பெருமை பெற்று வாழ்ந்ததில்லை.

21. குண்டூசியிற் கண்ட கருந்தனம்

இன்றைக்கு நூற்று முப்பத்துநான்கு ஆண்டுகளுக்கு முன் அதாவது 1788-ம் வருஷத்தில் ஒரு வாலிபன் பாரிஸ் நகரத்துக்குப் போயினன். அப்பொழுது அவனுக்கு வயது இருபத்தொன்றிருக்கலாம். வெளித் தோற்றத்தினாலேயே அவன் ஒரு பட்டிக்காட்டானெனவும் வறுமையால் வருந்துகிறவனெனவும் விளங்கியது. இராமுழுதும் ஓயாது நடந்து வந்தவனாகையால், அப்பொழுது அவன் உடல் மெலிந்து மிகவும் இளைப்புற்றிருந்தான். மேலும் அன்று காலை முதல் அவனுக்குப் போஜனமே கிடைக்கவில்லை. அப்பொழுது அவ் வாலிபனைப் பார்க்கையில், முதலில் உணவுக்கு வேண்டிய வழி தேடிக்கொண்டுதான் அவன் மற்றொரு வேலை பார்ப்பானென்று எண்ணும்படியாக இருந்தது. ஆயினும் அவன் கையில் ஒரு காசு கூட இல்லாமல் திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்று தெய்வத்தை நம்பி வந்திருப்பதனால் உணவு தேடிக்கொள்ள அவனுக்கு யாதொரு வழியு மில்லை. ஆயின் மிகப் பிரசித்திபெற்ற ஒரு பெரிய வர்த்தகனைக் காண்பதற்கு ஒரு கடிதம் மாத்திரம் அவன் கையில் இருந்தது. அவ் வர்த்தகன் இருக்கும் இடமோ அவ் வாலிபனுக்குத் தெரியாது. அதனால் எங்கெங்கேயோ தேடிப் பலபேரைக் கேட்டு விசாரித்துக் கடைசியில் அவ்விடத்தைக் கண்டுபிடித்தான். அந்தப் பெரிய மனிதனைக்

கண்டு கடிதம் கொடுத்தபோது அவன் மனம் எவ்வாறு அலைபாய்ந்ததோ? ஏனெனில் அவனுக்குள்ள ஆதாவெல்லாம் அக்கடிதமொன்றே யாகையால் அது அனுகூலப்படாவிடின் அப்போதே அவன் உயிரை யிழக்க வேண்டுவதுதான். அதிகாரி அக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கையில் அவன் முகக்களை எப்படி மாறுகிறதோவென்று அச் சிறுவன் அவன் முகத்திலேயே கண் வைத்துப் பார்த்திருந்தான். அதிகாரியோ அக் கடிதத்தைக் கடைசிவரையில் வெகு தீவிரமாய்ப் படித்துப் பார்த்து மனக்கவலையுடன் மடித்துவிட்டு, 'என் வர்த்தகசாலையில் இப்போ திருக்கிற உத்தியோகஸ்தர்களே, வேண்டும் அளவிற்கு அதிகம்; இன்னும் அதிகமாய்ச் சேர்த்துக் கொள்ள அவகாசமில்லையே' என விடை பகர்ந்தான்.

2. அவ் வாய்மொழியைக் கேட்டவுடனே அச் சிறுவன், மிகவும் திட னழிந்து துக்கமுற்றானாயினும் வாய்திறந்து ஒன்றும் பேசாமலே தலைவணங்கி அவ் விடம்விட்டு வெளியே போகத் திரும்பினான். ஆயினும் இன்ன விடத்திற்குப் போகிற தென்று தோன்றாமல் மிக்க கவலையுற்றவனாயினான். ஆனால் இச் சிறுவனைப் பார்த்தவுடனே மாத்திரம் அவ்வதிகாரியி னுள்ளத்தில் அவனைப்பற்றி ஏதோ கொஞ்சம் கருத்துத் தோன்றியிருந்தது. அவ்வெளிய பையன் அவ்விடம் விட்டு வெளியே போமளவும் அதிகாரியின் கண் அவன் பின்னேயே சென்றது. அப்படி அவன் பார்த்திருந்ததற்கு உத்தேசமொன்றும் இல்லாமலே யிருக்கலாம்; சும்மா நேரங்கழிக்கப் பார்த்திருந்தாலு மிருக்கலாம். நோக்கம் எதுவாயிருப்பினும் அது வீணாகவில்லை. வெளியே

போன பையன் அங்கோரிடத்தில் குனிந்து ஏதோ ஒரு சிறு பொருளைத் தரையினின்று எடுத்துத் தன் உடையில் காட்டிக்கொண்டான். அதைக் கண்ட வுடனே அதுவரை அவனை உதாசீனமாய்ப் பார்த்திருந்த பெரிய மனிதன் அதிக கவனத்துடன் அவன்மேல் கண்வைக்கலானான். அவன் கண்டெடுத்த பொருள் என்னென்று நினைக்கிறீர்கள்? அது ஒரு சிறிய குண்டூசியே யொழிய வேறல்ல. பேதைகள் பூமியில் வீழ்ந்து கிடக்கும் குண்டூசி போன்ற அற்பப் பொருள்களைப் பொறுக்கியெடுப்பது சாதாரணமே; அது அத்தனையாகக் கவனிக்கத்தக்கதுமல்லவே என்பீர்களோ? மேல் பார்வைக்கு அது அத்தனை அற்பமாகத் தோன்றினாலும், அச் செய்கையானது ஒருவர்க்கு நற்குண நற்செய்கைகளில் இயற்கையாகவே ஆஸ்தையுண்டென்பதைக் குறிப்பிக்கின்ற பெருங் குறிகளுள் ஒன்றென அந்த வியாபாரி கண்டறிந்தான். அதாவது, பொருள்களிடத்தில் செட்டும் சிருமாய் இருப்பானென்பதை இச் செயல் விளக்குகின்றதெனத் தெரிந்து, அதிகாரி அச் சிறுவனிடத்தில் அன்புகூர்ந்து, போன பையனைத் திரும்பவும் வரவழைத்து மிகப் பெரியதான தன் காசுக் கடையில் எளிய தொழிலொன்று செய்யும் தொழிலாளியாய் அவனை ஏற்படுத்தினான்.

3. அச் சிறுவனுக்கு ஜாக்ஸ் லப்பீட்டு என்று பெயர். அவன் பேயன் நகரத்து ஒரு எளிய கம்மாளனுடைய மகன். அந்தத் தகப்பனுக்குப் பத்துப் பிள்ளைகள். அவன் உழைத்து வேலை செய்து அப் பிள்ளைகளைக் காப்பாற்றவேண்டி யிருந்தது. லப்பீட்டு காணப்போன காசுக்கடைக்காரனோ மிகப் பிரசித்தி-

பெற்ற அரசிறைக் கணக்கனும் பாரிஸ் நகரத்திலுள்ள சிறந்த தனிகர்களுள் ஒருவனுமாம். அவனுக்கு மெஸ் பாரகாக்ஸ் என்று பெயர். இச் சிறுகதையைப் பலதரம் கேட்கப் பிராஞ்சு தேசத்தார் போாவல்கொண்டவர்கள். அதற்கேற்றபடியே இக் கதையும் பலதரம் உரைத்துக் கேட்கத் தக்கதுதான். இச் சமயத்தில் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுவது ஒன்றுண்டு. ஜாக்ஸ் லப்பீட்டினுடைய நடை உடைகளிருக்கட்டும்: பிரகிருதியே பெருந்துணையாக நின்று அவனுக்குச் சகாயம் செய்தது. பிரகிருதிக்கு உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமை கிடையாதல்லவா? வெகு சுந்தரமான முகமும், தனக்கு முக்கியாதாரமாக நினைத்திருந்த காரியம் கைகூடாமற் போன அவ்வமயத்திலும், மாறுபடாததும் பாதீனத்தை எதிர்பாராததுமான பெருந்தன்மையும், மிகத் தெளிவான வாய்மொழியும், கபடமற்ற காட்சியுமாகிய இவைகள், லப்பீட்டினுடைய வடிவத்தில் விளங்கியதனால், அவற்றைக் கண்டே அந்தப் பிரபுவுக்கு, பொருள்களிடத்தில் மிகு கருத்துடைமையை விளக்குவதான அச் சிறு செய்கையையும் கவனமாய் உற்றுப்பார்க்கப் போதுமான அன்பு அவனிடத்தில் உண்டாயிற்று. அவனை அவ் வுத்தியோகத்தில் நியமித்த சில தினங்களுக்குள்ளேயே அவ்வதிகாரத்தை ஆளும்படியான திறமைகள் அவனிடத்தில் அதிகமா யிருக்கின்றனவென அதிகாரிக்கு வெளிப்படையாகத் தோன்றியது. லப்பீட்டினுடைய யுக்தி புத்தி சாமர்த்தியங்களை அவனுடைய காரியங்களில் காணவே யஜமானனுக்கு அவனிடத்தில் அதிக சந்தோஷ முண்டாயிற்று. வாஸ்தவத்தை யோசிக்குமளவில் லப்பீட்டு தானாகவே இங்குமங்கும்

திரிந்து சிற்சில விஷயங்கள் தெரிந்து கொண்டானே யொழிய மற்றைப்படி அவன் ஓரிடத்திலும் கிரமமாய்க் கல்வி கற்றவனல்லன்; வேலை செய்த கைப்பழக்கமும் விசேஷமாய்க் கிடையாது; ஸ்வகிராமத்திலே ஒரு ராயசக்காரன் கையின்கீழ் வேலைக்காரனா யிருந்தான் என்பது ஒன்றுதான். இப்படி அவ் வேலை செய்யப் புகுந்ததும், எவ்விதத்திலாவது பொருள் சேர்த்துத் தான் தனிகனாக வேண்டுமென்ற பொருளாசையா லல்ல. உலகத்தா ரனைவரும் மதிக்கும்படியான மகிமை தன்னிடத்தில் விசேஷமாய் இருக்கிறதென்று கண்டு அதனாலுமல்ல; பின்னென்ன வெனில், நமக்கு ஸ்வாமி ஏதோ சிறிது சக்தி அளித்திருக்க அதனை வீணிற் கழிப்பது உசிதமின்றெனத் தெரிந்து அத் திறமையை அனுபவத்திற் காட்டவேண்டு மென்ற கருத்தினாலேதான்.

4. ஜாக்ஸ் லப்பீட்டு அந்தப் புதிய உத்தியோகத்தை ஏற்றுக்கொண்ட வுடனே, நாம் முன் சொல்லிய வண்ணமே, குண்டூசி முதலிய சிறு பொருள்களையும் கவனமாய்க் கண்டெடுத்துச் சேர்க்கும் குணமுள்ளவனென்று மாத்திரமே யல்ல, பின்னும் பலவகை உத்தம குணங்களு முள்ளவனெனத் தன் யஜமானனுக்கு விளங்கச் செய்தான். அனைவரும் மெச்சிக்கொள்ளும்படி கள்ளங் கபடற்ற நடை பாவனைகளோடுகூட அவன் செய்தொழிலில் மிக்க ஊக்கமும் உடையோனா யிருந்தான். அத்தொழில் முயற்சியும் எப்போதும் ஓர் ஒழுங்குபாட்டை அனுசரித்ததாகவே யிருந்தது. அவ்வொழுங்குபாடும், ஒருவருடைய உபதேசமா யிராவிடினும், தன் மனப் போக்கைத் தன் வசப்படுத்தும்

வழக்கத்தால் உண்டானதாம். ஆயினும், தன் புத்திக்கு தோன்றியதே சரியென்ற பிடிவாதம் அவனுக்கு ஒரு போதும் இல்லை.

நாண்பெரியோ மல்லோநா நன்றுந் தீது
நமக்குரைப்பா ருளரென்று நாடி னேமே.

என மேலோ ருரைத்தபடி, பிறர் ஏதாவது நன்மை தீமைகள் எடுத்து உரைத்தால் அவற்றையும் உசிதமென்று ஏற்றுக்கொள்ளும் உத்தமகுண முடையனு யிருந்தான்; ஆனதுபற்றி அவன் ஆலோசனையில் மாத்திரமே யல்ல, காரியங்களைத் தானே ஆய்ந்தோய்ந்து பார்த்துக் கிரமப்படி நடத்துவதிலும் மிக வல்லவனென யஜமானனுக்குத் தெளிவாகத் தெரியவந்தது. அதனுல் லப்பீட்டு வெகு சீக்கிரமே அந்த வர்த்தகசாலையிலுள்ள கணக்குப் புத்தகங்களுக்கெல்லாம் விசாரணைத் தலைவனுக நியமிக்கப் பட்டான். நாளுக்கு நாள் அவனுடைய யோக்கியதையும் திறமையும் வெளிப்படையாயின; அவ்வண்ணமே யஜமானனுக்கு அவ்விடத்தில் நாளுக்கு நாள் நம்பிக்கையும் அதிகமாகி வந்தது. பின்பு அவன் அவ் வுத்தியோகத்திலிருந்து ஏற்ற சமயத்தில் மிகவும் உத்தரவாதமான பொக்கிஷதாரர் உத்தியோகம் பெற்ருன். அவ்வண்ணமே நடந்துவந்து நாளாவர்த்தியில் அந்த வர்த்தகசாலையிலே ஒரு பாகஸ்தனுகிக் கடைசியில் பாரகாக்ஸ் இறந்துபோன பிறகு அவன் காரியங்களை விசாரிப்பவனுகவும், அந்தச் சாலைக்குத் தலைவனுகவும் ஏற்பட்டான். இது அவனுக்கு மிகவும் பெருமையான தல்லவா? பின்பு 'லப்பீட்டு அண்டு கம்பனி' என ஒரு வர்த்தகசாலை ஏற்பட்டது. லப்பீட்டு தன்னுடைய நன்றி மறவாமைக்காக இறந்துபோன தன்

யஜமானனுடைய மகனுக்கு அந்த வர்த்தகசாலையி-லிருந்து தீர்வை கொடுத்து வந்தான். இவ்வண்ணம் கீழே கிடந்த குண்டூசியைக் கண்டெடுத்த காரணத்தால் ஒருவனுக்கு இவ்வளவு பாக்கியம் கிடைத்ததென்றால், சிக்கன மென்பதைச் சிறிதும் கவனியாமல் அநேகர் எதையும் வீணே யிழந்து அல்லாடுவது என்ன புத்தி யீனமோ?

22. சேலம் இராமசாமி முதலியார்

சீவக சிந்தாமணி முதற் பதிப்பு முகவுரையிலே, 'இச் சீவக சிந்தாமணியை உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர் உரையுடன் பல பிரதி ரூபங்களைக் கொண்டு நன்றாய்ப் பரிசோதித்து எழுதுவோரால் நேர்ந்த வழுக்களை மாற்றிப் பலர்க்கும் பயன்படும் வண்ணம் அச்சிடுவிக்க முயலும்படி சில வருடத்திற்கு முன் சேலம் ம-ா-ா-ஸ்ரீ, இராமசாமி முதலியாரவர்கள் பலமுறை வற்புறுத்திக் கூறி, எனக்குத் தம்பாலிருந்த கையெழுத்துப் பிரதியையுங் கொடுத்தார்கள். யான் அவ்வாறு செய்தற்கு அநருகனாயினும், உலோகோபகாரிகள் ஆகிய அவர்கள் சொல்லை மறுத்தற் கஞ்சியும், கல்விமான்களுக்குக் கருவூலம்போலும் இந் நூல் உரையுடனே நின்று நிலவுதல் குறித்தும் ஒருவாறு அவ் வண்ணம் செய்யலா மென்று துணிந்தேன்' என மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாத ஐயரவர்களாற் புகழப்பட்ட சேலம் இராமசாமி முதலியார் சேலத்திலே புராதன குடும்பமொன்றிலே 1852ஆம்ஸு செப்டெம்பர்மீ 6உயிலே பிறந்தவர். இவர் பிதா கோபாலசாமி முதலியார் நாமக்கல் தாசில் வேலை பார்த்தவர். இவர் பிதாமகர் சேலத்திலே பெரிய மிட்டாதாரும் ஈஸ்த் இந்தியா கம்பெனியாரிடத்தில் கவுரவ உத்தியோகஞ் செய்தவருமாவர்.

2. இராமசாமி முதலியார் ஆறாம் வயதிலேயே படித்தற்குச் சென்னைக்கு அனுப்பப்பட்டார். அங்குத் தமிழ்க் கல்விநிறைந்தார் விசாரிப்பின்கீழ்க் கல்வி பயின்றதனால், அவர்க்குத் தமிழ் மொழியிடத்துப் பற்றுண்டாயிற்று. பச்சையப்பன் பாடசாலையிலும் ஹைஸ்கூலென்று வழங்கும் இராஜதானிக் கலாசாலையிலுமாக இங்கிலிஷ் பயின்று பி. ஏ. பரீக்ஷை வரை தேறினார். இவர் இவ்வுயர்ந்த பரீக்ஷையில் சென்னை இராஜதானிக்கெல்லாம் முதலாகத் தேறவே, இவர் கற்ற கலாசாலைத் தலைவர் தாம்ஸன் துரை இவரைத் தமக்கு உதவிப் போதகாசிரியராய் இருக்கும்படி கேட்டனர். இவர்க்கு அவ் வுத்தியோகத்தைப் பெற விருப்பமிருந்தும், இவர் தம்மினும் அதிகமாக அவ் வுத்தியோகத்தை வேண்டிநின்ற நண்பரொருவர் அதைப் பெறும்படி செய்தார். அந் நண்பரும் இவர்க்கு இரண்டாவதாகப் பரீக்ஷையில் தேறியவரே.

3. இராமசாமி முதலியார் பின்னும் படிப்பைக் கைவிடாமல் 1873ஆம்௵த்திலே எம். ஏ. பரீக்ஷையில் தேறினார். இரண்டு வருஷம் கழித்து பி. எல். பரீக்ஷையில் பி. ஏ. யில் போலவே எல்லாருக்கும் முதலாகத் தேறினார். ஒரு வருஷம் நியாயவாத முறை பயின்று 1876ஆம்௵ ஹைக்கோர்ட்டு வக்கீல் என்னும் பட்டமும் அதற்கேற்ற சன்னதும் பெற்றுத் தமது புராதன நகரமாகிய சேலத்துக்குச் சென்று நியாயவாதத் தொழிலில் அமர்ந்தார்.

4. இராமசாமி முதலியாரின் கம்பீர நடையும் வழக்குகள் நடத்தும் பாணியும் ஜில்லா ஜட்ஜியின் நல்லெண்ணத்தைக் கவர்ந்தன. முதலியாருக்கு நியா-

யாதிபத்தியம் செலுத்துவதில் மனம் நாடிற்று. அப்படியே அவர் மேலதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து கொள்ள, ஜில்லா ஜட்ஜி அவ் விண்ணப்பத்தின்மேல் 'சட்டத் தேர்ச்சியிலும், இதைவிட முக்கியமானதென்று எனக்குத் தோன்றும் நடத்தையிலும் இவர் அருகர் என்று சந்தோஷ பூர்வமாக நான் அபிப்பிராயங் கொடுக்கிறேன்' என்று எழுதினர். சிறிது காலத்திற்கெல்லாம் இவர் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் முனிசீப் வேலையில் அமர்த்தப்பட்டார். வேலை வகிப்பதில் கடவுளுண்டென்று நம்பியும் மனச்சாட்சியை யனுசரித்தும் நடந்தார். இவர் மனத்திலே இளமையிற் படிந்த,

இருவர்தஞ் சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா ராயின்
மநுநெறி முறையின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின் றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளா கும்மே

என்னும் அடிகளை ஒரு நிமிஷமும் மறந்தவரல்லர். தீர்ப்பு யாவராலும் ஆக்ஷேபிக்கக்கூடாததாயும் மேல் அதிகாரிகளால் மாற்றக்கூடாததாயு மிருக்கும். இவரிடத்து யாராவது சிபார்சி செய்வார்களாயின் அவர் தம்மை அவமதிப்பதாக நினைப்பார். ஒரு சமயம் இவருக்கு நன்ருகத் தெரிந்தவ ரொருவரிடம் கடிதங் கொண்டுவந்து ஒரு கக்ஷிக்காரன் இவரைக் கண்டான். இவர் அவனுக்கு ஏற்ற உபசாரங்கள் செய்வித்துத் தாம் கோர்ட்டுக்குப் போகும்பொழுது அவனையும் தம் வண்டியில் ஏற்றிக்கொண்டு போனர். கக்ஷிக்காரன் குதூகலமா யிருந்தான். கோர்ட்டில் முதலாக இவன்

வழக்குத் தீர்ப்புச் சொல்லப்பட்டது. அத் தீர்ப்பு இவனுக்கு முற்றும் பிரதிகூலமா யிருந்தது. அச் சமயத்தில் முதலியார், சிபார்சிக் 'கடிதங் கொடுக்கும் கொடிய வழக்கத்தைக் கண்டித்தும் பேசினர்.

5. ஆயினும் முதலியார் நெடுநாள் சர்க்கார் உத்தியோகம் வகிக்கவில்லை. ஜனங்களுக்குச் சாதகமாகிய விஷயங்களில் முழு மனத்தோடு உழைக்க வேண்டுமென்னும் எண்ணம் பலப்பட அவர் 1882 ஆம் ஞூத்தில் சர்க்கார் உத்தியோகத்தை விட்டு நீங்கினர். நீங்கிச் சென்னையில் உயர்தர நீதிக்கோர்ட்டில் நியாயவாதம் புரியத் தலைப்பட்டுச் சிறப்புக்கள் பல அடைந்தார். வேலைக் கெடுவு முடிந்து உபகாரச் சம்பளம் பெற்றுச் சொந்த நாட்டின்மீது நாட்டங்கொண் டேகும் சென்னை 'எக்ஸிக்கூட்டிவ் கவுன்ஸில்' மெம்பர்களுக்குப் பகிரங்கமாகச் செய்யும் வந்தனோபசாரத்தை மறுத்து 1882ஞூத்தில் பெரிய கூட்ட மொன்றிற் பிரசங்கித்தார். தேச வாட்சியில் ஆங்கிலர்க்குத் துணையாகச் சுதேசிகளைப் பெரிய உத்தியோகங்களில் அமர்த்தவேண்டுமென்று சென்னை மஹாஜன சபையாரை வற்புறுத்திச் சொல்லச் செய்தவர் அவரே. இங்கிலாந்துக்குச் சென்று ஆங்கிலர்களின் மத்தியில் இந்தியர்களின் துயர், துக்கம், கொடுமை, குறை, முறைப்பாடுகளை எடுத்துச் சவிஸ்தாரமாகச் சொல்லுதற் கேற்றசமயம், இந்திய சீமான்களில் அறிவும் தெளிவு முள்ளவர்களுக்கு வாய்த்தபொழுது, சென்னைப் பிரதிநிதியாக 1885ஆம் ஞூத்திற் கப்பலேறிச் சென்றவர் இராமசாமி முதலியாரே. சென்னை மஹாஜன சபையார் வற்புறுத்திக் கூறியதை யனுசரித்து

1889ஆம் ௵த்தில் 'பப்ளிக் செர்விஸ் கமிஷன்' ஏற்பட்டபொழுது சென்னைபுரியின் அங்கத்தவராக முதலியாரே அனுப்பப்பட்டார். ஜனங்களுக்குச் சாதகமாகிய விஷயங்களில் உற்சாகத்தோ டுழைத்துப் பெரும் புகழ் படைத்து 1892ஆம்௵ மார்ச்சுமீ 2௳ அவரை யறிந்தோ ரெல்லாம் மனம் வருந்த விண்ணுல கெய்தினர்.

செய்யுட் பாடத் திரட்டு

வாக்குண்டாம்

நீரளவே யாகுமாம் நீராம்பல் தான்கற்ற
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு — மேலைத்
தவத்தளவே யாகுமாம் தான்பெற்ற செல்வம்
குலத்தளவே யாகும் குணம். (1)

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றேஎ — நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று. (2)

தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவும் தீதேஎ — தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோ
டிணங்கி யிருப்பதுவும் தீது. (3)

நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் — தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்
டெல்லார்க்கும் பெய்யும் மழை. (4)

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் — சவைநடுவே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறிய
மாட்டா தவன்நன் மரம். (5)

கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத் — தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி. (6)

அடக்க முடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா — மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. (7)

அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர் — அக்குளத்திற்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறுவார் உறவு. (8)

கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே — விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம். (9)

நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் — கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
காக்கை உகக்கும் பிணம். (10)

நஞ்சுடைமை தானறிந்து நாகம் கரந்துறையும்
அஞ்சாப் புறங்கிடக்கும் நீர்ப்பாம்பு — நெஞ்சிற்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர். (11)

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றஇட மெல்லாம் சிறப்பு. (12)

நல்வழி

சாதி இரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் — மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி. (13)

ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளும்அவ்வா
றூற்றுப் பெருக்கால் உலகூட்டும் — ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து. (14)

ஒருநா ளுணவைஒழி யென்றால் ஒழியாய்
இருநாளுக் கேலென்றால் ஏலாய் — ஒருநாளும்
என்னோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே
உன்னோடு வாழ்தல் அரிது. (15)

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே — ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. (16)

பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கால்
இச்சைபல சொல்லி இடித்துண்கை — சிச்சீ
வயிறு வளர்க்கைக்கு மான மழியா
துயிர்விடுகை சால உறும். (17)

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானுடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம். (18)

வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே — மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரஞ் சொன்னார் மனை. (19)

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் எழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு. (20)

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல். (21)

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன — கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான். (22)

வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற்
பட்டுருவுங் கோல்பஞ்சிற் பாயாது — நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும். (23)

கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றங் கெதிர்கொள்வர் — இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல். (24)

நீதி வெண்பா

தாமரைபொன் முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா — தாமழன்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என். (25)

ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே
இருபோது போகியே என்ப — திரிபோது
ரோகியே நான்குபோ துண்பான் உடல்விட்டுப்
போகியே என்று புகல். (26)

ஆசைக் கடியான் அகிலலோ கத்தினுக்கும்
மாசற்ற நல்லடியா னவானே — ஆசை
தனையடிமை கொண்டவனே நப்பா துலகந்
தனையடிமை கொண்டவனே தான். (27)

ஈக்கு விடந்தலையில் எய்தும்இருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே — நோக்கரிய
பைங்கண்அர வுக்குவிடம் பல்லளவே துர்ச்சனருக்
கங்கமுழு தும்விடமே யாம். (28)

கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே — வம்புசெறி
தீங்கினர்தங் கண்ணிற் றெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி. (29)

மந்திரமும் தேவும் மருந்தும் குருவருளும்
தந்திரமும் ஞானந் தருமறையும் — யந்திரமும்
மெய்யென்னில் மெய்யாய் விளங்குமே மேதினியிற்
பொய்யென்னிற் பொய்யாகிப் போம். (30)

தன்னை யளித்தாள் தமையன் மனைகுருவின்
பன்னி அரசன் பயில்தேவி — தன்மனையைப்
பெற்றாள் இவர்ஐவர் பேசில்எவ ருக்கும்
நற்றாய ரென்றே நவில். (31)

உற்றதொழில் செய்வோர்க் குறுபஞ்சம் இல்லையாம்
பற்றுசெபத் தோர்க்கில்லை பாவங்கள் — முற்றும்
மவுனத்தோர்க் கில்லை வருகலகம் துஞ்சாப்
பவனத்தோர்க் கில்லை பயம். (32)

தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் என்றிவரோ
டின்புறத்தான் உண்டல் இனிதாமே — அன்புறவே
தக்கவரை யின்றித் தனித்துண்டல் தான்கவர்மீன்
கொக்கருந்தல் என்றே குறி. (33)

மனம்வேறு சொல்வேறு மன்னு தொழில்வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும் — அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும் ஒன்றே
கனமொன்று மேலவர்தங் கண். (34)

நிந்தையிலாத் தூயவரும் நிந்தையரைச் சேரில் அவர்
நிந்தையது தம்மிடத்தே நிற்குமே — நிந்தைமிகு
தாலநிழற் கீழிருந்தான் றன்பால் அருந்திடினும்
பாலதெனச் சொல்லுவரோ பார். (35)

கல்லார் பலர்கூடிக் காதலித்து வாழ்கினும்நூல்
வல்லான் ஒருவனையே மானுவரோ — அல்ஆரும்
எண்ணிலா வான்மீன் இலகிடினும் வானகத்தோர்
வெண்ணிலா வாமோ விளம்பு. (36)

நன்னெறி

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும் — பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். (37)

கடலே யனையம்யாம் கல்வியால் என்னும்
அடலே றனையசெருக் காழ்த்தி — விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும். (38)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினம்காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க — வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. (39)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் — திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்கும்மேல் நின்று. (40)

இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே — பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர்வரவாற் பொங்கும் கடல். (41)

பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க — தெரிஇழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (42)

எழுத்தறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்தறிவார்க் காணின் இலையாம் — எழுத்தறிவார்
ஆயுங் கடவுள் அவிர்சடைமுன் கண்டளவில்
வீயும் சுரநீர் மிகை. (43)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினும்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே — வண்டுமலர்ச்
சேக்கை விரும்பும் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. (44)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம்செய்வர் — அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. (45)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவர் — நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது. (46)

தக்கார்க்கே ஈவர் தகார்க்களிப்பார் இல்என்று
மிக்கார்க் குதவார் விழுமியோர் — எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். (47)

பொன்அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார் — மின்னும்அணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னே அதுபுனையாக்
காணுங்கண் ஒக்குமோ காண். (48)

நீதிநெறி விளக்கம்

அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்இசையும் நாட்டும் — உறுங்கவல்ஒன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை. (49)

வருந்தித்தாம் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல் — கருந்தனம்
கைத்தலத்த வுய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்
கெய்த்துப் பொருள்செய் திடல். (50)

கற்றோர்க்குக் கல்வி நலனே கலன்அல்லால்
மற்றோர் அணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகுசெய் வார். (51)

முற்று முணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க — சிற்றுளியால்
கல்லும் தகரும் தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்தி னால். (52)

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெல்லாம்
எற்றே இவர்க்குநாம் என்று. (53)

ஆக்கம் பெரியார் சிறியா ரிடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப — தூக்கின்
மெலியது மேன்மேல் எழச்செல்லச் செல்ல
வலிதன்றே தாழும் துலைக்கு. (54)

பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
மறவாமே நோற்பதொன் றுண்டு — பிறர்பிறர்
சீரெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காத்து
யார்யார்க்கும் தாழ்ச்சி சொலல். (55)

கண்ணோக் கரும்பா நகைமுகமே நாண்மலரா
இன்மொழியின் வாய்மையே தீங்காயா — வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு. (56)

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பில்
தூங்குங் களிறோ துயருறா — ஆங்கதுகொண்
டூரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று (57)

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார். (58)

நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப்படார் — பல்பொறிய
செங்கட் புலியே றறப்பசித்தும் தின்னுவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ். (59)

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கும் உளன்ஒருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு. (60)

திருக்குறள்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. (61)

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். (62)

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (63)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (64)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர். (65)

புறந்தூய்மை நீரால் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். (66)

தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (67)

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. (68)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (69)

குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல். (70)

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (71)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்இழுக்குப் பட்டு. (72)

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேர்அறி வாளன் திரு. (73)

தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று. (74)

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல். (75)

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்என்னும் சொல். (76)

அவ்வையார்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்பும் தயையும்
கொடையும் பிறவிக் குணம். (77)

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை
அதனினும் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினும் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினும் கொடிது
இன்புற அவர்கையில் உண்பது தானே. (78)

இனியது கேட்கில் தனிநெடு வேலோய்
இனிது இனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்

அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளோரைக்
கனவினும் நனவினும் காண்பது தானே. (79)

அரியது கேட்கின் வரிவடி வேலோய்
அரிதரிது மானுட ராதல் அரிது
மானுட ராயினும் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயத்த காலையும்
தானமும் தவமும் தான்செயல் அரிது
தானமும் தவமும் தான்செய்வ ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே. (80)

தாயோ டறுசுவைபோம் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் — ஆயவாழ்
வுற்றா ருடன்போம் உடற்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம். (81)

திருவேங்கட சதகம்

புருஷராய்ப் பிறந்தோர் பெறுபயன்

புருஷராய்ச் சனனம தெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை அறிவதொன்று
பூமியொடு மிக்கதன வானுவ தொன்றலது
பூவலஞ் செய்வதொன்று
தருமவான் ஒன்றுமிகு கீர்த்திமான் ஒன்றுநற்
சற்குண விவேகிஒன்று
சகலரும் புகழ்கின்ற வித்துவான் ஒன்றரண
சங்க்ராம வீரன்ஒன்று

கருணைசேர் இந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியில் ஏன்படைத்தாய்
கருதிதா யுதாமும் பார்க்கின்ற பேர்கள்இரு
கண்களும் செய்தவினையோ
மருவுலா வியதுளப் மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (82)

இச் செய்கையோர்க்கு இச் சிறப்புப்பெயர்

சரண்என் றடைந்தவர் தமக்குவரு வினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு
தன்னுடைய செய்கைபோல் எவரையும் பார்க்கின்ற
தகைமையோன் தெய்வபுருஷன்
திருணமெனி னும்பிறர் பொருட்காசை யில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராத வினைவரினும் அற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருவிலாத் தந்தைதா யென்னினுங் கண்டபடி
புகலுவோன் புருஷாதகம்
போற்றுமவர் மனதிற் குறிப்பறிந் துதவுவோன்
புருஷநா யகமென்பர்காண்
மரபெலாம் இப்படிப் புகழ்ந்தகுண சேகரன்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (83)

பௌராணிகர் முதலியோர் சிறப்பு

ஆருக்கும் ஆனந்த மாகவே பொருள்சொல்லு
மவனே புராணநிபுணன்
அங்கமொடு கிரகநிலை கணிதமுந் தெரிகுவோன்
அருள்புரோ கிதபூசுரன்
சீருற்ற சபையெலாம் மெச்சப்ர சங்கமுறை
செப்புமவ னேவித்துவான்
செய்யுமந் திரயந்த்ர தந்த்ரமொடு மிக்கசுப
சீலனே மந்த்ரவாதி
ஏருற்ற கல்விகுண மேன்மைபொறை போதங்கள்
இசையுமவன் ஆசாரியன்
என்றும்அவர் சொற்படி நடந்துபய பத்தியோ
டிருக்குமவ னேசீடனும்
பாருக்கு வேதாந்த வாசனே நேசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (84)

நற்புதல்வன் இயல்பு

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவரர்
அடைந்திடு வரந்தனைப்போல்
அடுத்தவர் தமைக்காத்து மிக்கமே வலர்தமை
அடக்கும்உன் சக்கரம்போல்
பெரியோர் இருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசும்ப்ர சங்கமதுபோல்
பேருலக மெய்க்கவரு மனுநீதி முடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்திபோல்

ஒருகோடி நட்சத்தி ரங்களுட னடுவே
உதித்தசந்த் ரோதயம்போல்
உபயகுல சுத்தனும் பகிரதன் போலவே
ஒருபிள்ளை போதும்அவனுல்
மரபெலாம் நன்மையே அடையுமென் பார்கள்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை அலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. (85)

பஞ்சதந்திரப் பாடற் கதை

பூனைக் கிடங்கொடுத்துக் கழுகிறந்தது

திரைகெழு கங்கா தீரத்
திரிகூட மலைப்பால் இத்திப்
பருமரப் பொந்திற் கண்ணும்
பைத்தகூர் நகமும் இல்லா
ஒருகிழக் கழுகு மற்றைப்
பறவைகள் உணவு நல்க
மருவுநாள் பார்ப்பை உண்பான்
மார்ச்சாலம் வந்த தாங்கே. (86)

அதைச்சிறு பார்ப்பெ லாம்கண்
டஞ்சியே இரைதல் கேட்டுப்
பதைப்புறு கழுகு நீரென்
பயமுறு கின்றீர் என்ன
இதற்குளே பூனை உய்வ
தெண்ணிஅக் கழுகின் பாற்போய்
விதிர்ப்பொடு வணங்க நீயார்
விளம்பெனப் பூனை கூறும். (87)

எனதுபெயர் நெடுஞ்செவியன்
எனக்கழுகு நீஇவண்விட்
டெனதிடத்திற் கோடிலையேற்
சாவாய்என் றுரைத்திடலும்
நினதிடத்தில் வரும்என்றன்
வரலாற்றை நீகேட்டுச்
சினவுகினும் நன்றென்னச்
செப்புமால் அப்பூனை. (88)

பேதமாம் சாதியினுற்
பிராணிகளைக் கொல்லுவதும்
நீதியால் உபசாரம்
நிகழ்த்துவதும் நன்றன்றால்
ஆதலால் அவன்வன்றன்
ஆசாரந் தனைக்கண்டே
யாதுசெயத் தக்கதோ
அதுசெய்தல் இயல்பென்ன. (89)

ஆக்கமிகும் கழுகரசன்
அதைக்கேட்டிப் பூனையினை
நோக்கிஆ னல்நீஇங்
குற்றபடி யுவல்என்னத்
தேக்குபுனற் கங்கைநதி
தீரத்திற் றினந்தோறும்
ஆக்கைஅமிழ்ந் திடமூழ்கிச்
சாந்திரா யணம்ஆற்றி. (90)

தங்குற்றேன் நீமிகவும்
தருமவான் எனக்கேட்டே
இங்குற்றேன் வன்என்னில்
வயதுமுதிர் இயற்புலவர்

ஏங்குற்றார் எனவினவி
எய்திஅறம் கேட்டிடுதல்
பொங்குற்ற மரபென்று
புகலுவர்எந் நூலோரும். (91)

அறம்விடுத்திட் டெனைக்கொல்ல
அகந்துணிந்தாய் இல்லறத்தின்
திறமடுத்தோர் நடைநின்போற்
கண்டதிலை தெவ்வரும்தம்
புறமடுத்து வந்தவர்க்குப்
புரிந்திடுவர் உபசாரம்
மறமடுத்து வெட்டுகின்ற
வருக்கும்நிழல் செயும்மரமே. (92)

அதிதிஎவன் பால்எய்தி
முகம்வாடு மோஅவன்றன்
பதிதருபுண் ணியம்கொண்டு
பாவத்தை அவற்கீவான்
மதிகொடிய சண்டாளன்
மனைக்கண்ணும் கதிர்எறிப்பான்
புதியர்எவர் வந்திடினும்
பூசிப்பார் பெரியோரே. (93)

என்றிசைப்பக் கழுகதைக்கேட்
டியம்பும்இறைச் சிகள்அருந்திக்
கொன்றுழல்வ துமதுகுலக்
குணமெனமுன் குறித்ததென
நின்றவன்மற் றதைக்கேட்ட
நெடுஞ்செவியன் தரைதொட்டு
நன்றுசிவ சிவஎன்று
நற்கரத்தாற் செவிபொத்தி. (94)

தருமநூல் பலதெரிந்து
சார்ந்துவயி ராக்கியந்திக்
கருமமெலாம் நீக்கினென்யான்
கடுங்கொலையே பாதகத்திற்
பெரிதாகும் அதுபுரியின்
நரகடைவர் பெருங்கானின்
மருவுபலா திகள்உண்பார்
மருவுவரோ பாவம்என. (95)

கடுங்கழுகு தெளியுமா
றிவ்வாறு கட்டுரைத்து
நெடுஞ்செவியன் எனும்பூனை
நிலைத்ததன்வீ டுற்றதன்பின்
மடம்படுபார்ப் பிணைஉண்டு
வைகுதலும் பறவையெலாம்
ஒடுங்குபறழ் காணுமல்
தேடலறிந் தோடியதே. (96)

புள்ளுகள்அக் கழுகிருக்கும்
பொந்தடைந்து பார்த்திடலும்
வெள்ளெலும்பும் சிறகுகளும்
விழுந்துறக்கண் டிதுகொன்ற
தெள்ளலில்நம் பார்ப்பைஎனக்
கொன்றதால் அதைஇதனல்
உள்ளகுணம் தெரியாமல்
இடங்கொடார் ஒருவருக்கும். (97)

தூங்கு பழிவாங்கிய கதை

தவமிகும் அயோத்தி ஆளும்
சந்திர சேனன் தன்செய்
கவிகளின் ஆடல் காணும்
கருத்தறிந் தொருசா லைக்கண்

சவிபெறு குரங்க னேகந்
　　தான்வளர்த் திடும்அந் நாளில்
புவிபுகழ் அரசன் ஏவல்
　　புரிபவர் சண்டை யிட்டார். (98)

ஒருகுரங் கதுகேட் டுத்தன்
　　உறவினர்க் குரைக்கும் இப்போர்
பெருகுறிற் றீதாம் மற்றோர்
　　வனத்தில்நாம் பெயர்வோம் என்ன
உரைசெயக் கிழம்நின் சொற்கேட்
　　டுண்பதை அரோமென் றேவா
னரமெலாம் இகழ்ந்து பேச
　　நடுங்கிஅங் கவரை விட்டே (99)

தன்குடும் பத்தி னோடோர்
　　கானிடைச் சார்ந்த தப்பால்
பின்பொரு நாள்அச் சண்டை
　　பெரிதுற அவரி லேஓர்
வன்பினன் கொள்ளிக் கட்டை
　　மற்றவன் மேலே வீச
முன்புறு குதிரைச் சாலை
　　மேலது மூண்ட தன்றே. (100)

சாலையும் எரிய வாசி
　　தாம்சில இறந்த எண்ணில்
கோலவெம் புரவி தீயிற்
　　கொண்டன காயம் மன்னன்
பால்அடைந் ததனைக் காப்போர்
　　பகர்தலும் அந்நோய் தீர்க்கும்
சிலனை அழைத்து மாக்கள்
　　தீயினோய் நீக்கு கென்றான். (101)

மருத்துவன் குரங்கு நெய்யா
லன்றிநோய் மாயா தென்றான்
செருத்தொழில் இறைவன் சாலை
சேர்ந்துள குரங்கை யெல்லாம்
வருத்திஅந் நெய்யைக் கொண்டு
வாபிநோய் வாசி யாக்கென்
றுரைத்தனன் அவ்வா றேநோ
யொழித்தனர் மருத்து நூலோர். ()

இப்பழி இறையி டத்தே
வாங்குவேன் என்று முன்போய்த்
தப்பிய கிழக்கு ரங்கு
தன்மனம் பதைத்தே எண்ணி
ஒப்பிலாப் பெருங்கா னத்தில்
ஒருகுளம் இருக்கக் கண்டு
வெப்பறு பேய்ஒன் றிங்கு
மேவவே வேண்டும் என்று. (103)

எண்ணிஅக் குளத்திற் கஞ்சத்
தாளினல் இருநீர் உண்ண
நண்ணிய பேய்கண் டங்கு
நணுகிநின் பெருமை கண்டுன்
கண்ணெதிர்ப் பட்டேன் என்று
கழுத்துறு மாலை தன்னைத்
துண்ணென எடுத்து நல்க
வாங்கியே சொலும் குரங்கே: (104)

எவ்வள விந்த நீரில்
உனக்குள வலிமை யென்னச்
செவ்வியோய் இந்த நீரில்
ஆயிரம் பேர்சேர்ந் தாலும்

கைவலித் துண்டற் கான
    சத்திஎன் கண்டுண் டென்ன
இவ்விடம் புசிப்பு னக்கே
    யான்கொடு வருவன் என்றே. (105)

மாலையைக் கழுத்திற் பூண்டு
    வானரம் அகன்று வேந்தன்
பால்அடைந் திடஅ வன்றான்
    பார்த்திந்த மணியின் மாலை
சிலனே எங்குச் சம்பா
    தித்தனை எனக்கு ரங்கு
கோலம்ஆர் ஒருகா னத்திற்
    குளந்தான்ஒன் றுளது மன்னா. (106)

அக்குளந் தன்னிற் காலை
    அடைந்துமுன் குதிப்போர்க் கெல்லாம்
இக்கதிர் மணிகள் எய்தும்
    எனச்சொல யானும் எய்தித்
திக்கொளி விரிக்கும் சேர்திச்
    செழுமணி பெறுவேன் என்று
புக்கஅக் குரங்கி னோடும்
    போயினன் சேனை சூழ. (107)

போனபின் இதுவே காலம்
    புகுந்தநின் சேனை யெல்லாம்
கான்அவிர் மலர்த்த டத்திற்
    களிப்பொடு குதித்துத் தங்கட்
கானநன் மணிகள் கொண்ட
    பின்னரே அரச நீயும்
நானும்ஒண் மணிகள் கொள்வேம்
    என்றதந் நாகந் தானே. (108)

அப்படி யாக என்றே
அரசனும் சேனை யோரைக்
குப்புறு கென்ன ஓதக்
குதித்தலும் அவரைப் பற்றித்
துப்புறு பூதந் தானும்
தொடர்ந்திழுத் துண்ட தங்கே
தப்புறு வேந்தன் றானுந்
தடத்திடைக் காத்தி ருந்தான். (109)

நெடும்பொழு தங்குக் காத்து
நீரிடைக் குதித்த சேனை
அடங்கலும் வராமை கண்டே
அரசன்அக் குரங்கை நோக்கித்
தடந்தனிற் குதித்த சேனை
சார்ந்தில தென்னே என்றான்
நடந்தொரு மாத்தின் கொம்பின்
நாகம்முன் ஏறிச் சொல்லும். (110)

கொழிபுகழ் வேந்த னேஎம்
குலத்தையெல் லாம்நீ கொன்ற
பழிதனை வாங்க வந்தேன்
முடித்தனன் பண்டு நின்சோ
றழிபசிக் குண்டே னாத
லால்உனை விடுத்தேன் என்று
மொழிதர இரங்கி வேந்தன்
முந்துதன் நகர்புக் கானே. (111)

Printed at the "Aurora Press," Madras — 1925.